

# நிரந்தரமாகும் இடைத்தங்கல்



பெப்ரவரி 13 - பெப்ரவரி 19, 2011 | February 13 - February 19, 2011 | பக்கங்கள் - 28 | 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்


# 2012இல் உலகம் அழியுமா?

உலகக் கிண்ண சிறப்புப் பக்கங்கள்

# மரணம் சாய்ந்த இரவு



**2009** இன் முதல் மூன்று மாதங்களுக்குள் நகர்வதற்குப் பிடிவாதம் பிடித்த என் ஒரு நாள். இல்லை. மன்னிக்கவும். என் ஒரு நூற்றாண்டு. நான் அப்போது ஓர் உயர் கல்வி நிலையத்தில் படித்துக் கொண்டிருந்தேன். அதனோடு இணைந்த தங்குமிடத்தில் எனக்கும் ஒரு இருப்பிடம் தரப்பட்டிருந்தது. அதற்குள் ஒதுங்கிக்கொள்வேன். அல்லது ஒளித்துக் கொண்டேன்.

அங்கிருந்த எல்லோருக்குமே அதிகமான நாட்களில் இரவு பகல் இருப்பதில்லை. அப்படியொரு நிழல் இருப்பதையே மறந்து போயிருந்தோம். கைத் தொலைபேசிகளிலும் கைக்கடிகாரங்களிலும் விழும் AM.PM.கள் நமக்கு வெறுமையாகிக் கொண்டிருக்கின்றன என் பதைபுணர்த்தும்.

கடற்கிராமம் ஒன்றில் அடைத்துவைத்து எரியூட்டப்பட்ட நான்கு லட்சம் குழந்தைகளைப் பற்றிய கதைகளே எங்களைப் பங்கு போட்டுக்கொள்ளும். அந்த நிச்சயிக்கப்பட்ட பலி ஆடுகளுக்குள் எங்கள் அனைவரினதும் அம்மா, அப்பா, தம்பி, அக்கா, அண்ணா, தங்கைச்சி என எல்லா உறவுகளும் இருந்தனர். நம் ஒவ்வொரு நாள் விடியலும் அவர்களின் மரணங்களை, காயப்படுத்தல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே தொடங்கும்.

பல நாள்கள் துவைக்காத, நாற்றமடிக்கும் உடைகள் விடியும் முன்பே என்னை ஓட்டிக்கொள்ளும். பெரும்பாலும் காற்றுப்போய்க் கிடக்கும் என் சைக்கிள் எங்காவது ஒரு சைக்கிள் கடையில் தேடிப் பிடித்து தன் வயிற்றை நிரப்பிவிடும். அப்போது எனக்கு வயிறே இருப்பதில்லை. நான் படித்த கட்டடக் காட்டுக்குள் எங்களுக்காக எழுந்திருந்த கற்சிவனிடம் அடுத்ததாக ஒவ்வொரு நாளும் தஞ்சமடைவேன். "கடவுளே! என்ர அம்மா, அப்பா, அக்கா, தம்பி ஆக்களுக்கு எதுவுமே நடக்கக்கூடாது, இன்டைக்கு மட்டும்" கோயில் வெளிப் படிகளில் இருந்து வேண்டத் தொடங்கி ஒரு மணிநேரத்துக்குப் பின்பே சிவன் தன் சுரங்கக் கதவுகளைத் திறப்பார். பெரும் துணோடு ஒட்டியிருந்து என் வழமையான வழிபாட்டை பாடமாக்கத் தொடங்குவேன்.

> **நான் தங்குமிடம் திரும்புவேன். எங்கள் எல்லோருக்குமாக ஒரு ரீ.வீப் பெட்டி 24 மணிநேரமும் ஓடிக்கொண்டிருக்கும். அந்த நாட்களில் அதற்கு அறுபது சனல்கள் இருந்தும் ஒரு சனல் மட்டுமே இடையறாது ஓடிக்கொண்டிருக்கும்.**

ஒருநாள் எனக்கு முன்னரே ஒரு வயதானவள் என்னிடத்தைப் பிடித்துக் கொண்டிருந்தாள். மூடிக் கிடந்த அவளின் கண்களில் பெருகிய கண்ணீர் நனைத்திருந்தது படிகளை. அவள் மனதைத் தொட்டேன். அழுகையில் பேசத்தொடங்கினாள். இரண்டு நாள்கள் முன் போராளி மகன்கள் சாவடைந்து போயினர். முன்பொரு காலத்தில் இங்கே படித்தனராம். வீட்டில் அழுதால் பக்கத்து வீட்டுக்காரன் காட்டிக்கொடுப்பானாம்.

சிவன் இரும்புக் கம்பிக் கதவுகளுக்கு உள்ளிருந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

கோயிலில் ஐயர் கொஞ்சம் பிரசாதம் தருவார். என்னை வெளியே போ என்று அவர்களால் வார்த்தைகளால் சொல்ல முடிவதில்லை. சனசமூக நிலையங்கள் என் அடுத்த இலக்காய் இருக்கும். கடவுளே! என் உறவுகள் யாரைப்பற்றிய படமோ பெயரோ பத்திரிகைகளில் வந்திருக்கக் கூடாது. பாடமாக்கிக் கொண்டே சனசமூக நிலையங்களைத் தொட்டு நிற்பேன். அங்கு காட்சிப் படுத்தப்பட்டிருக்கும் உதயன், வலம்புரி, தினக்குரல் பத்திரிகைகள் அன்றைதினம் அதிகமானோரால் கற்பழிக்கப்பட்டிருக்கும். நீண்ட நேர காத்திருப்பின் பின் ஏதாவது ஒரு பத்திரிகையில் ஒரு துண்டு கிடைக்கும். பெரும்பாலும் அதில் தொடர்ச்சிச் செய்திதான் இருக்கும். அதில் என் வேண்டுதலுக்குரியவர்களின் முதல் எழுத்தில் தொடங்கும் பெயர்கள் என் பார்வைக்கு விரி மையம் கொள்ளும். ஒவ்வொரு பத்திரிகைத் துண்டையும் முடிக்கும்போதும் 'கடவுளே' தான் முன்நிற்பார். எல்லாப் பத்திரிகைகளும் முன் பக்கம், நடுப்பக்கம், பின் பக்கம் என பெரும் பகுதிகளை தலையற்ற குழந்தைகளை முண்டங்களாலும், எரிந்து கருகிய உடல் எச்சங்களாலும் இறந்த தாயின் மார்பில் பால் குடிக்கும் குழந்தையின் முகத்தாலும் அடுக்கப்பட்ட பிணக்குவியல்களாலும் தேங்கிக் கிடக்கும் இரத்தக்கடல்களாலும் பக்கம் பக்கமாக நிரப்பியிருக்கும்.

போர் தின்றவர்களின் பெயர்களின் பட்டியலையும், காயப்பட்டுக் கப்பலேறியவர்களின் பட்டியலையும் கொண்டு பக்கம் நிரப்பியிருப்பர். அந்த நாட்களில் யாருமே செய்திகளை வாசிப்பதில்லை. மரணத்தை வாசிப்பதுதான் பொழுதுபோக்காக இருந்தது. சிலருக்கு அதிர்ச்சிச் செய்தி அதில் இருக்கும். அந்த இடத்தில் கிடந்து குமுறி அழுவர். ஆனால் கண்ணீர் கக்குவதில்லை. அது காட்டிக் கொடுத்துவிடும்.

இணையத்தளங்கள் உடனுக்குடன் மரணங்களை நிழல்பரப்பிக்கொண்டிருக்கும். எமக்கு இலவச சலுகையில் இணையத்தளச் சேவை கிடைத்ததால் அதற்குள்ளேயே என்னைத் தொலைத்துக் கிடப்பேன். எனக்கு இலக்கணம் சொல்லித்தந்த குணலட்சுமி ரீச்சர், ஐந்தாம் வகுப்புவரை என்னோடு படித்த பாபு எல்லாரும் ஒருநாள் சடலமாக அதில் வந்திருக்கின்றனர். அதிகமாகத் தெரிந்த முகங்கள் படமாக்கப்பட்டிருக்கும். பிணங்களாகப் கிடக்கும்.

நெருக்கமான அந்த வர்ண ஒலிக்கதிர் வீச்சு என் எல்லா நினைவுகளையும் இரத்த நிறமாக்கும். இரத்த வாசனை வீசச் செய்யும். எப்படிப் பசிக்கும்?.

நான் தங்குமிடம் திரும்புவேன். எங்கள் எல்லாருக்குமாக ஒரு ரீ.விப் பெட்டி 24 மணிநேரமும் ஓடிக்கொண்டிருக்கும். அந்த நாட்களில் அதற்கு அறுபது சனல்கள் இருந்தும் ஒரு சனல் மட்டுமே இடையறாது ஓடிக்கொண்டிருக்கும். ஒரு ஆயுதம் தாங்கிய பச்சை மனிதன் யுத்தம் மேயும் இடங்களைப் பற்றியும் இரத்தம் வழியும் பதுங்குழிகள் பற்றியும் தமது வீரதீரங்கள் பற்றியும் நேரடியாக வர்ணித்துக் கொண்டிருப்பார். எம்மோடு தங்கி இருந்த சிலருக்கு அதைப் பார்த்து சந்தோசப்படுவதிலும் எம்மைப் பார்த்துக் கேலி செய்வதிலும் அலாதிப் பிரியம். ஏனெனில் அவர்கள் 'அவர்கள்'.

நான் அறைக்குத் திரும்பிக் கதவை உட்பக்கமாகப் பூட்டிக் கொண்டு அழத் தொடங்கிவிடுவேன். எங்களது கட்டடத்தை இருள் போர்த்தத் தொடங்கும். ஒவ்வொரு நண்பனாக படியேறிவரும் காலடிச் சத்தம் மட்டும் கேட்கும். இருட்டில் மௌன உருவங்கள் அசையும். சில நாட்களில் காலடிச்சத்தம் அலங்கோலமாய்க் கேட்டால் காலடிக்குரியவரின் உறவினர் யாரோ பத்திரிகைச் செய்தியில் வந்துவிட்டனர் என்பது அர்த்தம். அவனில் இருந்து வீசும் சாராய வெடில் அவனைத் தாக்கிய துயரத்தை விட மோசமாய் நாறும். புலம்பத் தொடங்குவான். ஒவ்வொரு அறை அறையாக.... இரண்டு மணிநேரம் மின்சாரம் தடைப்படும். அந்த நேரங்களில் மூளை விறைப்புக்காக நண்பர்களின் விரல் இடுக்குகளில் இருக்கும் சிகரட் நம் முகங்கள் தெரியும் அளவுக் கான வெளிச்சத்தைத் தரும். அந்த இருள் வெளிச்சத்தில் அன்றைய தினம் அவரவர் அறிந்த எல்லா மரண ரகசியங்களையும் பரகசியப்படுத்திக் கொள்வோம். மீண்டும் மின்சாரம் வரும்போது சிலர் கவலையோடு சரிந்து நித்திரையாய் இருப்பர். சிலர் புலம்பிக் கொண்டிருப்பர். சிலரது கண்களில் கண்ணீர் வழிந்து காய்ந்து கிடக்கும். ஆங்காங்கே கிடக்கும் "அன்றி" வீட்டுச் சாப்பாட்டுப் பொதிகளை எறும்புகள் இழுத்துப்போகும். நாம் இரவுகளை எண்ணிக்கொண்டே இருந்த இடங்களிலேயே இறந்து கிடப்போம் மறுநாள் வரை....

**ஜெரா**



**பெண்கள் மீது இளைஞர்களின் வேட்கை பிரயோகிக்கப்பட்டு வருகிறது. எந்தப் பெண்களும் சுதந்திரமாய் குளிக்கக் கூட முடிவதில்லை. எங்காவது போன் கமறாக்கள் அதைப்பார்த்துக் கொண்டிருக்கும்**



# நிரந்தரமாகும் இடைத்தங்கல்

வன்னி இறுதிக்கட்ட யுத்தத்தின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட இடைத்தங்கல் வாழ்க்கை முறையிலிருந்து பெரும்பாலான மக்கள் ஊர் திரும்பிவிட்ட நிலையில் முகாம்களில் எஞ்சியிருப்பவர்களின் கதை.

உள்நாட்டு யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்படும் மக்களுக்கு தற்காலிக தங்குமிடங்களாக அமைவதே இடைத்தங்கல் முகாம். இது நிரந்தரமான குடியிருப்புக்களாவதும் உண்டு. இலங்கையில் இதற்கு அதிகளவான உதாரணங்களுண்டு.

### தற்போது இடைத்தங்கல் முகாம்கள்

வன்னியில் இடம்பெற்ற மனிதாபிமான யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வாழ்வைத் தொலைத்தவர்களுக்கு உடனடியாக மறுவாழ்வு அளிப்பதற்காகவும், தற்காலிக பாதுகாப்பை வழங்கவும் உருவாக்கப்பட்டதே இடைத்தங்கல் அகதி முகாம்கள் ஆகும். வவுனியாவின் காட்டுப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இப் பெரும் குடியிருப்பு தொகுதிகள் கிட்டத்தட்ட 400,000 மக்களை உள்வாங்கியிருந்தது. குடியிருப்புப் பகுதிகளிலே நிலப்பரப்பு போதுமானதாக இல்லாத போதும் "எல்லோரும் சமாளித்தார்கள்."

தற்போது வன்னிப் பகுதியில் பெரும்பாலான இடங்களில் மீள் குடியேற்றம் நடைபெற்றிருப்பதால் அதிகளவான மக்கள் முகாமிலிருந்து விடுதலையாகி சொந்த இடங்களுக்கு திரும்பி இருக்கின்றனர். இப்போது முகாம்களில் எஞ்சியிருப்பது கிட்டத்தட்ட 20,000 மக்களே எனச் சொல்லப்படுகிறது. இறுதிக்கட்ட யுத்தம் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குட்பட்டவர்களே இவர்கள். இதற்குள் உடையார்கட்டு, சுதந்திரபுரம், வள்ளிபுனம், தேவிபுரம், கைவேலி, புதுக்குடியிருப்பு அதனை அண்டிய கிராமங்கள், இரணைப்பாலை, மாத்தளன், வலயன்மடம், முள்ளிவாய்க்கால் போன்ற இடங்களைச் சேர்ந்தவர்களே தொடர்ந்தும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது மீள் குடியேற்றம் மறுக்கப்பட்ட நிலையில் இருக்கும் 20,000 மேற்பட்ட மக்கள் எல்லா முகாம்களிலும் இருந்தும் ஒன்றாக்கப்பட்டு பிரதான இரண்டு இடைத்தங்கல் முகாம்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். "கவனிப்பதில் இலகு தன்மைக்காகவும்", மழை நேரத்தில் ஏற்படும் பாதிப்புக்களில் இருந்து பாதுகாக்கவும் எல்லா மக்களும் இரு பிரதான முகாம்களுக்குள்ளும் அடக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் இவையிரண்டு முகாம்களையும் தவிர ஏனையவையெல்லாம் வசதி குறைந்தவையாக காணப்பட்டதோடு தரப்பாள்களால் அமைக்கப்பட்ட குடில்களையும் கொண்டவை. ஆனால் இவை இரண்டிலும் உள்ள குடில்கள் கொஞ்சம் வசதியாக தகரத்தால் அமைக்கப்பட்டவை எனவும் சொல்லப்பட்டது.

### நிவாரணப் பணிகள்


மழையோடு மழையாக அவசர நிலையில் இங்கு மாற்றப்பட்ட மக்கள் உதவியாகக் கிடைக்கும் நிவாரணங்களில் இருந்து கைவிடப்பட்ட நிலையிலேயே இருக்கின்றனர். முன்பு இம் மக்களைக் கவனித்து வந்த அரச சார்பற்ற சர்வதேச தொண்டு நிறுவனங்களின் பணிகள் முடிவடைந்து விட்ட நிலையில் உதவிகளுக்காகப் பல்வேறு இன்னல்களை அன்றாடம் எதிர்கொள்ளுகின்றனர். மக்களின் நலன் கருதி அந்நிறுவனங்கள் புதிய திட்டங்களை அமுல்படுத்துவதற்கு கோரி இருந்த போதும் அரச தரப்பிலிருந்து அனுமதி கிடைக்காததால் வெளியேறி விட்டனர். இடையிடையே கிடைக்கும் அவசர நிவாரணப் பொருட்களும் உரிய முறையில் எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கப்படுவதில்லை. அண்மையில் "பொதி சாமான்" எனப்படும் வாழ்வாதாரப் பொருட்கள் அனைவருக்கும் வழங்குவதாக தீர்மானிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்ட போதிலும் இது வரை இரண்டு வலயங்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன. ஏனையோருக்குப் பின்னர் வழங்கப்படும் என கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக சொல்லப்பட்டு வருகிறதே தவிர இன்னும் வழங்கப்படவில்லை. (19 ஆம் பக்கம் பார்க்க)

தம்பி





# பல்சுவை



## புத்தக வித்தை

புத்தக ஒற்றைகளில் எழுத்துக்கள், சொற்கள் போன்றவை காணப்படுவதுதான் வழக்கம். ஆனால் புத்தக ஒற்றைகளை மடித்து சொற்களை உருவாக்கியிருக்கிறார் அமெரிக்க நாட்டின் வளர்ந்து வரும் புத்தாக்க கலைஞர்களில் ஒருவரான isaac salazar. தனித் தனிச் சொற்கள் உருவாகக் கூடிய வகையில் புத்தக ஒற்றைகளை ஆங்கில எழுத்துகளாக மடித்து இருக்கின்றார்.









## ஆஹா ... இவர்களுக்குமா?





அமெரிக்காவில் உதயம் ஆகி உள்ளது கோழிகளைத் தங்க வைக்கும் ஹோட்டல். கோழிகள் தங்க என்று முதன் முதல் உலகில் அமைக்கப்பட்ட வித்தியாசமான ஹோட்டல் இது. மனிதர்களுக்குப் பதிலாகக் கோழிகள் தங்க வைக்கப்படுவது இதன் விசேடம். கோழிகளை வளர்ப்பவர்கள் வீட்டை விட்டுத் தூரச் செல்கின்றபோது கோழிகளை இங்கு பத்திரமாகத் தங்க வைத்து விட்டு செல்ல முடியும். கோழிகளுக்கு என்று விசேட அறைகள் அமைக்கப்பட்டு உள்ளன. கோழிகள் அமர்ந்து இருந்து சாப்பிட கதிரைகள் ஒழுங்கு பண்ணப்பட்டு உள்ளன. கோழிகளுக்குத் தேவையான உணவு, குடி பானங்கள் ஆகியனவும் தயாரிக்கப்பட்டு பரிமாறப்படுகின்றன.

## சூடு பிடிக்கும் பொம்மை விபசாரம்



ஜப்பானில் பொம்மைகள் விபசார நிலையங்கள் பிரபலம் ஆகி வருகின்றன. பெண்ணுடன் பாலுறவு கொள்வது போன்ற இன்பத்தை இயலாமை உடைய ஆண்கள் பெறுவதற்காக இந்நாட்டில் சுமார் 30 வருடங்களுக்கு முன்பாகவே செக்ஸ் பொம்மைகள் உருவாக்கப்பட்டன. ஆனால் பெண்களுடன் ஒன்றாக படுக்கையைப் பகிர வெட்கப்படுகின்ற ஆரோக்கியமான ஆண்களும் செக்ஸ் பொம்மைகளால் கால ஓட்டத்தில் ஈர்க்கப்பட்டனர். ஜப்பானில் பொம்மைகள் விபசார நிலையங்களுக்கு வருகை தரும் ஆண்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களைக் காட்டிலும் இப்பொம்மைகள் இவர்களின் மனங்களை வெல்கின்றனவாம்.






# காதலர் தினம் உருவானது எவ்வாறு?

வலண்டைன் என்ற பாதிரியார் கல்லால் அடிக்கப் பட்டு சித்திரைவதை செய்யப்பட்டு தண்டிக்கப் பட்டு தலை துண்டிக்கப்பட்ட நாள் கி.பி. 270ஆவது வருடம், பெப்ரவரி 14ஆம் திகதி. இந்தத் தினம் தான் காதலர் தினம் என்று காதலர்களால் கொண்டாடப்படுகிறது.

இது எவ்வாறு உருவானது?

கொடூரமாகவும் கோமாளித்தனமாகவும் ஆட்சி புரிந்த ரோமானியச் சக்கரவர்த்தி 2ஆம் கிளாடியின் முட்டாள் தனமான கட்டளைகளால் அவரை விட்டு விலகிப் போயினர் அவரது இராணுவ வீரர்கள். புதிய இராணுவ வீரர்களை அவரால் சேர்க்க முடியவில்லை. யாரும் முன் வந்து இராணுவத்தில் சேர மறுத்துவிட்டார்கள். அவரது அமைச்சுப் பரிவாரங்களும் வீரர்களைச் சேர்ப்பதற்கான ஆக்கபூர்வமான ஆலோசனைகள் எதையும் அவருக்குத் தெரிவிக்கவில்லை.

இதனால் எரிச்சல் உற்றார் கிளாடி.

தனது அந்தரங்க நாயகியுடன் சல்லாபமாக இருந்த நள்ளிரவொன்றில் எரிச்சல் உற்ற, புத்திக்கூர்மையற்ற ரோமானியச் சக்கரவர்த்தி கிளாடியின் மனதில் - திருமணமானவர்கள் தமது அன்பு மனைவியை விட்டு வர மனமில்லாமலும், திருமணமாகாதவர்கள் தமது காதலியை விட்டு வர மனமில்லாமலும் இருப்பதாலேயே இராணுவத்தில் சேரத் தயங்குகிறார்கள்.

இவர்களுக்கு எல்லாம் குடும்ப வாழ்க்கை என்ற ஒன்று இல்லாத பட்சத்தில் இவர்கள் மனம் வெறுத்து இராணுவத்தில் சேருவார்கள். போரிலும் மூர்க்கத் தனமாய் போரிடுவார்கள். எமக்கு வெற்றி எழிதில் கிடைக்கும் என்றதொரு முட்டாள் தனமான எண்ணம் தோன்றியது.

உடனேயே நள்ளிரவு என்றும் பாராமல் தன் அந்தரங்க அமைச்சரை அழைத்து "ரோமாபுரி நாட்டில் இனி யாருமே திருமணம் செய்யக்கூடாது.

ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்ட திருமணங்களும் ரத்துச் செய்யப்படவேண்டும்.

இந்த அரச கட்டளையை மீறுபவர்கள் யாராயினும் கைதுசெய்யப்பட்டு இருட்டுச் சிறையில் அடைக்கப் படுவார்கள். பின்னர் அறிவிக்கப்படும் ஒரு நாளில் பொது இடத்தில் வைத்து கல்லால் அடித்துத் தலை துண்டிக்கப்பட்டுக் கொல்லப்படுவார்கள்." என்ற அறிவிப்பை மக்களுக்குச் சொல்லும் படி பணித்தான். அரசனை மீற வழி தெரியாத அமைச்சர் அதை அறிவித்தார்.

இந்த அறிவிப்பைக் கேட்டு மக்கள் அதிர்ந்தார்கள். இருமனங்கள் இணைவதை அரசன் அறுத்தெறியத் துணிந்தபோது திருமணங்கள் கனவாகிப்போன சோகத்தில் ரோமாபுரி சோகக் கண்ணீரில் மிதந்தது.

அரசனின் இந்த முடிவு அநியாயம் என்று சொல்லிக் கொதித்தெழுந்த கிறிஸ்தவ பாதிரியார் வலண்டைன் அரச கட்டளையை மீறி இரகசியத் திருமணங்களைச்செய்து வைத்தார். இந்தச் செய்தி அரசனுக்கு எட்டியது. வாலண்டைன் கைதுசெய்யப்பட்டு இருட்டுச் சிறையில் அடைக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப் பட்டார்.

அவர் சிறை வைக்கப் பட்டிருந்த காலத்தில் சிறைக்காவல் தலைவனின்

கண் தெரியாத மகளான அஸ்டோரியசுக்கும் பாதிரியார் வாலண்டைனுக்கும் இடையில் காதல் என்னும் அன்பு பூத்தது. அஸ்டோரியஸ் பாதிரியாரை சிறையிலிருந்து மீட்க முயன்றாள். இதையறிந்த அரசன் அஸ்டோரியசை வீட்டுச் சிறையில் வைத்தான். கண்கள் கிடைத்துவிட்டது போன்ற மகிழ்ச்சியில் திளைத்திருந்த அஸ்டோரியஸ் கனவுகள் சிதைந்ததில் கலங்கினாள்.

ஆனால் வலண்டைனுக்கான மரணதண்டனையில் மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. அஸ்டோரியசுக்கு ஒரு காகித அட்டையை வரைந்து விட்டு தண்டனையை ஏற்க அவன் தயாரானான்.

வலண்டைன் கல்லால் அடிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுத் தலை துண்டிக்கப்பட்ட அந்த நேரத்தில் அந்தனை கட்டுக்காவல்களையும் மீறி வலண்டைனிடமிருந்து வந்த அந்த அட்டையின் வரிகளை தோழி வாசிக்க அஸ்டோரியாவின் கண்களிலிருந்து கண்ணீர்ப் பூக்கள் சொரிந்தன.

அந்தக் அட்டையிலிருந்த கவிதை வரிகள்

விழி இருந்தும்  
வழி இல்லாமல் - மன்னன்  
பழி தாங்கிப் போகிறேன்.  
விழி இழந்து - பார்க்க  
வழி இழந்தட நீ மன  
வலி தாங்காது கதறும்  
ஒலி கேட்டும், உனை மீட்க  
வழி தெரியாமல் மக்களுக்காக  
பலியாடாகப் போகிறேன் - நீ  
ஒளியாய் வாழ்! பிறருக்கு  
வழியாய் இரு!! சந்தோஷ  
ஒளி உன் கண்களில்  
மின்னும்!!

*- உன்னுடைய வலண்டைனிடமிருந்து! -*

அன்றிலிருந்து இன்று வரை நேசிப்பவர்களிடையே பரிமாறப்படும் வைரவரிகள் இவை. இதுவே முதல் வலண்டைன் மடல்.

அரச கட்டளையை மீறி மனங்களை இணைய வைத்துத் தன்னையே பலி கொடுத்த பாதிரியார் ரோம் மக்களின் மனங்களில் அழியாத இடத்தைப் பெற்றிருந்தார். ரோமானிய தேவாலயங்கள் ஐரோப்பியக் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் இந்தத் தினம் பாகான் (மதமற்றவன்) தினம் எனக்கொண்டாடப் பட்டது. ஏறக்குறைய 200 வருடங்களுக்குப் பின்னர் போப்பாண்டவர் ஒருவரால் வலண்டைன புனிதராக அறிவிக்கப்பட்டு வலண்டைன் தினம் உலகம் முழுவதும் கொண்டாடத் தலைப்பட்டது.

இதுவே காதலர்தினம்.

ஒருவர் இன்னொருவரால் காதலிக்கப்படும்போது அவர் படிப்பிலோ அல்லது கலையிலோ ஏன் போராட்டத்திலான தீர்க்கமான ஈடுபாட்டிலோ இன்னும் ஒருபடி மேலே சிறந்து விளங்குகிறார் என்பது இன்றைய ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்பு. இது அன்றைக்கே தெரிந்திருந்தால் அன்றைய ரோமானியச் சக்கரவர்த்தி வலண்டைனுக்கு இப்படியொரு கொடுமையைச் செய்திருக்கமாட்டார். ★★


**மலேசியா**

**தமிழ் பேசும் பெண்களுக்கு**

**ஓர் அரிய வாய்ப்பு**

**மலேசியாவில் உள்ள தமிழ் VIP வீடுகளுக்கு**

**தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை**

| | |
|---|---|
| மாதாந்த சம்பளம் | RM 850 |
| இலங்கைப் பெறுமதிக்கு | ரூபா. 28,000 |

* கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
* மெடிக்கல் (Medical) - இலவசம்
* இன்சூரன்ஸ் (Insurance) - இலவசம்
* விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
* தங்குமிடவசதி (Accomodation) - இலவசம்
* உணவு (Food) - இலவசம்
* 2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம்

முற்றும் இலவசம்

Labour Licence No. 2516

**GOODLINE MANPOWER SERVICES**

33/3, (3rd Floor), Symonds Road, Maradana, Colombo-10.

Tel : 011 3091521 Hotline : 077 3179592


**சுடர் ஒளி வாசகர்களுக்கு...**

சுடர் ஒளி வாரமலருக்கு தமது ஆக்கங்களை அனுப்பிவைக்க விரும்புவோர் கீழுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகுதியான ஆக்கங்கள் சுடர் ஒளி வாரமலரில் பிரசுரிக்கப்படும்.

30 ஆண்டுகளாக இந்த நாட்டில் தனிநாட்டுக்கான ஆயுதப் போராட்டம் நடந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் பெரும் இரத்தக் களரிக்கு மத்தியில் பேராயுதங்கள் கொண்டு அந்த ஆயுத விடுதலை முனைப்பு தோற்கடிக்கப்பட்டது.

இப்போது ஒரே நாடு; ஒரே கொடி; ஒரே மக்கள் என்ற குரல் உரத்து எழுப்பப்படுகின்றது. இலங்கையின் 63ஆவது சுதந்திர தினத்தில் உரையாற்றிய ஜனாதிபதியும் இதனைக் கூறினார்.

இந்த நாட்டின் எல்லா இனத்தவர்களும் ஒரே மக்களாக, ஏற்றத் தாழ்வற்றவர்களாக, சமநிலையில் வைத்து அரசால் நடத்தப்பட்டால் உண்மையில் இலங்கை ஆசியாவின் ஆச்சரியமான ஒரு நாடுதான். அப்படி இருப்பதற்குத்தான் எல்லா மக்களும் குறிப்பாக சிறுபான்மையினர் ஆசைப்படுகின்றனர். ஆனால், 'பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை' என்ற கதைதான் இங்கே மிஞ்சி இருக்கிறது. இதை ஒரே நாடு என்று ஏற்பதற்கு வடக்கு வாழ் தமிழர்கள் தயாராக இல்லை.

வடக்கில் தனியரசுக்கான போராட்டம் நடைபெற்றதுக்கும் இப்போதைக்கும் பெரிய வித்தியாசம் எதனையும் மக்களால் காணமுடியவில்லை. சிங்களவர்கள் வந்து போகிறார்கள், குண்டுகள் வெடித்து சதைகள் சிதறவில்லை என்பதற்கு மேல் வடக்கு, இலங்கையின் ஒரு மாகாணமாக இணைந்து விட்டது என்பதைத் தமிழ் மனதுகள் நம்ப ஆணித்தரமான ஆதாரங்கள் ஏதுமில்லை.

பதிலாக வடக்கு இன்னும் துண்டாடப்பட்டே

சுடர் ஒளி

13, பெப்ரவரி - 19, பெப்ரவரி, 2011

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு- 14. டெலிபோன்: 0115738005
பாக்ஸ்: 0115517944 - 5
E-mail: editorial@sudaroli.com

## வடக்கு இப்போதும் தனியானதுதான்

கிடக்கிறது என்று நம்புவதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன.

1. அண்மையில் நாட்டின் பல பகுதிகளை வெள்ளம் பாதித்தது. அரசு சிங்கள மக்களுக்கு செய்தது போன்ற உதவிகளை வடக்குக்கோ கிழக்குக்கோ செய்யவில்லை.

2. இராணுவத்தின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் யாழ்ப்பாணத்தில் கடந்த இரு மாதங்களில் அதிகளவு கொலைகளும் கொள்ளைகளும் இடம்பெற்றன. அதைத் தடுப்பதற்காக இப்போது இராணுவத்தினர் போர்க்கால நடைமுறைகளை மீண்டும் கொண்டு வந்திருக்கின்றனர்.

3. இந்த நாட்டின் எந்தப் பகுதிக்குள்ளும் எவரும் அனுமதி இன்றி நுழைய முடியும். ஆனால் வடக்கில் மட்டும் அப்படி நுழைய முடியாது. வடக்கையும் தெற்கையும் பிரிக்கும் எல்லையாக ஓமந்தை தொடர்ந்து நீடிக்கிறது.

5. விலைவாசி உயர்வால் மக்கள் பாதிக்கப்பட்டனர் என்று அனுதாபப்பட்ட அரசு, இராணுவத்தினரின் உதவியுடன் தெற்குக் கிராமங்களுக்கு மரக்கறிகளையும் தேங்காயையும் கொண்டு சென்று விற்றது. ஆனால், வடக்கில் உள்ள மக்கள் எத்தனை விலை கொடுத்தேனும் வாங்கி உண்ணும்படி நாதியற்று விடப்பட்டார்கள்.

6. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் பிடித்து வைக்கப்பட்டுள்ள நிலங்களில் கண்ணிவெடிகள் உள்ளதாகத் தெரிவித்து தமிழர்கள் அங்கு குடியமர அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஆனால், அதே உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் மக்கள் காணிகளில் தோட்டம் செய்கின்றனர் படையினர். விளைச்சல் விடுமுறையில் வீடு செல்லும் படையினருக்கு மட்டுமே கிடைக்கின்றன.

இந்தப் பட்டியல் இப்படியே இன்னும் நீண்டு கொண்டு போகும். தமிழ் மக்களும் இந்த நாட்டின் சம மதிப்புள்ள குடிமக்கள்தான் என்றும் கொழும்பில் உள்ளது தமது அரசுதான் என்றும் தமிழர்கள் எண்ண வைக்க இவை உதவா. பின்னர் எப்படி ஒரே நாடு; ஒரே மக்கள் என்பது சாத்தியமாகும். அது சாத்தியமாகாத வரையில் ஆசியாவின் அதிசயமும் சாத்தியமாகாது. பேசிக் கொண்டே இருப்பதால் மட்டும் எதையும் சாதித்துவிட முடியாது என்பதை அரசு புரிந்து கொள்ளவேண்டும். சொல்வதைச் செய்து காட்டும் திராணி அரசுக்கு வேண்டும்.

# வடக்கின் சீரழிந்த போக்குவரத்துப் பாதைகள்

**பா.தமிழ்மாறன்**

எந்தக் காலத்திலும் இல்லாத வகையில் இப்பொழுது வடக்கின் போக்குவரத்துக்கள் அதிகரித்து விட்டன. யாழ் கண்டி நெடுஞ்சாலை இதனால் எப்பொழுதும் வாகனங்கள் நிறைந்ததாகவே இருக்கிறது. அணியணியாய் வாகனங்கள் வருகின்றன. சுற்றுலாப் பிரயாணிகளின் வாகனங்களும் பேருந்துகளும் பார ஊர்திகளும் என்று ஒரே பயணமயமாக ஏ-9 பாதை இருக்கிறது. அண்மைய நாட்களில் இந்தப் பாதை போக்குவரத்தை அச்சுறுத்தும் வகையில் மிகவும் சிதைவடைந்த நிலையில் இருக்கின்றன.

யுத்தம் காரணமாக கடந்த பல வருடங்களாக பாதிப்புக்கு உள்ளான ஏ-9 பாதை அவ்வப்போது செப்பனிட்டு செப்பனிட்டு பாவிக்கப்பட்டு வந்தது. இப்பொழுது முழுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையில் அந்தப் பாதையால் செல்லும் மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகின்றார்கள். யுத்தம் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளுடன் அபிவிருத்தி செய்யப்படாத நிலையில் அவ்வப்பொழுது பூசி மெழுகப்பட்ட நிலையில் இருக்கிறது.


யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வரையான பாதைகளே இப்படிச் சிதைவடைந்து குன்றும் குழியுமாக இருக்கிறது. இதனால் வழமையாக எடுக்கும் போக்குவரத்து நேரத்தை விட மேலும் இரண்டு மணித்தியாலங்கள் அதிகமாகச் செலவாவதாக வாகனச் சாரதிகள் தெரிவிக்கின்றார்கள். இதனால் தமது சேவை பாதிக்கப்படுகிறது என்கிறார்கள் அவர்கள். இதனால் மக்களின் அன்றாட இயல்பான நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன என்பதுதான் முக்கியமான பிரச்சினை.

போக்குவரத்திற்காக மிக அதிகளவு நேரத்தை செலவிட வேண்டியிருக்கிறது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா போன்ற பகுதிகளில் உள்ள அலுவலகங்களில் வேலை செய்பவர்கள் இதனால் சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு சேவை காரணமாக பாடசாலை செல்லும் ஆசிரியர்கள் நாளாந்தம் பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். வன்னியில் தங்கி கல்வி கற்பிப்பதற்கான வசதிகள் இல்லாத நிலையில் தாம் நாள்தோறும் வதிவிடங்களுக்குத் திரும்புவதாகச் சொல்கிறார்கள்.

சாவகச்சேரி, கொடிகாமம், ஆனையிறவு, கிளிநொச்சி நகரப் பகுதி; முறிகண்டி போன்ற பல முக்கிய இடங்களில் முற்றாக பாதைகள் சிதைவடைந்துள்ளன. குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன. அத்தோடு பாதைகள் சிதைவடைந்த கிடங்குகளில் மழைநீர் தேங்கி நிற்கிறது. அண்மைய நாட்களில் பெய்த மழையுடன் இந்தப் பாதைகள் மேலும் சிதைவுகளுக்கு உள்ளாகி உள்ளன.

பல தடவைகள் யுத்தம் நடந்த பகுதிகளில் ஏற்பட்ட கிடங்குகள் தற்காலிகமாக மூடப்பட்டதால் அவை வீதிக்கு சமாந்தரமின்மையாகவும் உயர்ந்த திட்டுக்களாகவும் இருக்கின்றன. அவை தற்பொழுது பெருமளவில் சேதத்திற்கு உள்ளாகியுள்ளன. அவற்றில் வாகனங்கள் புதைந்தும் விடுகின்றன.

அண்மைய நாட்களில் இதனால் பல விபத்துக்கள் நிகழ்ந்து விட்டன. அண்மையில் கைதடியில் நடந்த விபத்து ஒன்றில் சுற்றுலாப் பேருந்து ஒன்று சேதங்களுக்கு உள்ளானது. அதிஷ்டவசமாக உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை. அதைப்போல ஆனையிறவில் நடந்த விபத்து ஒன்றில் வட இலங்கை போக்குவரத்துசபை பேருந்தின் முகப்புப் பக்கம் முற்றாகச் சேதமடைந்தது. அன்றும் அதிஷ்டவசமாகப் பயணிகளுக்கு உயிரிழப்புக்கள் ஏதுவும் ஏற்படவில்லை.




சீரழிந்த பாதைகளில் பேருந்துகளில் செல்லும் மக்கள் பெரும் அவதிகளுக்கு உள்ளாகின்றனர். பள்ளமும் திட்டியுமாக உள்ள வீதியில் பேருந்து துள்ளிக் கொண்டிருப்பதால் பிரயாணிகள் தூக்கித் தூக்கி வீசப்படுகின்றனர். இதனால் குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் காயங்களுக்கு உள்ளாகின்றனர். அவர்களின் உடல் நலம் பாதிக்கப்படுகின்றது.

யுத்தம் முடிந்து பாதை திறக்கப்பட்ட பின்னர் வாகனங்களின் வருகை மிகவும் அதிகரித்து விட்டன. அதிலும் பாரவூர்திகள் மிக அதிகமாக வருகின்றன. அதிகூடிய பாரங்களுடன் வரும் சில சீரற்ற பாதை காரணமாகப் பாரவூர்திகள் புதைந்து பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகின்றன. ஹைஏஸ், கார் போன்ற வாகனங்களும் சேதங்களுக்கு உள்ளாகின்றன.

ஒரு பயணி வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வந்து சேருவதற்கிடையில் நான்கு பேருந்துகளில் ஏறி வந்ததாகக் குறிப்பிட்டார். இந்தப் பாதைகள் இப்படி இருப்பதனால் வாகனங்கள் பழுதடைகின்றன. ரியூப் வெடித்து காற்றுப் போகிறது. வில்லுத் தகடு உடைந்து விடுகிறது. இவ்வித இடையூறுகளால் பல சேதங்களால் பயணங்கள் தாமதமாகின்றன.

யாழ்ப்பாணத்தின் உள்ளக பயணப் பாதைகளும் இவ்விதம் சீரழிந்த நிலையிலேயே இருக்கின்றன. தீவகத்திற்கான பிரதான போக்குவரத்துப் பாதையான பண்ணைப்பாலம் பாதை துண்டிக்கப்படும் அபாய நிலையில் இருந்தது. அந்தப் பாதையின் திருத்தப் பணிகள் இன்னும் முடிவுறாத நிலையில் உள்ளன. இதனால் ஆபத்துமிக்க நிலையில்தான் மக்கள் பயணிக்கிறார்கள். குன்றும் குழிகளுமாக உள்ளது அந்தப் பாதை.

வன்னியின் உள்ளக போக்குவரத்துப் பாதைகளின் நிலமையும் கடும் மோசமாக இருக்கிறது. பெருமளவான பாதைகள் கிரவல் மண் பாதைகளாக உள்ளன. மழை காரணமாக வீதியில் உள்ள கிடங்குகளில் வெள்ளம் தேங்கி நிற்கிறது. பாலங்கள், நீர்த் தடுப்புக்கள், நீரோட்ட வழிகள் என்பன பாதிக்கப்பட்ட நிலையில் பல வீதிகள் காணப்படுகின்றன. கிளிநொச்சியின் மேற்குப் பக்கத்தில் உள்ள பாதைகளில் முறிகண்டிக்கும் அக்கராயனுக்கும் முழங்காவிலுக்கும் இடையிலான பாதை மற்றும் கிளிநொச்சிக்கும் ஸ்கந்தபுரத்திற்கும் இடையிலான பாதை என்பன சேதமுற்றிருக்கின்றன.

பரந்தன் முல்லைத்தீவு பாதை, கிளிநொச்சி வட்டக்கச்சிப் பாதை என்பன கடும் சேதங்களுடன் இருக்கின்றன. வட்டக்கச்சி கிளிநொச்சி பாதை முழுக்க குன்றுகளும் குழிகளும் தான் நிரம்பி உள்ளன. பேருந்துகள் அட்டை போல நகர்ந்துதான் செல்கின்றன. இப்படியான உள்ளூர் பகுதிகளுக்கான போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் காலாவதியான பேருந்துகள் மேலும் சிரமங்களுக்கு உள்ளாகின்றன.

வடக்கின் வசந்தம் போன்ற திட்டங்கள் மிகவும் பெரும் பிரச்சாரங்களுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மக்களின் அன்றாடத் தேவையில் மிக முக்கிய பங்கு வகிக்கும் பாதைகள் இன்னும் திருத்தப்படவில்லை. மக்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்துவதோடு வாகனங்களைச் சேதமுற வைக்கும் நிலையிலுமே பாதைகள் உள்ளன. இதனால் இப்பொழுது ஏ-9 பாதை ஊடான பயணம் தாமதம் என்ற பிரச்சினையை விட மிகவும் ஆபத்து மிக்கதாக மாறியிருக்கிறது என்பதுதான் பயணிகளை அதிகம் அச்சுறுத்துகிறது.

★★★

# மிரட்டும் ஊடகங்கள்

சமூக வரலாற்றில் மனித தகமைகளை ஏனையவர்களிடம் இருந்து உயர்த்திக் காட்டுவதற்கு காலம் காலமாக பல விடயங்கள் இருந்திருக்கின்றன. ஆரம்பத்தில் கற்களும், சிப்பிகளும் மனிதனை அளவிடப் பயன்பட்டன. அதனைத் தொடர்ந்து பசுக்கள், குதிரைகள், உலோகங்கள், நிலம், பணம், தங்கம் என நிலைமாறி, இன்று யார் அதிகளவான தகவல் தொடர்புத் தொழில்நுட்பங்களைத் தெரிந்து வைத்திருக்கிறார்களோ அவர்களே சர்வ வல்லமையும் படைத்தவர்களாக நம்மிடையே வலம் வருகின்றனர். இந்த சர்வவல்லமையாளர்களாலேயே உலக அரசியல் அண்மைக் காலங்களில் ஒரு கொதிப்பு நிலையை எட்டியுள்ளது. இதுவரை அடக்குமுறைக்குள்ளும், ஜனநாயகப் போர்வையில் மேற்கொள்ளப்பட்டு வந்த அராஜகங்களுக்குள்ளும் வாழ்ந்த மக்களது விடுதலையைத் தீர்மானிப்பதில் இவை கணிசமான பங்காற்றியுள்ளன. 20, 22 வருட ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு முற்றுப்புள்ளியை தரும் அளவுக்கு மக்களை கிளர்ந்தெழச் செய்துள்ளன.




அரசுகளுக்கிடையிலான ரகசிய நடவடிக்கைகளையும் ஊழல்களையும் வெளிச்சம் போட்டுக் காட்டுவதன் ஊடாக மக்களைக் கிளர்ந்தெழச் செய்யமுடியும் என்பதை முதலில் தொடக்கி வைத்தது விக்கிலீக்ஸ் தான். விக்கி கசிவுகள் இன்று உலகம் முழுவதும் பேசப்பட்டு வரும் ஒரு விடயம். இது நிறுவப்பட்ட ஓர் ஆண்டுக்குள்ளேயே 1.2 மில்லியன் ரகசிய ஆவணங்கள் இதனால் வெளியிடப்பட்டுள்ளன. இதில், குறிப்பாக அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளில் செய்த கொடூரங்கள் பகிரப்பட்டுள்ளன. நமது நாட்டின் அரசியல்வாதிகள் இளம்பெண்களை விற்பனை செய்வதில் கைதேர்ந்தவர்கள் என்பதையும் சில நாட்களுக்கு முன்னர் வெளியிட்டு இருந்தது. பல நாடுகளது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊழல் விவகாரங்கள் விக்கிலீக்ஸால் பிரபலப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் பாரிய அளவிலான ஒடுக்குமுறைகளுக்கு உள்ளான மக்கள் தமது அரசியலுக்கு எதிரான போராட்டங்களைத் தீவிரப்படுத்தி வென்றும் வருகின்றனர். எகிப்தில் நடைபெற்று வரும் போராட்டங்கள் விக்கிலீக்ஸின் தாக்கம் தான் என்று சொல்லப்பட்டு வருகிறது.

**அட்சயன்**

இதற்கு அடுத்தபடியாக கூகுள், பேஸ்புக், ருவிட்டர், யூரியூப் எனப் பல வலைத்தள ஊடகங்கள் மக்களை அரசியல் மயப்படுத்தி கிளர்ந்தெழச் செய்வதில் பங்களிப்புச் செய்து வருகின்றன. கூகுள் ஏற்கனவே பல நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளது. சீனா பல தடவைகள் இந்த இணையத் தளச்சேவையை இடைநிறுத்தி உள்ளது. பரிமாறப்பட்ட பல ரகசிய ஆவணங்களை ஊடுருவிப் பார்த்துள்ளதாக குறித்த நிறுவனத்தினரால் சீனா மீது தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகிறது. சீனாவில் அதிகளவில் மீறப்படும் மனித உரிமைகள் மற்றும் தாய்லாந்து மக்கள் மீதான வன்முறை போன்றன வெளிச்செல்லாமல் இருப்பதற்கு இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதுபோல் பேஸ்புக், ருவிட்டர் போன்றனவும் சீரான சேவையை அங்கு வழங்குவதில்லை. இவ்வாறு சீனாவில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் ஊடக இருட்டடிப்புகளும், தடைகளும், தணிக்கைகளும் அவ்வரசு மக்கள் மீது திணிக்கும் அதி உச்சமான ஒடுக்குமுறை எனச் சொல்லப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட வந்த, மக்களுக்கு எதிரான ஜனநாயகமற்ற செயற்பாடுகள் கூகுள் ஊடாக கடத்தப்படுவதால் அதனைத் தடை செய்ய பல தரப்புக்களில் இருந்தும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இன்று ஐந்து நிமிடம் ஓய்வு கிடைத்தாலே பேஸ்புக், ருவிட்டர் என பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டுபவர்கள் தான் ஏராளம். அந்தளவுக்கு பட்டிதொட்டியெல்லாம் இச் சமூக வலைத்தளம் பரவியுள்ளது. இந்தியாவில் மட்டும் 2009 ஆம் ஆண்டு இதைப் பயன்படுத்தியவர்களின் எண்ணிக்கை 80 லட்சமாக இருந்தது. மனித உறவுகளுக்கிடையிலான தொடர்புகள் குறைந்து கொண்டு போவதன் பிரதிபலிப்பே, நம்மை முகந்தெரியாத, மொழி தெரியாத, நல்லவர், கெட்டவர் என்றல்லாத சகல நபர்களிடமிருந்தும் அன்பினை எதிர்பார்க்க வைக்கிறது. இது ஒரு சமூக வலைத்தளம், ஆனபோதிலும் மக்களுக்கு எதிரானவர்களுக்கு எதிராக இதனைப் பயன்படுத்துவதில் ஈரானிய, துனிசிய, எகிப்திய மக்கள் வென்றிருக்கின்றார்கள். கடந்த ஆண்டு ஈரானிய இளைஞர்கள் ருவிட்டரைப் பயன்படுத்தி ஒரு கிளர்ச்சியை முன்னெடுத்தார்கள். இதனாலேயே "ருவிட்டர் புரட்சி" என ஊடகங்கள் இதனைப் பெருமையாகக் கூறின. துனிசிய புரட்சி பேஸ்புக், ருவிட்டரையும் இணைத்து முன்னெடுக்கப்பட்டது. ஒவ்வொரு தெருவிலும் நடக்கும் கிளர்ச்சிகளும் அரசின் வன்முறைக் கட்டவிழ்ப்புக்களும் கைத்தொலைபேசியூடாகப் படமாக்கப்பட்டன. அவை கைத்தொலைபேசியில் இருந்தே உடனுக்குடன் குறிப்பிட்ட வலைத்தளங்களுக்கு அனுப்பப்பட்டன. புரட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே தருணத்தில் உலகமெங்கும் வாழும் சகலரும் அதனை நேரடியாகப் பார்க்கின்ற வாய்ப்பினை இதனூடாக ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். 'யூ ரியூப்' இதனை அதிகளவில் வெளியிட்டது. ஒரே நாளில் பல ஆயிரம் கலவர வீடியோக்கள் 'யூ ரியூப்'பில் பதிவேற்றப்பட்டன.

> **மனித உறவுகளுக்கு இடையிலான தொடர்புகள் குறைந்துகொண்டு போவதன் பிரதிபலிப்பே, நம்மை முகந்தெரியாத, மொழி தெரியாத, நல்லவர் கெட்டவர் என்றல்லாத சகல நபர்களிடமிருந்தும் அன்பினை எதிர்பார்க்க வைக்கிறது.**

ஏற்கனவே ஊடகத் தணிக்கை, இணையத்தள வடிகட்டல் முறைகளும் துனீசியாவில் இருந்த போதிலும் பேஸ்புக், ருவிட்டர் போன்றவற்றை துரிதமாகப் பயன்படுத்துவதில் துனீசியர்கள் வென்று விட்டார்கள். இத்தளங்களை அரசு தடை செய்யும் முன்பே பல விடயங்கள் பகிரப்பட்டு விட்டன. இதற்குச் செய்மதி தொலைத்தொடர்பு சேவைகளும் கணிசமான பங்காற்றி இருந்தன. நேரடியாகப் பகிரப்படும் தகவல்களைத் தழுவியே சர்வதேசச் செய்தி நிறுவனங்கள் செய்திகளை வெளியிட்டன.

துனீசிய புரட்சியைத் தழுவியே எகிப்திய புரட்சியும் முன்னெடுக்கப்பட்டது. இங்கும் பேஸ்புக், ருவிட்டர் மிகத் தீவிரமாக வேலை செய்திருந்தன. அதனையறிந்து அரசு இணையத் தளங்களை தடைசெய்திருந்தது.


ஆன போதிலும் செய்மதி இணையச் சேவைகள் அந்தக் கட்டங்களில் கைகொடுத்தன. எகிப்தில் ஒருவர் அரச படைகளால் சுட்டுக் கொல்லப்படும் காட்சி கூட உடனுக்குடனேயே, அவர் சிந்திய ரத்தத்தின் சூடு ஆறும் முன் யூரியூப்பில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

விக்கிலீக்ஸ், கூகுள், பேஸ்புக், ருவிட்டர் போன்ற இணைய வழித் தொடர்பு சாதனங்கள் சர்வதேச அரசியலை திசை திருப்பும் சக்திகளாக மாறிவிட்டன. அடிப்படையில் இவையெல்லாம் பொழுது போக்கை நோக்காக கொண்டே உருவாக்கப்பட்டன. 'பேஸ்புக்' ஐ உருவாக்கியவர் தன் காதல் தோல்வியைத் தாங்கிக் கொள்ளாமல் அளவுக்கதிக அது அருந்தி ஹவார்ட் பல்கலைக்கழக விரிவுரை மண்டபங்களில் புரண்டு கொண்டிருந்த போதே அதனை வடிவமைக்கும் எண்ணம் கொண்டார். அது இன்று விடுதலை பெற்றுத்தரும் வலுமிக்க ஊடகமாக அறிவுபூர்வமானவர்களால் மாற்றப்பட்டிருக்கிறது.


ஈழத் தமிழர்களாகிய நாமும் பல்வேறு அடக்கு முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறோம். ஆனால் நாம் ஒரு போதும் துனீசியர்கள் போலவும் எகிப்தியர்கள் போலவும் சிந்திக்கவில்லை. இணையத் தளங்களைப் நீலப் படம் பார்க்கவும், சினிமா கிசு கிசு செய்திகள் பார்க்கவும், பேஸ்புக்கில் அழகானவர்களை தேடுவதற்கும், பாலியல் இச்சைகளுக்குமே பயன்படுத்துகிறோம். 'பேஸ்புக்' பாவனையினால் இலங்கையில் பல சிறுமிகள் தான் கர்ப்பம் தரித்திருக்கின்றார்கள்.

இலங்கையின் இறுதிக்கட்டப் போரின் பின்னர் நிகழ்த்தப்பட்ட இராணுவ வன்முறைகள் பற்றிய புகைப்படங்களையும், வீடியோக்களையும் சனல்-4 வெளியிட்டு சில காலத்திற்கு முன் பரபரப்பு உண்டாகியது. ஆனால் அது யாரோ ஒரு சிங்கள சிப்பாய் பல கோடி ரூபாய்களுக்கு விற்பனை செய்த வீடியோ. அங்கு எமது சுதந்திரம், போராட்டம் பற்றிய எண்ணத்தோடு அது வெளிப்படுத்தப்படவில்லை. வெறும் பணம் மட்டுமே பேசு பொருளாக இருந்தது. அதற்குத் தகவே அதற்கு எதிரான அதிர்வலைகளும் கூடக் குறைந்து போயுள்ளன.

இப்படியான மிரட்டும் ஊடகங்களின் தாக்கத்தினால் உலகம் ஜனநாயகத்துக்கு அடுத்த கட்டம் பற்றி சிந்திக்கத் தொடங்கி இருக்கிறது. ஏனெனில் ஜனநாயகத்தின் நான்காவது தூண் ஆகிய கருத்துரிமை, ஊடக வெளிப்பாடு போன்றவை ஏனைய மூன்று தூண்களையும் ஆட்டம் காணச் செய்கின்றன. இந்த நான்காவது தூண் உச்ச வளர்ச்சியை அடைந்துவிட்டது. இது ஒரு வகையில் ஜனநாயகத்தின் உச்சமாகவும் இருக்கலாம். ★★★



# முத்தம் தர முத்தான யோசனைகள் பத்து



அன்பின் வெளிப்பாடு முத்தம். அதிகமான இரசிப்புத் தேவைப்படும் மிகவும் அழகான விடயம்! காதலர்களின் ஆன்மா உதடுகளில் சந்திக்கும் வைபவம் முத்தம்.

சீனப் பழமொழி ஒன்று... முத்தம் என்பது உப்புத் தண்ணீர் போல... குடிக்க குடிக்க தாகம் அதிகமாகும்!

ஆனால், முத்தம் கொடுக்கத் தெரியுமா உங்களுக்கு...?

முத்தம் கொடுப்பதற்குக் கடைபிடிக்க வேண்டிய பத்துக் கட்டளைகள். இந்தப் பத்து கட்டளைகளையும் பின்பற்றி முத்தம் கொடுத்துப் பாருங்கள். பின்னர், உங்கள் காதல் அல்லது திருமண வாழ்க்கையில் எல்லா நாளும் பௌர்ணமி தான்!

முதல் கட்டளை: சத்தான முத்தத்துக்கு முதல் எதிரி வேறு எதுவுமல்ல... "தாத் கி பத்பூ" என்று தூர்தர்ஷன் காலத்தில் இருந்து சொல்வார்களே, அந்த வாய்த் துர்நாற்றம் தான். பேசினால் பூ வாசம் புறப்பட வேண்டாம். குறைந்த பட்சம் குமட்டிக் கொண்டு வரக்கூடாது.

அதிகமாகத் 'தம்'மடித்தல், புகையிலைப் பொருட்கள், உடல் நலக் கோளாறு, கண்டதையும் உண்பது என்று ஏகப்பட்ட காரணங்களால் வாய் நாற்றம் ஏற்படுகின்றது.

காதலியோ, காதலனோ, மனைவியோ இதைப் பற்றி வெளிப்படையாகச் சொல்லாமல் இருக்கலாம். ஆனால், துர்நாற்றத்துடன் கொடுக்கப்படும் முத்தத்தில் அத்தனை சுவாரஸ்யமோ, காதலோ இருக்காது... அத்தோடு, மீண்டும் முத்தம் கொடுக்க முற்படும்போது, காதலி அதிர்ச்சி அடையாக் கூடாது தானே...?

எனவே, முத்தம் கொடுக்க முன்னர் வாயைக் கொப்பளித்துக் கொள்ளுங்கள். பிரஷ் போட்டு பல் துலக்கி விட்டுப்போனால் இன்னும் நல்லது. (நெருங்கி வருவாய்... நெருங்கி வருவாய்... என்ற 'குளோசப் டூத் பேஸ்ற்' விளம்பரத்தை நினைவு படுத்திக்கொள்ளுங்கள்)

கட்டளை இரண்டு: முத்தம் கொடுக்கும்போது இதழ்களைக் குவிப்பது மட்டுமல்ல... வாயைத் திறப்பதிலும் ஒரு நுட்பம் இருக்கிறது.

உணர்வு பூர்வமாக முத்தம் கொடுக்க வழியே இல்லாமல் வாயை மூடிக்கொள்ளக்கூடாது. அதேசமயம், எதிரே இருப்பவரை விழுங்கிவிடும் அளவுக்கு அகக்கக்கலமாகவும் வாயைத் திறக்கக்கூடாது.

உதடுகளை மென்மையாக வைத்துக்கொள்ளவேண்டும். முதலில் 'லிப்ற்-டு லிப்ற்' ஆரம்பித்து, பின்னர் அடுத்தடுத்த கட்டங்களுக்குச் செல்லவேண்டும். அப்போது தான் சுவை கூடும்.

மூன்றாம் கட்டளை: உங்கள் காதலி எப்படியான முத்தத்தைக் கொடுக்கும்போது ரசிக்கிறார், என்ன செய்தால் பிடிக்கின்றது என்பதை உணர்ந்து கொடுக்க வேண்டும். அவர்களைத் திருப்திப்படுத்தும்போது தான், நீங்கள் இன்னும் அதிகமாக மகிழ்ச்சி அடைய முடியும். எனவே, முத்தத்தில் ஒருவித தாளகதி வேண்டும். இருவரும் ரசிக்கும் வகையில் இருக்க வேண்டும்.

கட்டளை நான்கு: யாராலும் எடுத்த உடனேயே உணர்வுபூர்வமாக முத்தம் கொடுக்க முடியாது. அதற்கும் ஒரு சின்ன டிப்ஸ் உண்டு. கொஞ்சம் நேரம் செலவிடுங்கள்... தேனீர் குடியுங்கள்... உங்கள் காதலி என்ன செய்கிறார் என்பதைக் கவனியுங்கள். அதையே நீங்களும் செய்தால் போதும். கொஞ்ச நாளிலேயே முத்தம் கொடுப்பதில் திறமைசாலி ஆகிவிடலாம்.

ஐந்தாம் கட்டளை: முத்தம் கொடுக்கும்போது, கைகள் என்ன செய்கின்றன என்பது முக்கியமான அம்சம். ஏதோ முத்தம் கொடுத்துக்கொண்டு இருக்கும்போது, தப்பியோடிவிடப் போகிறார் என்பதைப் போல தலை முடியையோ, இடுப்பையோ அழுந்தப் பிடித்துக்கொள்ளக்கூடாது. முத்தம் என்பது அன்பைத் தரும் களம். வலி ஏற்படக்கூடாது. கைகளைக் கண்ட இடத்தில் வைக்கவும் கூடாது. அதிலும் ஒரு அழகுணர்ச்சி தேவை.

உங்கள் காதலியின் கைகள், முதுகு, பின்புறம், கழுத்து, இடுப்பு போன்றவற்றின் மீது மெல்ல ஊர்ந்து செல்லலாம்.

கட்டளை ஆறு: முத்தத்தில் நாக்கின் பங்கு மிகவும் முக்கியமானது. மெல்ல ஊடுருவி, உணர்வுகளைத் தட்டியெழுப்ப வேண்டும். ஒரு ஓவியனின் தூரிகைபோல நளினமாக நடமாட வேண்டும். ஆனால், அதற்கும் அளவு உண்டு. உள் நாக்கை கவ்விப் பிடிப்பது போலவோ, பல்துலக்கும்போது வாயின் நாலாபுறத்திலும் சுழன்றடிப்பது போலவோ செய்யக்கூடாது.

நாக்கின் நுனி மட்டுமே மாய வித்தைகளை செய்ய வேண்டும். நினைவில் கொள்ள வேண்டிய இன்னொரு விடயம், எவ்வளவு பொறுமையாக, மென்மையாக நடந்து கொள்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாகும் உற்சாகம்.

ஏழாம் கட்டளை: முத்தங்கள் சிந்தும்போது எச்சில் அமிர்தமாகும் தான். அதற்காக, நாய் குட்டி போல் முகமெல்லாம் சளக்... சளக் என்று எச்சிலாக்கி வைக்கக்கூடாது. அது எரிச்சல் ஏற்படுத்தும்.

கட்டளை எட்டு: முத்தம் மட்டுமே இரண்டு தனி நபர்களை உடல் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் இணைக்கிறது. இந்த இணைப்புத் தான், ஆழமான, திருப்திகரமான உறவுக்கு வழி கோலுகிறது. எனவே, ஒவ்வொரு முறை முத்தமிடும் போதும் படுக்கையை மட்டுமே நினைத்துக்கொண்டு இருக்கக்கூடாது. அழகுணர்ச்சி வெளிப்பட வேண்டும். அன்பு மழை பொழிய வேண்டும்.

ஒன்பதாம் கட்டளை: முத்தமிடும்போது, கண்களைத் திறந்து வைத்துக்கொண்டு திரு திருவென விழித்தபடி பார்த்துக் கொண்டே இருக்கக் கூடாது. வீதியில் செல்லும்போது தான் கண்களை அகலத் திறந்து வைத்திருக்க வேண்டும். மகிழ்ச்சியின் பாதையில் கண்கள் மூடியிருந்தால் தான் வழி எளிதாகத் தெரியும்.

அதற்காக, என்ன நடந்தாலும் கண்களைத் திறக்கமாட்டேன் என்று இறுக்கி மூடிக்கொண்டு இருக்காமல், அவ்வப்போது கண் மலர்ந்து, உங்கள் காதலியின் மலர் முகத்தைப் பார்த்தால் மனதும் மலரும்.

கட்டளை பத்து: யார் முதலில் முத்தம் கொடுப்பது என்பது முக்கியமல்ல. தருபவர், பெறுபவர் இருவருமே முழு மனத்தோடு, உறுதியோடு, நம்பிக்கையோடு முத்தமிட வேண்டும்.

இது எதற்கென்றால், பத்து அல்ல பத்தாயிரம் டிப்ஸ் கொடுத்தால் கூட, முத்தத்தின் உச்சத்தில் எதுவுமே நினைவில் இருக்காது. எனவே, முத்தமிடும்போது தன்னம்பிக்கையுடன் அணுகவும்.

இந்தப் பத்து கட்டளைகளைப் பின்பற்றினால், இந்த நாள் மாத்திரமல்ல... வாழ்க்கையின் எந்த நாளிலும் முத்தம் சத்தாக இருக்கும். மகிழ்ச்சியின் வித்தாக இருக்கும்.

ஒரு விடயத்தைச் சொன்னால் மறந்துவிடக்கூடும். நேரில் பார்த்தால் ஓரளவு நினைவில் இருக்கும். ஆனால், செய்து பார்த்தால் மனதில் எப்போதும் இருக்கும். ★

## உனக்காக...

பல தடவைகள்
உனக்கு
என்னவெல்லாம் பிடிக்கும்
என்று
ஞாபகப்படுத்திச் சென்றும்,
ஒன்றையும் பிடிக்காமல்
ஒன்றையும் வாங்காமல்
எதனை
வாங்குவதென்று தெரியாமல்
திரும்பி வந்திருக்கிறேன்

- திருமலை செல்வம் -



# மனைவியைப் புரிந்துகொள்ளுங்கள்

மனைவி கணவனிடம் எதை எதிர்பார்க்கிறாள்? அவள் என்னதான் எதிர்பார்க்கிறாள் என்று கணவன் தெரிந்து கொண்டாலே அவர்களுடைய இல்லற வாழ்க்கை இன்னும் அன்னியோன்யம் கூடியதாக அமையும்!

கணவனிடம் ஒரு மனைவி எதிர்பார்க்கும் விசயங்கள் இவை தான்

அன்பாக பிரியமாக இருங்கள்... அதுவே ஆயிரக்கணக்கான மதிப்புள்ள புடவைகள் தராத மகிழ்ச்சியைத் தரும்!.



மனது புண்படும்படி பேசாதீர்கள். அது உங்கள் மனைவிக்கு உங்கள் மேல் உள்ள பிரியத்தைக் கூட சில சமயங்களில் குறைத்துவிடக் கூடும். அது போல அடிக்கடி கோபப்படவும் செய்யாதீர்கள்.

சாப்பாட்டில் குறை சொல்லக்கூடாது. முதலில் சாப்பாட்டின் சுவையைப் பாராட்டிவிட்டு பிறகு குறைகூறுங்கள். உங்கள் மனைவி விஷயத்தைப் புரிந்து கொண்டு அடுத்த முறை இன்னும் சுவையாகச் சமைப்பாள்!

எந்த இடத்திலும் மனைவியை விட்டுக்கொடுக்கக் கூடாது. பலர் முன்னிலையில் திட்டவோ, மரியாதைக் குறைவாகவோ பேசாதீர்கள். இது உங்கள் அன்யோன்யத்தைக் குறைத்துவிடும்.

உறவினர் வீட்டு விசேஷங்களுக்கு மனைவியுடன் செல்லுங்கள். அது மனைவிக்கு நீங்கள் மரியாதை கொடுப்பதாக தோன்றச் செய்யும்.

எந்த ஒரு விஷயத்தையும் மனைவியுடன் கலந்து ஆலோசிக்க வேண்டும்.

மனைவி சொல்வதை காது கொடுத்துக் கேளுங்கள். காதுக்கு வைரத்தோடு வாங்கித் தருவதைவிட சந்தோஷம் தரும் விஷயம் இது.

மனைவியிடம் மனம்விட்டுப் பேசுங்கள். நிறைய விஷயங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும்.

மனைவி வித்தியாசமாக ஏதாவது செய்தால் ரசித்துப் பாராட்டுங்கள்.

மாதம் ஒரு முறையாவது வெளியில் கூட்டிக் கொண்டு போங்கள். உங்கள் பேரிலுள்ள கோபம்கூட ஓடி விடும்.

பிள்ளைகள் படிப்பில் அக்கறை கொண்டு உதவி செய்யுங்கள். அப்படிச் செய்தால் மனைவிக்கு இன்னும் உங்கள் மீதுள்ள காதலை அதிகப்படுத்தும்.

இரவு விழித்து அழும் குழந்தையைப் பார்ப்பதில் உங்களுக்கு இருக்கும் அதே கஷ்டம் போலத்தான் உங்கள் மனைவிக்கும் இருக்கும். எல்லா விஷயங்களுக்கும் இது பொருந்தும்.

மனைவி உடல்நலம் இல்லாமல் இருக்கும் பொழுது அக்கறையுடன் உடன் இருந்து கவனியுங்கள். அவளுடைய சின்னச்சின்ன தேவைகளைப் பூர்த்தி செய்து சிறு சிறு உதவிகள் செய்தாலே அவளுக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்படும்.


அம்மாவிடம் காட்டும் பாசத்தை மனைவியிடமும் காட்டுங்கள். தாயைவிடவும் தாரமும் வாழ்க்கையில் முக்கியத்துவம் வாய்ந்தவள்தான்!

எங்கு சென்றாலும் மனைவியிடம் சொல்லி விட்டே கிளம்புங்கள். குடும்பத்தில் பல குழப்பங்களைத் தடுக்க இது உதவும்.

மனைவியின் பிறந்த நாளை அவரைக் கேட்காமலேயே தெரிந்து வைத்துக் கொண்டு கட்டாயம் ஏதாவது சிறு பரிசாவது வாங்கிக் கொடுங்கள். அல்லது அவளுக்கு எது பிடிக்கும் என்று தெரிந்துகொண்டு அதை இன்ப அதிர்ச்சி ஏற்படுத்தும் பரிசாகக் கொடுக்கலாம்.

ரொம்ப முக்கியமான விஷயம் இது... மனைவியிடம் பொய் பேசாமல் இருங்கள்.

கடைசியாக... கெட்ட பழக்கங்கள் எதுவும் இல்லாமல் இருக்கும் கணவனையே மனைவி கடவுள் தனக்குத் தந்த பெரும் வரமாக நினைப்பாள். ★





# கர்ப்ப காலத்தில் உடலுறவு கொள்ளலாம்

கர்ப்பிணிகள் பொதுவாக உடல் உறவுகொள்ளலாம். இது வயிற்றில் இருக்கும் குழந்தைகளை பாதிக்காது. அடிக்கடி தொடர்ந்து மேற்கொள்ளும் உடல் உறவால் குறைப் பிரசவம் ஏற்படலாம் என்றோ, இதர உபாதைகள் ஏற்படக் கூடும் என்றோ அஞ்சத் தேவையில்லை.''

இப்படிக் கூறுகின்றது புதிய ஆய்வின் முடிவு ஒன்று.

கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் மேற்சொன்ன ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றது.

11,000 பெண்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு இருக்கின்றனர்.

பிரசவகாலத்துக்கு ஒரு சில வாரங்களுக்கு முன்பாகக் கூட உடல் உறவு கொள்ள முடியும் - இது ஒரு சாதாரணமான விடயம் என்கின்றனர் ஆய்வில் ஈடுபட்ட விஞ்ஞானிகள்.

வைத்திய ஆலோசனை இவ்விடயத்தில் தேவை இல்லை என்றும்

முன்கூட்டிய எச்சரிக்கை தேவையில்லை என்றும் அறிவுறுத்துகின்றனர்.

ஆனால் இரண்டு அல்லது மூன்று குழந்தைகளை ஒரே சூலில் பிரசவிப்பவர்களுக்கு அவதானம் தேவை எனவும் வலியுறுத்துகிறார்கள்.

அத்துடன் மூன்றுக்கு மேற்பட்ட குழந்தைகளை ஒரே சூலில் பிரசவிக்கும் கர்ப்பிணிகள், ஏற்கனவே குறைப் பிரசவங்களுக்கு உரித்தானவர்கள் போன்றோர் இது விடயத்தில் முன்னெச்சரிக்கையாக இருக்கின்றமை நல்லது என்றும் இந்த ஆய்வாளர்கள் சொல்கின்றார்கள்.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட 11 ஆயிரம் பேரில் அரைவாசிக்கு மேற்பட்டோர் உடல்உறவில் மும்முரமாக ஈடுபட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

அரைவாசிப் பேர் பாலியல் உறவில் நாட்டம் காட்டவில்லை எனினும் பிரசவத்தில் இரு சாராருக்கும் இடையில் எவ்வித வேறுபாடுகளும் ஏற்பட்டு இருக்கவில்லை என ஆய்வாளர்கள் குறிப்பிட்டு உள்ளனர்.

அதே வேளை குறைந்த பட்சம் ஒரு குறைப் பிரசவத்துக்கு உள்ளான கர்ப்பிணிகளும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டார்கள். இவர்கள் கர்ப்ப காலத்தில் கிரமமாக பாலியல் உறவில் ஈடுபட்டு இருக்கின்றார்கள்.

ஆனால் இது பிரசவ காலத்தில் பாதுகாப்பை அதிகரித்து இருக்கவில்லை என்றும் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

பிரசவத்துக்கு பின்னர் ஒரு மாத அல்லது இரு மாத கால இடைவெளிக்குப் பின்னர் பெண்கள் பொதுவாக உடலுறவை ஆரம்பித்து விடுகிறார்கள் எனவும் அவதானிக்கப்பட்டு உள்ளது. ★

# நீரிழிவு நோய்

## பரம்பரையாகக் கடத்தப்படக்கூடியது

**கேள்வி:** எனது தந்தையாருக்கு நீரிழிவு நோய் உள்ளது. எனக்கும் அந்நோய் வருமென நண்பர்கள் கூறுகிறார்கள். நீரிழிவு நோய் எதனால் ஏற்படுகிறது? அதன் குணங்குறிகள் எவை?

**பதில்:** நீரிழிவு நோய் பரம்பரையாகக் கடத்தப்படக் கூடியது தான். எனவே அவதானமாக இருப்பதே நன்று. நீரிழிவு நோய் அல்லது சலரோகம் என அழைக்கப்படுவது DIABETES MELLITUS எனும் நோயாகும். இது உண்மையில் அனுசேபத்தோடு சேர்ந்த பல நிலைகளினது ஒரு கூட்டமாகும். இதில் முக்கியமானது குருதியில் குளுக்கோசின் அளவு அதிகரித்து இருத்தலாகும். இந்நிலை இன்சுலின் சுரத்தலில் ஏற்படும் குறைபாட்டினாலோ அல்லது இன்சுலின் தொழிற்பாட்டில் ஏற்படும் குறைவினாலோ ஏற்படலாம். இந் நோயுள்ளவர்களின் சிறுநீரில் அதிகளவு குளுக்கோசு இருக்கும்.



பரம்பரை நீரிழிவுக் கடத்தல்

பொதுவாக குருதியில் உள்ள குளுக்கோசின் அளவு சதையினால் (பீற்றா கலங்கள்) சுரக்கப்படும் இன்சுலின் எனப்படும் ஓமோனால் கட்டுப்படுத்தப்படுகிறது. குருதியில் குளுக்கோசின் அளவு கூடும்போது இன்சுலின் அளவும் கூடுகிறது. இதன் மூலம் குருதியின் குளுக்கோசு அளவு குறைக்கப்படுகிறது அல்லது சரி செய்யப்படுகிறது. ஆனால் நீரிழிவு நோயுள்ளவர்களுக்கு இன்சுலின் முற்றாக இல்லாமலோ அல்லது குறைவாக இருப்பதனாலோ தான் குருதியில் வெல்லத்தின் அளவு அதிகரிக்கிறது. இதுவே நீரிழிவு நோயாகும்.

இது ஒரு நீண்ட கால மருத்துவப் பிரச்சினையாகும். நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியுமே தவிர இதனைப் பூரணமாகக் குணப்படுத்த முடியாது. இது ஒரு முறை வந்தால் வாழ்நாள் முழுவதும் சிகிச்சை பெறவேண்டும்.

இன்சுலின் சுரப்பு குறைவாக இருத்தல், அல்லது குறைபாடான (DEFECTIVE) இன்சுலின் சுரக்கப்படுதல் அல்லது கலங்களினால் இன்சுலினை உரிய முறையில் பாவிக்க முடியாமல் இருத்தல் என்பன குருதியில் குளுக்கோசின் அளவைக் கட்டுப்படுத்த முடியாத நிலையைத் தோற்றுவிக்கின்றன. கலங்களால் இன்சுலினைப் பாவிக்க முடியாத நிலை INSULIN RESISTANCE எனப்படுகிறது. (வகை 2) (Type-II) நீரிழிவாளர்களுக்கு இதுவே அடிப்படைப் பிரச்சினை ஆகும். சதையிலுள்ள பீற்றா கலங்களின் கோளாறினால் இன்சுலின் சுரப்பு குறைவடைவதால் ஏற்படும் நீரிழிவு (வகை 1) எனப்படுகிறது. (Type-I)

காபோவைதரேற்றானது சமிபாட்டின் போது சிறுகுடலில் குளுக்கோசாக உடைக்கப்பட்டு அகத்துறிஞ்சப்படுகிறது. இது குருதியின் மூலம் உடலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு சக்தி பெறப்படுகிறது. ஆனால் குளுக்கோசு தானாக கலங்களுக்குள் செல்லமாட்டாது. இதனை ஊக்குவிக்க அல்லது செயற்படுத்த இன்சுலின் தேவைப்படுகிறது. இன்சுலின் இல்லாத போது குருதியில் குளுக்கோஸ் இருந்தாலும் கலங்கள் குளுக்கோஸில்லாமல் சக்தி இழந்த நிலையிலேயே காணப்படும். இதனை "STARVATON IN THE MIDST OF PLENTY" என அழைப்பர்.

இன்சுலின் குளுக்கோசைக் கலங்களுக்குட் செலுத்துவது மட்டுமன்றி குருதியில் அதன் அளவையும் கட்டுப்படுத்துகிறது. எனவே இன்சுலின் இல்லாத போது குருதியில் குளுக்கோசின் அளவு கூடுகிறது. இதுவே நீரிழிவின் அடிப்படையாகும். சிகிச்சை பெறாத நோயாளர்களின் ஆரம்ப அறிகுறிகள் குருதியில் குளுக்கோசின் அளவு கூடுவதாலும் சிறுநீரில் அதிகளவில் குளுக்கோசு வெளியேறுவதனாலுமே ஏற்படுகின்றன. சிறுநீரில் காணப்படும் வெல்லத்தினால் சிறுநீரின் அளவு கூடுகிறது. இதனால் கூடிய நீரிழப்பு ஏற்படுகிறது. எனவே நோயாளிக்குத் தாகம் அதிகமாகிறது. இன்சுலின் என்பது காபோவைதரேற், புரதம், கொழுப்பு ஆகியவற்றின் அனுசேபத்தோடு தொடர்புடைய ஓமோன் ஆகும். இன்சுலின் இல்லாத போது புரத, கொழுப்பு சேமிப்புகள் குறைவடைகின்றன. எனவே நிறை குறைவு திடீரென ஏற்படுகின்றது. கலங்கள் குளுக்கோஸ் இல்லாமல் இருப்பதனால் பசி கூடுதலாக இருக்கும். ஆயினும் நிறையில் குறைவு ஏற்படும். கலங்களுக்குக் கிடைக்கும் சக்தியின் அளவு குறைவாக இருப்பதால் களைப்பு ஏற்படும்.

நீரிழிவு நோயாளருக்கு வயிற்றுப்பிரட்டல் மற்றும் வாந்தி கூட காணப்படலாம். அத்துடன் சிறுநீரில் அதிகளவு வெல்லம் இருப்பதனால் சிறுநீர்ப்பை, அதன்வழி என்பவற்றில் கிருமித் தொற்று ஏற்படுவாய்ப்புகள் அதிகம். தோல் நோய்களும் ஏற்படும்.

நீரிழிவு நோயைவிட அது கவனிக்கப்படாமல் விடப்படுவதால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களே அபாயகரமானவை. நீண்ட கால நீரிழிவானது கண் பார்வையைப் பாதிக்கும். சிறுநீரகங்களைச் செயலிழக்கச் செய்யும். அதைவிட நரம்புகளையும் பாதிப்படையச் செய்யக்கூடியது. மேலும் இரத்தக் குழாய்களைக் குறுகச் செய்து அடைப்பை ஏற்படுத்துவதால் மாரடைப்பு, பாரிச வாதம் போன்ற நோய்கள் ஏற்படவும் காரணமாகிறது.

இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் ஜோன் பொன்னையா. நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரிகள்.

**இலவச மருத்துவ ஆலோசனை**

I.) சுடர்ஒளி, யாழ்.அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

II.) சுடர்ஒளி,
85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

**கேள்வி:** வயது 25. பெண். என் தலைமுடி வேகமாக உதிர்கிறது. இதற்குத் தீர்வொன்று கூறுங்கள். சொடுகு இதற்கு ஒரு காரணமா?

**பதில்:** பொதுவாகப் பெண்கள் அடர்த்தியான நீண்ட கூந்தலை அழகென்று கருதுவதால் பெண்களையே இப்பிரச்சினை பெரிய அளவில் ஆட்டிப்படைக்கிறது. மயிர், தோலில் உள்ள பை போன்ற குழிகளில் (FOLLICLE) உருவாகிறது. மேற்படி குழிகளில் இருந்து மேல் நோக்கி வளரக்கூடிய புடைப்பு (PAPILLA) விசேட கலங்களினால் அமினோ அமிலங்களை கெரட்டீன் எனும் புரதமாக மாற்றும் போது அது மயிராக மாற்றம் பெறுகிறது. (மயிர் கெரட்டீனால் ஆனது) இத்தகைய புரத சங்கிலிகள் உருவாக்கப்படும் அளவே மயிரின் வளர்ச்சியைத் தீர்மானிக்கிறது. பொதுவாக முடி ஒரு மாதத்துக்கு 1-2 சென்றிமீற்றர் அளவு வளரக்கூடியது. 15-30 வயது வரையுள்ள பெண்களில் முடி வளர்தல் சிறிது வேகமாக இடம்பெறும்.

முடி உதிர்வதற்கான முக்கிய காரணம் போசாக்கின்மையே ஆகும். பொதுவாக எந்த வகைப் போசாக்குக் குறைவு ஏற்பட்டாலும் முடி உதிர்தலும் அதன் ஒரு தாக்கமாக அமைகிறது. விற்றமின் B6 குறைவானவர்களுக்கு முடி உதிர்தல் அதிகமாகும். போலிக் அமில குறைபாடு உள்ளவர்களுக்கு தலை மிகவிரைவிலேயே வழுக்கை ஆகிவிடுகிறது. ஆனால் ஆரம்பத்திலேயே போசணை நிவர்த்தி ஏற்பட்டால் விழுந்த முடி மீண்டும் வளரச் சந்தர்ப்பம் உண்டு.

முடி உதிர்வுக்கு மற்றுமொரு முக்கிய காரணம் மன உளைச்சல், கவலை, திடீர் அதிர்ச்சி என்பனவாகும். மனப்பாரம் அதிகரிக்கும் போது தலையின் தோலும் இறுக்கமாகி விடுகிறது. இது குருதிக் கலன்களை இறுக்குவதோடு அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் மயிர்க்கால்களைச் சென்றடைவதைத் தடுக்கிறது. மேலும் சில நோய்களால் ஏற்படுத்தப்படும் தளர்வு மாற்றங்களும் முடி உதிர்வுக்குக் காரணமாகின்றன. உதாரணமாக தைரோயிட், சிபிலிஸ், நீண்ட நாள் இன்புளுவன்சா மற்றும் இரத்த சோகை என்பவை இவற்றுள் சிலவாகும். இவை மயிர்க்கால்களைப் பலவீனப்படுத்தி முடி உதிர்தலை ஏற்படுத்துகின்றன. தலையை அழுக்காக வைத்திருப்பதும் முடி உதிர்வதற்கான ஒரு முக்கிய காரணி.

மயிர் புரதத்தால் ஆனது. எனவே புரத உணவு சரியான அளவில் உட்கொள்ள வேண்டும். வளர்ந்தோர் 80-90 கிராமும் கட்டிளமைப் பருவத்தினர், 80 - 100 கிராமும் நாளாந்தம் உட்கொள்ள வேண்டும். புரதம் பொதுவாக பால், தயிர், சோயா, முட்டை, மீன் மற்றும் இறைச்சி வகைகளில் கிடைக்கும். விற்றமின் A குறைபாடு மயிரைக் கரடாக்கி உடையச் செய்யும். எனவே விற்றமின்கள் A,B மற்றும் இரும்பு, செம்பு, அயடீன் என்பனவும் தலைமயிரின் ஆரோக்கியத்துக்கு அவசியம். இவை நரையையும் தடுக்கவல்லவை. இனோசிற்றோல் (INOSITOL) இன்னுமொரு முக்கியமான பொருளாகும். இது மதுவம் (YEAST) ஈரல் போன்றவற்றில் காணப்படும்.

தலையைக் குளிர்நீரால் கழுவிய பின் விரல்களால் சூடு வரும்வரை நன்றாக விரைவாக மயிர்க்கால்களைத் தேய்த்து விடுவது நல்ல பலனைத் தரும். மேலும் நெல்லிக்காய்ச் சாறு சேர்த்த தேங்காய் நெய் மிகச்சிறந்த நிவாரணியாகும். தேங்காய்ப் பாலைத் தலையில் நன்கு தேய்த்து விடுவதும் நல்ல பயனைத் தரும். ★★★



## love காதல் சமூகக் குற்றமா?

காதல் பிரச்சனை வீட்டில் தெரியவந்தவுடன் கண்டிப்பாக பிரச்சனைகள் வரவே செய்யும். குழந்தையாகக் கருதப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் திடீரென மிகப்பெரிய முடிவினை அவர்களாகவே எடுக்கும் பொழுது கோபம், ஆத்திரம் எல்லாம் பெற்றவர்களுக்கு ஏற்படுவது நியாயமே.

'ஏன் நமது நியாயமான காதல் ஆசையை, ஆர்வத்தைப் புரிந்து கொள்ளாமல் பெற்றவர்கள் கோபத்தில் இருக்கிறார்கள்?' எனச் சிந்திக்காமல், அவர்களது கோபம் நியாயமே, அது தீர்வதற்குச் சிறிது கால அவகாசம் கொடுக்கலாம் எனக் காத்திருங்கள்.

இந்திரா காந்தி படிக்கும் காலத்தில் பெரோஸ் காந்தியைக் காதலித்தார். விஷயம் பிரதமராக இருந்த நேருவின் காதுகளுக்குப் போனது. 'நான்கு வருட காலம் இருவரும் சந்திக்காமல், பேசிக்கொள்ளாமல், கடிதம் எழுதாமல் இருங்கள். அதற்குப் பின்னர் இருவருக்கும் காதல் இருப்பதாகத் தெரிந்தால் திருமணம் முடித்து வைக்கிறேன்' என்று நிபந்தனை விதித்தார் நேரு. இருவரும் காதலுக்காக சொன்ன சொல்லைக் காப்பாற்றிக் கிடந் தார்கள். அவர்கள் இருவரும் அன்போடு காதலில் காத்துக் கிடந்திருப்பதைப் பார்த்த நேரு, விரைவிலேயே இருவருக்கும் திருமணம் முடித்து வைத்தார். பெற்றோர்களது கோபம் தீரும் வரை காத்திருங்கள். காத்திருந்தால் கண்டிப்பாக நல்லதே நடக்கும்.

பெற்றோர், காதல் இரண்டும் மனிதனுக்கு இரு கண்களைப் போன்றவை என ஏற்கனவே பார்த்தோம். அதனால் இரண்டுடனும் சேர்ந்து வாழ்வதற்காக முடிந்தவரை கஷ்டப்பட்டு சம்மதம் பெறுதலே நல்லது.

சில பெற்றோர்கள் காதலுக்கு ஆதரவாகவே இருப்பார்கள். ஆனால், இந்தக் காதலுக்கு இசைவு தெரிவித்தால் அடுத்ததாக தம்பி, தங்கைக்கு திருமணம் முடிப்பதில் சிக்கல் ஏற்படும் எனப் பயப்படுவார்கள். அவர்களது சந்தேகம், பயம் நியாயமானதே. அதனால் உங்களது காதலால் குடும்பத்தில் மற்றவர்களது எதிர்காலத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என உறுதியளிக்க வேண்டியது உங்கள் கடமை.

காதல் திருமணங்கள் என்பது இப்பொழுது வெகு சகஜமாக நடைபெறுகின்றன. இது ஒரு சமூகக் குற்றம் அல்ல என்பதை எடுத்துச் சொல்லி பெற்றோர்களது அன்பினைப் பெற்று அதன் பின்னர் திருமணம் முடிப்பதே நல்லது.



## அழிவானத்துக்கப்பால்..

# 2012 இல் உலகம் அழியப் போகிறதா?

"என்ன, 2012 இல் உலகம் அழியப் போகுதாம்'' என்று சுவிற்சர்லாந்தில் இருந்து ஒரு நேயர் எனது ரீ.வி நிகழ்ச்சியின் நேரடி ஒளிபரப்பின் போது கேட்டார்.

இது பெரும் சிக்கலான பிரச்சினை. இப்பொழுது தமிழ் மக்கள் மத்தியில் சுற்றி வருகின்ற ஆயிரம் பிரச்சனைகளில் இதுவும் ஒன்று. 2012 இல் உலகம் அழியுமா?

திருகோணமலையிலும் இதுதான் கதை என்று திருகோணமலைக்காரர் ஒருவர் சொன்னார்.

யாழ்ப்பாணம், கொழும்பு, லண்டன், பேர்லின் என்று எல்லா இடமும் இது தான் கதை. ஏன் இந்தக் கதை வந்தது என்று யோசிக்கிறேன்.

தேடிய பொழுது கிடைத்தது; மாயா என்கின்ற இனக் குழுவினரின் கலண்டரில் 2012 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதிக்குப் பிறகு எந்த விதமான உலகத் தகவல்களும் இல்லை என்ற செய்தி.

இந்தக் கலண்டருக்கு TUN என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

மாயா கலண்டர் சூரிய சந்திர கிரகணம் முதல் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கூட்டிய விபரங்களைப் பதிந்து வைத்திருக்கிறதாம்.

2012.12.21 இல் உலகில் பெரிய மாற்றங்கள் வரும் என்று சிலர்களும் நம்புவதாகச் சொல்கிறார்கள்.

அன்று கிரகங்கள் அனைத்தும் ஒரே கோட்டில் வருகிறது என்று வானிலை ஆய்வாளர்களும் சொல்கிறார்கள்.

ஆனால் இவை எல்லாவற்றிற்கும் மூல காரணம், 200 மில்லியன் டொலர் செலவில் தயாரிக்கப்பட்டு 796 மில்லியன் டொலருக்கும் அதிகமான வருமானத்தைக் கொட்டிக் கொடுத்த ''2012'' திரைப்படம் தான்.

ஹொலிவூட் திரைப்படங்கள் எப்பொழுதும் அதீத புனைவுக்கும் பிரமாண்டத்திற்கும் முன்னுரிமை கொடுப்பன.

பிரமாண்டம் என்பதை 'அவதாரில்' பார்த்தோம். அதற்குப் பிறகு வருவது குறித்து இன்னும் ஏதாவது சொல்ல வேண்டுமே என்று நினைத்து '2012' ஐ டைரக்டர் 'றோலண்ட் எமிறிச்' கொண்டு வந்தார்.

மனிதர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு விடயத்தை முன்வைத்து இத் திரைப்படத்தை கடந்த டிசெம்பரில் கொண்டு வந்தார். உண்மையில் இந்தப் படம் 2013 ஜனவரியில் வந்திருந்தால் படுதோல்வி அடைந்திருக்கும். ஏனெனில் இல்லாத ஒன்றைப் பற்றிக் கேட்பதற்கு மக்களுக்கு சுவாரஸ்யம் இல்லாமல் போயிருக்கும். அதனால் மூன்று வருடங்களுக்கு முந்தியே 2009 நவம்பரில் படத்தை வெளியிட்டு விட்டனர் தயாரிப்பாளர்கள்; கொட்டிக்காரர்கள்.

அமெரிக்காவின் பூர்வ குடிகளான மாயாக்களை, சிறப்பான தங்கள் கலாசாரத்தை பேணி வாழ்ந்த அந்த மக்களை ஸ்பெயினின் காலனி ஆதிக்கக்காரர்கள் கொன்றார்கள். போரில் சிறந்த மாயாக்களை எதிர் கொள்ள முடியாத, நாடு பிடிக்கின்ற கொள்ளைக்கார ஸ்பெயினியர்கள் அம்மை நோய்க்கிருமிகள் கொண்ட போர்வையைக் கொடுத்து கொத்து கொத்தாகக் கொன்று தீர்த்தார்கள். அவர்கள் அழிந்த ஒரு இனம்.

அவர்கள் வான சாத்திரத்தில் சிறந்து விளங்கினார்கள். அவர்கள் எழுதி வைத்த, அவர்கள் பாவித்த கலண்டர் தான் மாயா கலண்டர். 2012 திரைப்படம் உலகம் முழுவதும் ஒரு கற்பனைப் பீதியை விசிறி விட்டு போனதுக்கு மாயா இனத்தவரின் கலண்டர்தான் மூலகாரணம்.

ஆனால் 2012 க்குப் பிறகு அவர்கள் ஏன் வேறு தகவல்களை, செய்தியை எழுதவில்லை என்று கேட்பவர்கள் கேட்டுக் கொண்டுதான் இருக்கின்றனர்.

சரி இந்தக் கட்டுரையை எழுதி அரைவாசியை வைத்து விட்டு வெள்ளிக்கிழமை பள்ளி வாசலுக்கு ஜும்மா தொழுகைக்குப் போனேன். அங்கு பள்ளியில் மௌலவி, குர் ஆனில் உலக முடிவு நாளின் அடையாளங்கள் பற்றித்தான் பேசினார்.

என்னடா, இது போகும் இடமெல்லாம் உலகம் அழியப்போகிறது, உலகம் அழியப் போகிறது என்கிறார்களே என எண்ணினேன்.

மறுமை நாளின் நம்பிக்கை என்பது குர் ஆனின் முக்கியமான விடயங்களில் ஒன்றாகும். இவை, முஹம்மது நபிகளார் சொல்கின்ற உலக முடிவு நாள் பற்றிய குறிப்புகளில் சில.

பெற்ற தாயைக் கவனிக்க கடமைப்பட்ட ஆண் பிள்ளைகள் தாயை கவனிக்காமல் விட்டு விடுவார்கள், இதனால் தாய் தனது மகளைச் சார்ந்து மகளின் தயவில் வாழும் நிலை ஏற்பட்டால்.... (ஏற்பட்டிருக்கிறது)

வறுமை நிலையில் (அரை) நிர்வாணத்துடனும் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தவர்கள் மக்களின் தலைவர்களாக ஆவது... (ஆகியிருக்கிறார்கள்)

குடிசைகள் திடீர் திடீரென்று கோபுரமாக மாறினால்....
(மாறி இருக்கிறது)

★ உலகில் விபச்சாரமும் மதுவும் பெருகினால்... (பெருகி இருக்கிறது)

★ தகுதியற்றவர்களிடம் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படுவதும் அப்பொறுப்புக்களில் அவர்கள் நாணயமின்றி நடந்து கொள்வதும்......(நடக்கிறது)

★ பாலைவனங்கள் சோலையானால் ... (ஆம் ஆகியிருக்கிறது)

★ காலம் சுருங்கி விடும்.

முஹம்மது நபிகளார் தான் வாழ்ந்த காலத்தை உதாரணமாகச் சொல்லும் போது அதாவது இற்றைக்கு 1432 வருடத்துக்கு முன்பு (இன்றைய) ஒரு வருடம் (அன்று) ஒரு வாரம் போலாகி விடும். இன்றைய ஒரு வாரம் அன்று ஒரு நாள் போலாகிவிடும். இன்றைய ஒரு நாள் அன்று ஒருமணிநேரம் போலாகிவிடும். ஒரு மணி என்பது ஒரு வினாடி போன்று ஆகும். (நடக்கிறது)

★கொலைகள் அதிகரிப்பதும்..... (ஆம்)

★ நில அதிர்வுகள், பூகம்பங்களும் அதிகரித்தல்..

★ மனிதர்கள் பள்ளிவாசல்களை காட்டி என்னுடையது பெரிதா உன்னுடையது பெரிதா என்று சொல்லிப் பெருமையடிப்பது... (உண்மைதான்)

★கடைகள் பெருகுவது... (பெருகி விட்டன)

★ உலகத்தில் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்தல்.

★ ஆடை அணிந்தும் நிர்வாணமாக தோற்றமளிக்கும் பெண்கள் உலகத்தில் தோன்றுவது..... (உண்மைதான்)

★ பேச்சைத் தொழிலாக்கி பொருள் திரட்டுவது (அரசியல்வாதிகள் போன்றோர் திரட்டுகிறார்கள்)

★ தற்கொலை அதிகரித்தல் ..... (அதிகரிக்கிறது)

★ தான் இறை தூதர் என்று நபி என்று பொய் சொல்பவர்கள் அதிகரித்தல்....(மிக அதிகரித்து விட்டார்கள்)

முஹம்மது நபியவர்கள் உலகத்தின் முக்கியமான தீர்க்கதரிசி அவர் இந்த உலகத்தில் வாழ்ந்தவர். அவர் மரணித்து 1400 வருடங்கள் கடந்து விட்ட போதிலும் அவரது தீர்க்க தரிசனங்கள் சத்தியமானவையாக இருக்கின்றன.

மேற் சொன்னவைகள் நடந்தால் உலகமுடிவு நாள் வரும் என்று நபிகளார் சொன்னார்கள்.

**இளைய அப்துல்லாஹ்**

ஆனால் உலக முடிவு நாள் என்பது திடீரென்று வந்து விடும் ஒன்றல்ல. யாராலும் அறிய முடியாதவாறு அது மறைக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் உலகத்தில் மரணமும் அழிவும் ஏதோ ஒரு வகையில் எம்மைத் துரத்திக் கொண்டிருக்கின்றன.

அவுஸ்ரேலியா என்ற எழில் மிகுந்த நாடு இன்று சந்தித்திருக்கும் அழிவு மனதைப் பதட்டமடையச் செய்கிறது.

எனது நண்பன் ஒருவன் அவுஸ்ரேலியாவில் இருந்து துடித்துக் கொண்டிருக்கிறான். தனது வாழ்நாளில் இப்படி ஒரு பென்னம்பெரிய வெள்ளத்தை தான் சந்திக்கவில்லை என்கின்றான். வீடுகள் அரைவாசிக்கு மேல் வெள்ளம் மூடிய அவலம். இருந்ததை மட்டும் எடுத்துக் கொண்டு ஓடினார்கள். ஆடுகள்,

> எனது நண்பன் ஒருவன் அவுஸ்திரேலியாவில் இருந்து துடித்துக் கொண்டிருக்கிறான். தனது வாழ்நாளில் இப்படி ஒரு பென்னம் பெரிய வெள்ளத்தைத் தான் சந்திக்கவில்லை என்கிறான் அவன். வீடுகள் அரைவாசிக்கு மேல் வெள்ளம் மூடிய அவலம் இப்போதுதான் நிகழ்கிறது.

மாடுகள், குதிரைகள் என்று எல்லாமே பிரிஸ்பேனில் கண்ணுக்கு முன்னால் வெள்ளம் கொண்டு போனதைக் கண்டார்கள்.

அவர்களின் வாழ்வாதாரங்கள் எல்லாம் தண்ணீரில் அள்ளுண்டு போய் விட்டன. பெரும் செல்வந்தர்களாக வாழ்ந்த மக்கள் நடுத்தெருவுக்கு வந்து விட்டார்கள்.

B.M.W கார்கள், பென்ஸ் கார்கள் எல்லாம் நடுவெள்ளத்தில் கண்ணுக்கு முன்னே ஓடிக் கொண்டிருக்கின்றன. கார்களுக்குள்ளே இருந்த மக்கள் வெள்ளத்தினால் மரணமானார்கள்.

செகதி படைத்த நாட்டில் கூட மனிதரைக் காப்பாற்ற முடியாமல் இயற்கை துவம்சம் செய்து போட்டிருக்கிறது.

குயின்ஸ்லாந்து தண்ணீரில் அடித்து நொருக்கப்பட்டிருக்கிறது. சுனாமி தான் மனிதர்களைக் கொன்று குவிக்கும் என்றில்லை.

'அல்ஜஸீரா' தொலைக்காட்சி இந்தப் பெரு வெள்ளத்துக்கு Inland Tsunami என்று தான் பெயர் வைத்திருக்கிறது.

வீடுகளின் கூரை அளவுக்கு வெள்ளம் ஹெலி கொப்டர் ஓட்டிக்கு தங்களது ஷேட்டுகளைக் கழட்டிக் காட்டி உயிர்ப்பிச்சை கேட்டுக் கொண்டிருந்தனர் வெள்ளைக்காரர்கள்.

தோட்டுக்களின் எல்லா திசைகளிலும் வெள்ளம். மண்சரிவு, பாதைகள் எல்லாம் மூடி ஒன்றுமே தெரியாத அளவுக்கு மறைந்திருந்தன . கார்கள் வழுக்கி ஓடும் பாதைகள் எல்லாம் உடைந்து நொருங்கி இருந்தன.

(தொடர்ச்சி 12 ஆம் பக்கம்)

# 2012 இல் உலகம் அழியப் போகிறதா?



ஏழை மக்களின்,
வெள்ளத்தில் அழுந்தும்
வறிய மக்களின்
பொருட்களை அபகரிக்க
அந்தக்
கல் நெஞ்சக்காரர்களுக்கு
எப்படி மனது
வருகிறது?

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குயின்ஸ்லாந்து அவுஸ்ரேலியாவின் மூன்றாவது பெரிய நகரம். வெள்ளக் காடாகக் கிடக்கிறது. 6500 நகர வீடுகளை வெள்ளம் முழுமையாக மூடியது. 1,50,000 மக்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டார்கள். இந்தப் பெரு வெள்ளத்தில் இருந்து மீள இன்னும் எவ்வளவு நாட்கள் எடுக்கும் என்று ஏங்கி கொண்டிருக்கின்றனர் இந்த மக்கள். இது பேரழிவுதானே?.

போதாதற்கு இப்பொழுது புயற்காற்று வேறு அடித்து நொருக்குகிறது. Emarald, Rockhampton, Bundaberg, Theodore, St.George போன்ற இடங்கள் நாசமாகிவிட்டன. வெள்ளத்தால் ஒன்றும் செய்ய முடியாது மக்கள் தவிக்கின்றனர். இது உலகத்தில் அழிவுதானே?

பட்டக்களப்பு, அம்பாறை மக்களுக்கு வந்த வெள்ளம், அழிவு தாங்க முடியாதது. இனி எப்படி அவர்கள் மீண்டு வருவார்கள்? சுனாமிக்கு, யுத்தத்திற்கு முகம் கொடுத்த அந்த மக்கள் அவற்றிலிருந்து மீண்டு வருவதற்குமுன்பு இந்தப் பேரழிவை எப்படி தாங்குவார்கள். வடக்கு கிழக்கு மக்கள் என்ன பாவம் செய்தார்கள்? காலம் காலமாக அழிவும் அவர்களோடு தொடர்ந்து பயணித்து கொண்டிருக்கிறதே. 30 வருடம் அகதி வாழ்க்கை, பெரும் யுத்தம் எல்லாவற்றையும் இழந்த வாழ்வு, பெரும் சுனாமி. இப்பொழுது மீண்டும் வெள்ளம், அழிவு.

மக்களை நினைத்து மனம் கலங்குகிறது. பேரழிவில் இருந்து எமது மக்களுக்கு விடிவே இல்லையா? அதில் "பிச்சையெடுக்குதாம் பெருமாள் அதைப்பிடுங்கிச்சாம் அனுமார்" என்று பாடப்பட்ட அந்த மக்களுக்கு வருகிற வழங்குவதற்கான உணவுப் பொருட்களில் இருந்து எல்லா நிவாரணப் பொருட்களையும் மக்களுக்குக் கிட்டவிடாமல் அதிகாரிகள் தங்கள் வாயில் போட்டுக்கொள்கிறார்களே. இது எவ்வளவு பெரிய அநியாயம்?

ஏழை மக்களின், வெள்ளத்தில் அழுந்தும் வறியமக்களின் பொருட்களை அபகரிக்க அந்தக் கல்நெஞ்சக்காரர்களுக்கு எப்படி மனது வருகிறது?. அந்தப் பொருட்களை விற்று சேமிக்கும் பணம் அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தருமா?

அவர்களது பிள்ளைகுட்டிகள் சந்தோஷமாக வாழ்வார்களா? ஊழல் புரிந்து ஈட்டிய பணமல்லவா அது? அது மக்களின் பணமல்லவா? அது நெருப்பல்லவா? இது தெரியாத அந்த ஊழல் அதிகாரிகளுக்கு?

எப்பொழுது இந்த அழிவில் இருந்து மக்கள் மீண்டு வரப்போகிறார்கள்?

இங்கு ருனீசியாவில் இருந்து எகிப்து வரை பெரும் போராட்டம்.

மக்கள் வீதியில் இறங்கி நிற்கிறார்கள். உணவு, தண்ணியில்லாமல் போராடுகிறார்கள். இதுவரை எகிப்தில் 800 பேர்வரை இந்தப் போராட்டத்தில் செத்துப் போனார்கள்.

உரிமை வேண்டிய போராட்டம் ஊழல்வாதிகளை அகற்றும் போராட்டம். இப்படி உலகம்முழுவதும் போராட்டமும் மரணமும் அழிவும் கலந்து கொண்டே இருக்கும் சூழ்நிலையில், உலகம் அழியப்போகிறது என்று ஒரு கூட்டம் கொடிபிடிக்கிறது.

இன்னுமொரு கூட்டம் உலகம் அழியப் போகிறது, தங்கள் மதத்தில் சேர்ந்து கொள்ளுங்கள் என்று பிரச்சாரம் செய்கிறது.

மனிதன் மனிதனாக வாழ முடியாமல் உலகம் முழுக்க நாயோட்டமும் அந்தரப் பாய்ச்சலுமாக ஓடிக் கொண்டிருக்கிறான். வாழ்வு என்பது இப்பொழுது பெரும் பிரயத்தனத்துக்கு மத்தியில் ஓடிக் கொண்டிருக்கிறது.

உலகத்துக்கு, தன் தனது ஆத்மாவுக்கு நேர்மையாளனாக இருப்பதே ஒவ்வொரு மனிதனுக்கும் முன்னுள்ள பெரும் சவால்.

அதனைச் செய்தாலே உலகம் தப்பித்துவிடும். பேராசை மனிதனை துரத்திக் கொண்டிருக்கிறது. மற்றவனைக் கொன்று தன் வாயில் போட அரசன் முதல் ஆண்டிவரை யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மனிதனின் பேராசையே அவனது அழிவுக்குக் காரணம்.

உலகம் 2012 இல் அழியப் போகிறது என்பதெல்லாம் கட்டுக்கதை. அப்படி ஒன்றும் நடக்காது. 2013 இல் நாமெல்லாம் இருப்போம். பயப்படாதீர்கள். ***

# நீலாவணன் ஏற்றிய விளக்கு



**மைதிலி.தேவராஜா**

மின்சாரம் இல்லாத பிரதேசங்கள் எமது நாட்டில் நிறையவே உள்ளன. அத்தகைய பிரதேசங்களில் வாழ்பவர்கள் மாலை வேளையில் தமது மனைகளில் விளக்கேற்றி இருளைப் போக்குவர் இருள் பரவத் தொடங்கும் முன்னரே விளக்கேற்றுவதற்கான ஆயத்தங்களைச் செய்வதும் வழக்கம். சூரியன் தனது மேற்கு வானப் பயணத்தின் இறுதியைத் தொடும்போது, படிப்படியாக ஒளி மங்கும் வேளையில் விளக்கையும் அதற்கான எண்ணெய், திரி, நெருப்புப் பெட்டி என்பவற்றையும் தேடி எடுத்து ஆயத்தங்கள் செய்வது வழமையாகும். அவ்வாறான முன்னாயத்தங்களைத் தவறவிட்டால் இருட்டிலே அவற்றைத் தேடி அல்லலுறுவதும் பல வேளைகளில் நிகழ்வதுண்டு. இவை எமது இல்லங்களில் நிகழும் சாதாரண நிகழ்வுதான் கவிஞர் நீலாவணன், தனது வீட்டிற்கு இருட்டியபின் வந்தவை நடந்தவற்றை இனிய கவிதையிலே தந்திருக்கின்றார்.

விருந்துண்டு கிடக்கிறது விளக்கேற்ற வேண்டும்
வெளியே போய் வெகுநேரம் தாமதமாய் மீண்டேன்

இவ்வாறு மீண்ட ஒரு நாளில் அவர் பாதை வெங்கும் இருள் பரவியுள்ளது. மையிருட்டில் கள்வர்கள், பேய், பாம்பு இவைகளுக்காகப் பயந்தபடி ஓடோடி வீட்டுக்கு வருகிறார். அவர் தனியாக இருக்கும் அந்த வீட்டிலே வேறெவரும் இல்லை. வீடு பூட்டி இருக்கிறது. ஆனால், அங்கே இருட்காலம் என்கின்ற கருங்கிழவன் காத்திருக்கின்றான். என்று செல்லும் கவிஞர், வீடு தனிமையில் இல்லை. கருங்கிழவன் ஒருவன் அங்கே குடியேறி இருப்பான் என்கின்றார்.

கரும்புகையாய் அங்கு சூழ்ந்துள்ள இருளுக்குள் கைகளால் துளாவித் தன் பையிருக்கும் சாவியை எடுத்துக் கதவைத் திறக்கின்றார்.

இருட்டில் மெய்ப் பையின் வாய் துளாவுகிறேன் சாவி
எடுத்தில்லின் தலைவாசல் கதவு திறக்கின்றேன்
திருட்டொன்றும் போகவில்லை உள்ளறையும் திறந்து
தீப்பெட்டி எடுத்ததனைக் கிழித்து விளக்கேற்றித்
தெருப்பக்க யன்னல்களை திறந்து வைத்தேன் தனியே
திருப்தி பாயில்லைத் தெம்போடிருக்கின்றேன் என்கின்றார்.

இத்தனைக்கும் முன்னாக, இருட்டில் ஒளியேற்றும்வரை அங்கே காவலிருந்த கருங்கிழவனின் இருட்குகைக்குள் விளக்கேற்றத் தேவையான எல்லாம் இருந்தன. ஆனால் ஒளி இல்லை. ஒளி பரவத் தீ மூளவில்லை. வீட்டினுள்ளே கருங்கிழவனின் வருகையால் மூதேவி ஆட்சி செய்கின்றாள். எண்ணெய், எண்ணெய் விட்டெரிக்கும் பாத்திரம், ஒளி சுடரும் திரி, மின்னி இரைந்து புகைந்து எரியும் தீக்குச்சு எனைவுமே தனித்து ஒளி தரும் விளக்காகாது. அந்த இருட்டில் தட்டுத் தடுமாறி அவற்றை ஒன்று சேர்த்து ஒளியேற்ற வேண்டும். அத்தனை பொருட்களையும் தேடி எடுத்தாற்றான் விளக்கெரியும். வெளிச்சம் பரவும்.

காலமெனும் கருங்கிழவன் காத்திருந்தான் எண்ணெய்
கலன்களிலே கலன்கலனாய் நிறைந்திருந்த தண்ணமை
கோலவெழில் விளக்குகளும் குறைவில்லை குச்சி
குறையாத தீப்பெட்டி மூலையிலே தூங்கும்
மூளவில்லை விளக்கெரிய முடியவில்லை உள்ளே
மூதேவி ஆட்சி செய்ய முயல்கின்றாள் வல்லே

என்கின்ற கவிஞர் காலத்தால் இருண்ட இயற்கைக் கருமையைக் கருங்கிழவன் என உவமிக்கும் அவரின் மொழிச் சிறப்பும் இருள் படர்ந்த அறைக்குள் மூதேவி ஆட்சி செய்வாள் என்ற கற்பனையும் கவிதையின் பொருட்சிறப்புக்கு உதாரணங்களாகும்.

எண்ணெய்விளக்காய்விடுமோ எண்ணெய்
விட்டெரிக்கும் ஏனந்தான் விளக்காமோ எரிகின்ற திரியோ
மின்னிஇரைந்தே புகைந்து எரியுந் தீக்குச்சி
விளக்காமோ விளக்கென்னில் மேற்குறித்த யாவும்
ஒன்றுகுறை யாமலுள்ளே உள்ளனவே ஏனும்
உள்ளுக்குள் ஒளியில்லை வழி தெரியவில்லை

எல்லாம் இருந்தாலும் அந்த இருட்டைக் கிழித்து, அவற்றைத் தடவித் தேடிச் சேர்த்து எடுத்தாலும் ஒளிசுடர வைக்கும் ஓர் உயிர் வேண்டும். அப்பொழுது தான் ஒளி பரவும் இருள் அகலும். இப்பொழுது:

விருந்துண்டு கிடக்கவில்லை விளக்கேற்றி விட்டேன்
வீதியிலே போவோர்க்கும் ஒளிவிழுதல் கண்டேன்

ஒவ்வொரு வீட்டிலும் இருள் கலைக்க ஒளியேற்றுதல் வழமையெனினும் அந்த ஒளியை இருட்டிய பின்னர் ஏற்றப் புறப்படுவோருக்கு ஏற்படுகின்ற இன்னல்களையும் ஒளியேற்றிய பின்னர் விளைவையும் இன்பத்தையும் விளக்கு என்னும் கவிதையில் கவிஞர் நீலாவணன், நயம்படச் சொல்லியுள்ளார்.

கவிஞர் நீலாவணனின் இயற்பெயர் சின்னத்துரை அவரது பெற்றோர் கேசகப்பிள்ளை வைத்தியர், தங்கம்மா ஆகியோராவார். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர் 31.05.1931 இல் பிறந்தவர் கல்முனையில் கல்வி கற்றார். இலக்கிய உலகில் குறுங் காவியம், பா நாடகம், புனைகதைகள், கட்டுரைகள் எனப் பலவற்றை ஆக்கிப் பல்லாண்டுகள் பிரகாசித்தார். ஈழத்தின் நவீன கவிதை முன்னோடிகளின் வரிசையில் மகாகவி, முருகையன் ஆகியோருடன் தன்னையும் இணைத்துக் கொண்டவர். 11.01.1975இல் அமரரானார் இவரது மகனான எஸ்.எழில்வேந்தன், கவிஞரின் கவிதைகளைத் தொகுத்து ஒத்திகை எனும் நூலாக வெளியிட்டுள்ளார். ★★★

# கவிதைப்புனல்





## உனக்காக நான்

அன்பே....
நீ சுவாசிக்கும் காற்றாய்ப் பிறந்திருந்தால்
உன் இதயத்தைத் தினமும் தொட்டிருப்பேன்
நீ அணியும் ஆடையாய்ப் பிறந்திருந்தால்
உன் மானத்தைக் காத்திருப்பேன்
நீ அருந்தும் நீராய்ப் பிறந்திருந்தால்
உன் உதிரத்தில் கலந்திருப்பேன்
நீ பேசும் கைத்தொலைபேசியாய்ப் பிறந்திருந்தால்
தினமும் உன் கன்னத்தில் தவழ்ந்திருப்பேன்
இவையெல்லாம் ஏன் பெண்ணே
ஓர் மெழுகுதிரியாகப் பிறந்திருந்தால்
உனக்கு ஒளியைக் கொடுத்து
என் உயிரை உருக்கியிருப்பேன்....

**ச. வசந்தராஜ்,**
பருத்தித்துறை.

## எழுதிடு செந்தமிழ்

கனவை எழுதிடு விழிகளில் - வல்ல
காவியம் தோன்றிடும் மொழிகளில்
நினைவு செழித்திட வாழ்க்கையில் - நல்ல
நீதியைக் காத்திடு வாய்மையில்

இதயத் தெழுதிடு இலட்சியம் - அவை
இலங்க உழைத்திடு நிச்சயம்
உதய மாகிடும் உன்னதம் - இந்த
உலகம் உயர்த்திடும் உன்வரம்

உதட்டில் எழுதிடு புன்னகை - வாழும்
உறவைப் பெருக்கிடும் வல்லமை
விரட்டித் துயர்களை என்றுமே - வெல்லும்
வேங்கைகள் ஆகிநில் வீரமே

அறிவை எழுதிடு செந்தமிழ் - இருள்
அச்சம் தகர்த்திடும் மெய்யெழில்
நெறிகள் பயின்றிடு நெஞ்சுரம் - வாழ்வு
நிகரில் வளம் பெறும் நல்லறம்.

செ.மகேந்திரன்.



## என் காதல்

ரோமியோ யூலியட்,
லைலா மஜ்னு,
அம்பிகாவதி அமராவதி,
அனார்கலி சலிம்,
பார்வதி தேவதாஸ்,
தோல்வியடைந்த காதல்களே
போற்றப்படுகின்றன.
என் காதலும்
போற்றுதற் குரியது தான்.

- உமா பாரதி.

## காதலர் தினம்



காதலில் வென்றோரே
இன்றுங்கள் சுதந்திர தினம்
காதலுக்காகப் போராடுவோரே
இது உங்கள் எழுச்சி தினம்
காதலில் தோற்றோரே
இன்றுங்கள் நினைவு தினம்
காதலர்களே கொண்டாடுங்கள்
இதுவே காதலர் தினம்

- எஸ்.ஜெயகண்ணா.

## மரணித்துப்போன மானுடம்

மனிதகுல வரலாற்றில்
மரணித்த மானுடங்களிலொன்றாய்
முள்ளிவாய்க்காலும்
மூர்ச்சையிழந்துபோனது!

பாஞ்சாலியின் ஆடையைப்போல
எங்கள் ஆடைகளும்
களையப்பட்டுக்கொண்டிருந்தபோது
நாம் உங்களை அழைத்தோம்
நீங்களும் வந்தீர்கள்!
ஆடைகளோடல்ல
கமராக்களோடு....

**தியாகராசா கோபிநாத்**
யாழ். பல்கலைக்கழகம்.

## மாற்றம்

நேற்றுவரை
என்
காதலியாக மனவெளியில்
கோலமிட்டவளே!
இன்றேனோ
இன்னொருவன்
கை தொட்டு மணக்கோலத்திலே
நீ
என் மனக்கோலத்திலோ
புயல்....

ஜே.எஸ்.ராஜ்,
யாழ் பல்கலைக்கழகம்.



| திகதி | நேரம் | போட்டி | மைதானம் |
|---|---|---|---|
| 19.பெப் | பி.ப 2.30 | இந்தியா- பங்களாதேஷ் | மிர்ப்பூர் சர்வதேச கிரிக்கெட் அரங்கு ,பங்களாதேஷ் |
| 20.பெப் | மு.ப9.30 | கென்யா- நியூஸிலாந்து | சிதம்பரம் சர்வதேச கிரிக்கெட் அரங்கு ,இந்தியா |
| 20.பெப் | பி.ப 2.30 | இலங்கை- கனடா | மகிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் அரங்கு , இலங்கை |
| 21.பெப் | பி.ப2.30 | ஆஸ்திரேலியா- சிம்பாவே | அகமதாபாத் சர்வதேச கிரிக்கெட் அரங்கு, இந்தியா |
| 22.பெப் | பி.ப2.30 | இங்கிலாந்து- நெதர்லாந்து | நாக்பூர் சர்வதேச கிரிக்கெட் அரங்கு , இந்தியா |
| 23.பெப் | பி.ப2.30 | கென்யா- பாகிஸ்தான் | மகிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் அரங்கு , இலங்கை |
| 24.பெப் | பி.ப2.30 | தென்னாபிரிக்கா-மேற்கிந்தியத்தீவுகள் | டெல்லி சர்வதேச கிரிக்கெட் அரங்கு, இந்தியா |
| 25.பெப் | மு.ப9.30 | பங்களாதேஷ்- அயர்லாந் | மிர்ப்பூர் சர்வதேச கிரிக்கெட் அரங்கு ,பங்களாதேஷ் |
| 25.பெப் | பி.ப2.30 | ஆஸ்திரேலியா- நியூஸிலாந்து | நாக்பூர் சர்வதேச கிரிக்கெட் அரங்கு , இந்தியா |
| 26.பெப் | பி.ப 2.30 | இலங்கை- பாகிஸ்தான் | ஆர்.பிரேமதாசா சர்வதேச கிரிக்கெட் அரங்கு , இலங்கை |
| 27.பெப் | பி.ப2.30 | இந்தியா- இங்கிலாந்து | பெங்களூர் சின்னச்சாமி மைதானம், இந்தியா |
| 28.பெப் | மு.ப9.30 | கனடா- சிம்பாவே | நாக்பூர் சர்வதேச கிரிக்கெட் அரங்கு , இந்தியா |
| 28.பெப் | பி.ப2.30 | நெதர்லாந்து- மேற்கிந்தியத்தீவுகள் | டெல்லி சர்வதேச கிரிக்கெட் அரங்கு, இந்தியா |
| 01.மார்ச் | பி.ப2.30 | இலங்கை- கென்யா | ஆர்.பிரேமதாசா சர்வதேச கிரிக்கெட் அரங்கு , இலங்கை |
| 02.மார்ச் | பி.ப2.30 | இங்கிலாந்து- அயர்லாந்து | பெங்களூர் சின்னச்சாமி மைதானம், இந்தியா |
| 03.மார்ச் | மு.ப9.30 | நெதர்லாந்து- தென்னாபிரிக்கா | பஞ்சாப் கிரிக்கெட் சங்க மைதானம், இந்தியா |
| 03.மார்ச் | பி.ப2.30 | கனடா- பாகிஸ்தான் | ஆர்.பிரேமதாசா சர்வதேச கிரிக்கெட் அரங்கு , இலங்கை |
| 04.மார்ச் | மு.ப9.30 | நியூஸிலாந்து-சிம்பாவே | அகமதாபாத் சர்வதேச கிரிக்கெட் அரங்கு, இந்தியா |
| 04.மார்ச் | பி.ப2.30 | பங்களாதேஷ்- மேற்கிந்தியத்தீவுகள் | மிர்ப்பூர் சர்வதேச கிரிக்கெட் அரங்கு ,பங்களாதேஷ் |
| 05.மார்ச் | பி.ப2.30 | இலங்கை- ஆஸ்திரேலியா | ஆர்.பிரேமதாசா சர்வதேச கிரிக்கெட் அரங்கு , இலங்கை |
| 06.மார்ச் | மு.ப9.30 | இங்கிலாந்து- தென்னாபிரிக்கா | சிதம்பரம் கிரிக்கெட் அரங்கு , இந்தியா |
| 06.மார்ச் | பி.ப2.30 | இந்தியா - அயர்லாந்து | பெங்களூர் சின்னச்சாமி மைதானம், இந்தியா |
| 07.மார்ச் | பி.ப2.30 | கனடா- கென்யா | டெல்லி சர்வதேச கிரிக்கெட் அரங்கு, இந்தியா |
| 08.மார்ச் | பி.ப2.30 | நியூஸிலாந்து- பாகிஸ்தான் | பல்லேகல சர்வதேச கிரிக்கெட் அரங்கு, இலங்கை |
| 09.மார்ச் | பி.ப2.30 | இந்தியா- நெதர்லாந்து | டெல்லி சர்வதேச கிரிக்கெட் அரங்கு, இந்தியா |
| 10.மார்ச் | பி.ப2.30 | இலங்கை - சிம்பாவே | பல்லேகல சர்வதேச கிரிக்கெட் அரங்கு, இலங்கை |
| 11.மார்ச் | மு.ப9.30 | அயர்லாந்து- மேற்கிந்தியத்தீவுகள் | பஞ்சாப் கிரிக்கெட் சங்க மைதானம், இந்தியா |
| 11.மார்ச் | பி.ப2.30 | பங்களாதேஷ்- இங்கிலாந்து | சிட்டக்கொங் சர்வதேசக் கிரிக்கெட் அரங்கு, பங்களாதேஷ் |
| 12.மார்ச் | பி.ப2.30 | இந்தியா- தென்னாபிரிக்கா | நாக்பூர் சர்வதேச கிரிக்கெட் அரங்கு , இந்தியா |
| 13.மார்ச் | மு.ப9.30 | கனடா- நியூஸிலாந்து | மும்பை சர்வதேச கிரிக்கெட் அரங்கு, இந்தியா |
| 13.மார்ச் | பி.ப2.30 | ஆஸ்திரேலியா- கென்யா | பெங்களூர் சின்னச்சாமி மைதானம், இந்தியா |




# இலங்கைப் போட்டிகள் ரசிகர்களைக் கவருமா?



உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு இன்னும் இரண்டு வாரங்களே இருக்கின்றன. இந்த நிலையில் காலநிலையில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் காரணமாக போட்டிகள் ஒழுங்காக இடம்பெறுமா என்ற சந்தேகம் பலரிடத்தேயும் தோன்றியுள்ளது.

இலங்கை முழுவதும் தொடர்ச்சியாக சீரற்ற காலநிலையே நிலவி வருகின்றது. இதனால் இலங்கையில் இடம்பெறவுள்ள 12 போட்டிகளும் சீராக இடம்பெறுமா என்பது சந்தேகமே.

கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற இலங்கை-மேற்கிந்தியத்தீவுகள் இடையிலான போட்டி மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் ஜனவரி மாதம் மீண்டும் எஸ்.எஸ்.ஸி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இப்போட்டியும்கூட மழையால் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றது. முதலாவது போட்டி மழையால் முடிவு தெரியாமல் முடிக்கப்பட்டது. இரண்டாவது போட்டியும் மழையால் டக்வேத் லூயிஸ் முறைப்படியே வெற்றி தீர்மானிக்கப்பட்டது. மூன்றாவது போட்டி தப்பித்தாலும் மழை முகில்களின் முற்றுகைக்குள்ளேயே இந்தப் போட்டியும் இடம்பெற்றது.



இந்த நிலையில் நாட்டின் பல பகுதிகளிலும் கடந்த வாரம் பெய்த கடும் மழை பெய்தது. இந்த நிலைமை தொடர்ந்து நீடிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்திருக்கிறது. இலங்கையில் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் அரங்கு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ளது. கண்டி மாவட்டத்திலுள்ள பல்லேகல கிரிக்கெட் மைதானம் , கொழும்பிலுள்ள ஆர்.பிரேமதாச மைதானம் ஆகிய இடங்களிலேயே போட்டிகள் இடம்பெற உள்ளன. இந்தப் பிரதேசங்கள் மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன.

இவற்றைவிட இலங்கையில் இந்தக் காலப்பகுதிகளிலேயே உள்ளூராட்சி சபைத் தேர்தல்களும் இடம்பெற உள்ளன. போட்டிகள் இடம்பெறுகின்ற இடங்களில் தேர்தல்கள் இடம்பெறவில்லையாயினும் ஏனைய இடங்களில் இக்காலப் பகுதிகளில் இடம்பெற இருக்கின்றன.

மேற்குறிப்பிட்ட இருவிடயங்களும் இலங்கையில் இடம்பெற இருக்கின்ற போட்டிகளை நிச்சயமாக பாதிக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. இதன் தாக்கம் சொந்த மண்ணில் இலங்கை விளையாடும் போதும் ரசிகர்களின் ஆதரவை இழக்கப்போகின்றதென்பதே வேதனையான விடயம்.

TM






# திருப்புமுனையாக அமைந்தவர்கள்

1975 - 2007 வரை 9 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள். 5 வீரர்கள் ஹாட்ரிக் விக்கெட் சாதனை. இந்தியாவின் சேத்தன் சர்மா ஆரம்பித்து வைத்தவர். பாகிஸ்தானின் சக்லைன் முஷ்டாக், இலங்கையின் சமிந்தா வாஸ், அவுஸ்திரேலியாவின் பிரெட் லீ, இலங்கையின் லசித் மலிங்கா ஆகியோர் பின் தொடர்ந்தவர்கள்.

**சேத்தன் சர்மா**

1987 ஆம் ஆண்டு உலகக் கோப்பை சேத்தன் சர்மாவுக்கு சொந்தமண். நாகபுரியில் லீக் ஆட்டம். இந்தியா எதிர்த்தது நியூசிலாந்தை. முதலில் துடுப்பாட்டம் நியூஸி.

நியூஸிலாந் 181/5. நல்லதொரு நிலை நியூஸிலாந்து. இந்த நிலை தொடரின் தலையிடி இந்தியாவுக்கு.கபில் தேவ் நீண்ட யோசனை. முடிவுக்கு வந்தவராய் அழைத்தார் சேத்தன் சர்மாவை பந்துவீச. வந்தவர் தலைவரின் எண்ணத்தை ஈடேற்றினார். ரூதர் போர்ட் கிளீன் போல்ட். அவர் அணிக்காய் சேர்த்தது 26 ஓட்டங்கள். களத்துக்கு வந்தார் இயன் ஸ்மித்.அவரும் கிளீன் போல்ட். பாவம் நியூஸி. சேத்தன் ஹாட்ரிக்கை நெருங்கினார். அடுத்த பந்து விக்கெட் வீழ்த்துமா? எதிர்பார்ப்பு இந்திய ரசிகர்களுக்கு. சொந்தமண் ஆதரவுக் கரங்களின் கரகோஷம். நம்பிக்கை வீண் போகவில்லை.

இவென் ஷட்பீல்ட் கிளீன் போல்ட். ஹாட்ரிக் சாதனை படைத்தார் சேத்தன். இந்தியாவுக்கு பெருமை. மூன்று விக்கெட்டுகளும் வீழ்ந்தன போல்ட் முறையில். இந்த பெருமை சேத்தனுக்கு மட்டுமே.

**சக்லைன் முஷ்டாக்**

1999 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் உலகக் கோப்பை போட்டிகள். சுப்பர் சிக்ஸில் சிம்பாவேயை எதிர்த்தாடியது பாகிஸ்தான். 40 ஆவது ஓவர் வீச அழைக்கப்பட்டார் சக்லைன் முஷ்டாக். ஓவரின் முதல் பந்து ஹென்றி ஒலங்காவுக்கு வீசினார். ஒலங்காவின் அவசரம். அதைப் பயன்படுத்தி விட்டார் மொயின் கான். ஸ்ரெம்ப் மூலம் ஆட்டமிழந்தார். இரண்டாவது பந்தில் ஹக்கிள் எதிர் கொள்ள வந்தார். அவருக்கும் மொயின்கானால் விடைகொடுப்பு. பங்வாக்கு தடுக்க வேண்டிய நிர்பந்தம். நிர்பந்தத்தை ஏற்படுத்தியவர்கள் முதல் இருவரும். இவரும் சென்றால் முடிந்து விடும் சிம்பாவே இன்னிங்ஸ். தடுத்தார் பந்தை. துடுப்பால் அல்ல தன் காலால். இதனால் நடுவர் தூக்கிக் காட்டி விட்டார் தன் விரலை. இதனால் சிம்பாவே முடிவு. சக்லைனுக்கு ஹாட்ரிக்.

**சமிந்த வாஸ்**

ஆபிரிக்க கண்டத்தில் போட்டிகள். இலங்கையின் நாமம் இந்தப் போட்டிகளில் ஒலித்த நாமம். மலைக்கும் மடுவுக்கும் போட்டி. இலங்கையை எதிர்த்தது பங்களாதேஷ். முதல் கோணல் முற்றும் கோணல். நாணய சுழற்சியில் தோற்றால் பங்களாதேஷ் அணிக்கு துடுப்பெடுத்தாடும் வாய்ப்பு.

பெப்போதும் ஆட்டத்தை ஆரம்பிக்கும் வாஸ் வழக்கம் போல் ஆரம்பித்தார். ஓவரின் முதலாவது பந்து ஹன்னன் சர்க்கார் எதிர் கொண்டார். பந்து பட்டது துடுப்பில் இல்லை. நேரடியாக ஓவ் ஸ்ரெம்ப் விக்கெட்டை தகர்த்தெறிந்தது. முகமது அஷ்ரபுல் சந்தித்த முதல் பந்து துடுப்பிலிருந்து நேரே சென்றது வாஸின் கைகளுக்கு. தப்பவில்லை பந்து வாஸின் கைகளிலிருந்து. முதல் ஓவரிலேயே ஹாட்ரிக் சாத்தியமா? விவாதம் நடத்தியவர்கள் வர்ணனையாளர்கள். அவர்களது வர்ணனைக்கு பதில் கொடுத்தார் வாஸ். இசனுல் ஹக் இவர்தான் மூன்றாவது பந்தை சந்திக்க வந்தவர். பாவம் பந்து இவர் துடுப்பில் பட்டு பறந்தது. பாய்ந்து பிடித்து விட்டார் மஹேல. வாஸுக்கும் அன்று முதல் ஹாட்ரிக்கு சொந்தம்.

**பிரெட் லீ:**

ஆஸியின் வேகப் புயல் இவர். 2003 ஆம் ஆண்டு உலகக்கிண்ணம் கைப்பற்ற இவனும் ஒரு பங்கு. இவனால் காயம் பட்டவர்கள் பலர்.

கென்யாவுடன் ஆஸிக்கு ஆட்டம். நான்காவது ஓவருக்கு பிரெட் லீ அழைப்பு. ஓவரின் 4 ஆவது பந்து ஒட்டியானோ ஒரு ஓட்டத்துடன் போல்ட். அடுத்த பந்தை பட் மேல் தட்டி விட்டார். இருந்தும் பிடி எடுத்து விட்டார் பொண்டிங். இறுதிப் பந்துக்கு வந்தார் ஒடுயா. அவரும் போல்ட். லீயின் கைக்கு வந்தது ஹாட்ரிக்.

**லசித் மலிங்க:**

சுப்பர்-8 சுற்றில் இலங்கை பிரவேசம். தென்னாபிரிக்காவை எதிர்த்தது. முதலில் துடுப்பெடுத்தாடியது.


ஓட்டங்கள் போதாது வெல்வதற்கு இலங்கைக்கு. இருப்பினும் வெல்ல முடியும் நம்பிக்கை இருந்தது இலங்கைக்கு.

தென்னாபிரிக்கா வெல்வது உறுதி. வெற்றிக்குத் தேவை நான்கு ஓட்டங்கள். கைவசம் இருப்பதோ ஐந்து விக்கெட்டுக்கள். களத்தில் இருப்பதோ கலிஸ்-பொலக். 44 ஆவது ஓவர் வீச மலிங்கவுக்கு அழைப்பு விடுத்தார் மஹேல. வந்தவர் முதல் நான்கு பந்துக்கும் ஓட்டம் வழங்கவில்லை. ஜோக்கருக்கு பெயர் பெற்றவர் மலிங்க. ஐந்தாவது பந்தில் தன் வித்தையை காட்டினார். பொலக்கின் பொல்லுப் பறந்தது. அடுத்து வந்தார் ஹோல். அவருக்கும் ஜோக்கர். காலைக் காக்க துடுப்பை வைத்தார் ஹோல். துடுப்பில் பட்டு எழும்பிய பந்து தரங்கவின் கைகளில் தஞ்சம். தொடர் இழப்பு இருந்தும் நம்பிக்கை இலங்கைக்கு.

45 ஓவர் ஜெயசூரியவின் கைவண்ணம். ஒரு ஓட்டம் மட்டும் வழங்கினார் தென்னாபிரிக்காவுக்கு. மீண்டும் 46 ஓவர் மலிங்க. ஹாட்ரிக்குக்கு ஆவலாய் இருந்தனர். கலிஸ் பந்தை எதிர் கொண்டார். பலருக்கு நம்பிக்கை. மலிங்கவின் ஹாட்ரிக் தவறும் என்று. காரணம் கலிஸ் எதிர்ப்பதால். கலிஸும் சிறப்பாய் தடுத்தார். இருந்தும் பந்து அவரின் சொல் கேட்காமல் சங்காவின் கைக்குள் புகுந்தது. இவருக்கும் ஜோக்கர் பந்து. வெற்றி கொஞ்சம் தடுமாறத் தொடங்கியது. வெற்றிக்குத் தேவை 3 ஓட்டங்கள். இருப்பது இரண்டு விக்கெட்டுக்கள். நிற்னி நிலைத்தாட வந்தார். விடுவாரா மலிங்க. வீழ்த்தி விட்டார் ஜோக்கர் பந்தில். சூழ்ந்தது சோகம் தென்னாபிரிக்கர்களை. வெற்றி யாருக்கு? இருந்தும் தப்பி பிழைத்து மீட்டனர் வெற்றியை தென்னாபிரிக்கர்கள்.



மலிங்க



பிரெட் லீ

வாஸ்

சக்லைன் முஸ்டாக்

சேத்தன் சர்மா



# பிபாஷா பாசு மீது வழக்கு

பத்திரிகை ஒன்றிற்கு ஆபாச போஸ் கொடுத்த பாலிவுட் நடிகை பிபாஷா பாசு மீது கோர்ட்டில் புகார் செய்யப்பட்டுள்ளது. லக்னோ மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நிசார் முகமது என்ற வக்கீல் ஒரு புகார் மனு தாக்கல் செய்தார்ல அதில், 'ஜனவரி மாத 'மேக்சிம் புத்தகத்தில் பிபாஷா பாசுவின் படம் மிகவும் ஆபாசமாக பிரசுரமாகியுள்ளது. அந்த புத்தகத்தை பார்த்த என் மனைவி, குழந்தைகள், உறவினர்கள், நண்பர்கள் ஆத்திரம் அடைந்து அந்த புத்தகத்தை தூக்கி எறியும்படி கூறினார்கள். ஆகவே ஆபாசமாக போஸ் கொடுத்த பிபாஷா பாசு மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிடப் பட்டிருந்தது. மனுவை 'பெற்றுக் கொண்ட தலைமை மாஜிஸ்திரேட் ஆர்.ஜி.சிங், இந்த மனு மீதான விசாரணை 15ம்தேதி நடைபெறும் என்று அறிவித்தார்.



# ஆபாச எஸ்.எம்.எஸ்!

பெங்களூரைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் தன் மகளுக்கு தொடர்ந்து ஆபாச, மிரட்டல் எஸ்.எம்.எஸ்., அனுப்பி வருவதாக நடிகை சினேகாவின் தந்தை போலீஸ் கமிஷனரிடம் புகார் அளித்தார். சென்னை, தி.நகர், வடக்கு போக் சாலையைச் சேர்ந்தவர் ராஜாராம் நாயுடு நடிகை சினேகாவின் தந்தை. இவர், நேற்று சென்னை மாநகர பொலீஸ் கமிஷனரை சந்தித்து புகார் அளித்தார். அதில் அவர் கூறியுள்ளதாவது: எனது மகளுக்கு பெங்களூரைச் சேர்ந்த ராகவேந்திரா என்ற வாலிபர் ஏற்கனவே அடிக்கடி ஆபாச, மிரட்டல் எஸ்.எம்.எஸ்.,கள் அனுப்பி வந்ததால், புகார் செய்யப்பட்டு, சைதாப்பேட்டை கோர்ட்டில் வழக்கு நடந்து வருகிறது. இந்நிலையில், சமீப காலமாக தொடர்ந்து மீண்டும் அடிக்கடி எஸ்.எம்.எஸ்.,கள் அனுப்பி டார்ச்சர் செய்து வருகிறார். அதனால், சினேகா மன உளைச்சலுக்கு உள்ளாகி இருக்கிறார் என்றார். புகாரை பெற்றுக் கொண்ட கமிஷனர் ராஜேந்திரன், உளவுப்பிரிவு போலீசாரை விசாரிக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

# முத்துக்கு முத்தாக

பாண்டி நாடு தியேட்டர்ஸ் பட நிறுவனம் சார்பில் நேசிகா தயாரிக்கும் படம் முத்துக்கு முத்தாக. இளவரசு, சரண்யா பொன்வண்ணன், மிளகா நட்ராஜ், விக்ராந்த், ஹரீஷ், வீரசமர், கஜினி, ரகுவண்ணன், பிரகாஷ், ராஜ்கபூர், ஓவியா, மோனிகா, சுஜிபாலா உள்ளிட்டோர் நடித்துள்ள இப்படத்திற்கு கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார் டைரக்டர் ராசு மதுரவன். வன்முறை இல்லாமல் குடும்ப படமாக உருவாகியிருக்கும் இப்படம் குறித்து டைரக்டர் ராசுமதுரவன் கூறுகையில், உறவுகள் பிரிவால் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இக்கால கட்டத்தில் அதன் வலிமை மற்றும் வலிகளை சொல்லும் படமாக இது உருவாகிறது. இப்படிப்பட்டவர்கள் தங்களுக்கு பிள்ளையாக பிறக்கவில்லையே என பெற்றோர்களையும் இப்படிப்பட்ட பெற்றோர்களை பார்த்து பிள்ளைகளையும் ஏங்க வைக்கும் படமாக இருக்கும், என்றார்.இந்த படத்திற்கு யு.கே. செந்தில்குமார் ஒளிப் பதிவு செய்ய, கவி பெரியசாமி இசையமைக்கிறார். பாடல்களை நா.முத்துக்குமார், நந்தலாலா, உமா சுப்பிரமணி யன், கவி பெரியசாமி, ராசு மதுரவன் ஆகியோர் எழுதியுள்ளனர்.






# பதினாறு திரை விமர்சனம்

வழக்கமான காதல் கதைதான் பதினாறு. ஆனால் அதை வித்தியாசமாகவும், விறுவிறுப்பாகவும் சொல்லியிருக்கும் விதம்தான் தொண்ணூற்று ஆறையும் ரசிக்க வைத்திருக்கிறது என்றால் மிகையல்ல! சிவாவும், மதுசாலினியும் கல்லூரி காதல் ஜோடி! மதுவின் வசதியான தந்தை அபிஷேக்கும், அவரது மனைவியும் இந்த காதலுக்கு எல்லா வகையிலும் எதிர்ப்பு தெரிவிக்க, மதுவோ ஏழை இளைஞனான சிவாவை விடாமல் காதலிக்கிறார். அவர்களது காதலைப் பிரிக்க கடைசி அஸ்திரமாக பதினாறு எனும் நாவலை படிக்க கொடுக்கிறார் அபிஷேக்கின் மனைவி. காதல் நாவலான பதினாறு, அதன் பின் திரையில் ஓட.., அதில் கிராமத்து வசதியற்ற மாணவனுக்கும், வசதியான பள்ளி மாணவிக்குமிடையேயான காதல், கைகூடாமல் போன கதை சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கதையை படித்த பின்பும் மனம் மாறாத சிவா, அந்த கதையில் இடம்பெற்ற பாத்திரங்களைத் தேடிப் புறப்படுகிறார். அவ்வாறு புறப்பட்ட சிவாவிற்கு கிடைத்த விடை என்ன? எத்தனையோ காதல் கதைகள் இருந்தும் பதினாறு கதையை அபிஷேக்கின் மனைவி மதுசாலினி - சிவா ஜோடியிடம் கொடுக்க காரணம் என்ன? சிவா - மது காதல் கடைசியில் கைகூடியதா, இல்லையா? என்பது உள்ளிட்ட இன்னும் பல வினாக்களுக்கு இனிமையாகவும், இளமையாகவும் விடையளிக்கிறது பதினாறு படத்தின் மீதிக்கதை. சென்னை 29, தமிழ்ப்படம் உள்ளிட்ட படங்களில் நடித்த நடிகரா இது? எனக் கேட்கும் அளவுக்கு வித்தியாசமாக நடித்திருக்கிறார் சிவா. ஆங்காங்கே அவருக்கே உரித்தான நையாண்டித்தனமும், நக்கலும் வெளிப்பட்டாலும் படத்தின் இயல்பு மாறாமல் நகரத்து காதலராக நச்சென்று நடித்திருக்கிறார் மனிதர். பேஷ்..! பேஷ்..!! சிவாவை விட, சின்ன வயது அபிஷேக்காக கிராமத்து காதலர் கிஷோருக்கு நடிக்க நிறையவே வாய்ப்பு. அத்தனை வாய்ப்புகளையும் அழகாக பூர்த்தி செய்து ஜொலித்திருக்கிறார் புதுமுகம் கிஷோரும். சில இடங்களில் சிவா - மதுவின் கிராமத்து காதலைவிட, பதினாறு கதையாக சொல்லப்படும் கிஷோர் - வினிதாவின் கிராமத்து காதல் ரசிகர்களை உருக்கி எடுத்து விடுகிறது என்றால் அது பொய்யல்ல!

சிவா - கிஷோர் மாதிரியே நகரத்து காதலி மது, கிராமத்து காதலி வினிதா இருவரும் பாத்திரத்திற்கேற்ற பளீச் தேர்வு! அதிலும் புதுமுகம் வினிதா பிரமாதம்! அப்பா விட்ட சவாலுக்கு பதிலடியாக கோவிலுக்குள் சென்று கதவை மூடிக் கொண்டு உடுத்தியிருக்கும் துணிமணிகளை அவிழ்த்து எறிந்து விட்டு, கோபி நீ உழைச்சு ஒரு முழம் துணியாவது வாங்கி வா... எனும் இடத்தில் நம்மை அதிர வைப்பதோடு, இவர்களது காதல் எப்படியாவது நிறைவேறி விடாதா...? என அழவும் வைப்பது வினிதாவின் நடிப்பிற்கு கிடைத்த வெகுமானமாகும். ஒட்டுமொத்தத்தில் எல்லோரையும் கவர்ந்த படம் பதினாறு.

-- காதல் தேனாறு; பாலாறு



# படமாகிறது குண்டு-வெடிப்பு

மும்பை குண்டுவெடிப்பு சம்பவத்தில் உயிரிழந்த உயரதிகாரியான ஹேமந்த் கர்க்கரேயை நினைவுபடுத்தும் வகையில் அந்தச் சம்பவத்தைச் சினிமாவாக எடுக்கிறார் டைரக்டர் அமல் நீரத். ராம்கோபால் வர்மாவிடன் இயக்குனர் பயிற்சி பெற்ற அனுபவத்துடன் படம் இயக்க வந்திருக்கும் இவர், அன்வர் என்ற பெயரில் புதிய படத்தை இயக்கி வருகிறார். தமிழ் மற்றும் மலையாளத்தில் எடுக்கப்பட்டு வரும் இப்படத்தில், கோவை குண்டுவெடிப்பு சம்பவத்தையும், மும்பை குண்டுவெடிப்பு சம்பவத்தையும் கலந்து கட்டி கதை சொல்லியிருக்கிறாராம்.

மும்பை குண்டுவெடிப்புச் சம்பவத்தின் உயிரிழந்த போலீஸ் உயர் அதிகாரி ஹேமந்த் கர்க்கரேயை நினைவுபடுத்தும் கேரக்டரில் பிரகாஷ் ராஜ் நடித்திருக்கிறார். மத தலைவர் ஒருவருடைய கையாளாக ப்ருத்விராஜ் நடித்திருக்கிறார். ப்ருத்வி ராஜ் ஜோடியாக மம்தா மோகன்தாஸ் நடித்துள்ளார். மொழி, அபியும் நானும், வெள்ளித்திரை உள்ளிட்ட படங்களில் ஒர்க்அவுட் ஆன பிரகாஷ்ராஜ்- ப்ருத்வி ராஜ் காம்பினேஷன் இந்தப் படத்திலும் ரசிகர்களை கவரும் என்று நம்பிக்கை கூறும் டைரக்டர் அமல் நீரத், படம் பார்க்கும் இளைஞர்கள் பயங்கரவாதத்தைப் பார்த்து கண்ணீர் வடிக்காமல் அதற்கு எதிராக எப்படிச் செயல்பட வேண்டும் என்பதைக் கற்றுக் கொடுக்கிற படமாக இது இருக்கும், என்கிறார். படத்தில் இடம்பெறும் 5 குண்டு வெடிப்பு சம்பவங்களை தத்ரூபமாக எடுத்து முடித்திருக்கிறாராம் அமல்நீரத்!.



# வித்தியாசமான சூர்யா

வித்தியாசமான கேரக்டர்களை விரும்பி ஏற்பதில் கமலையும் பின்னுக்குத் தள்ளவிடுவார் சூர்யா. இவர் நடிக்கும் மாற்றான் படத்தில் இவரது கேரக்டர்தான் இப்படிச் சொல்ல வைத்திருக்கிறது.

கே.வி.ஆனந்த் இயக்கும் இந்தப் படத்தில் ஒட்டிப் பிறந்த இரட்டையர்களாக சூர்யா நடிக்கிறார். இப்படி ஒட்டிப் பிறந்த குழந்தைகளை அறுவைச் சிகிச்சை மூலம் பிரித்தால் இரு குழந்தைகளுமே மரணமடைய நேரும். அதனால் அப்படியே விட்டுவிடுவார்கள். அவர்கள் வளர்ந்த பிறகும் ஒட்டியே இருப்பார்கள். நடப்பது முதல் படுப்பதுவரை அனைத்துமே சிரமம்.

இதனை மையமாக வைத்து மலையாளத்தில் ஒரு திரைப்படம் வெளிவந்தது. அதில் ஒட்டிப் பிறந்தவர்களாக இரு வேறு நடிகர்கள் நடித்தனர். மாற்றானில் இந்த இரு வேடத்திலும் சூர்யாவே நடிக்கிறாராம். டபிள் ஆக்ஷன்.

# அதிர்ச்சியில் த்ரிஷா



சில நாட்கள் முன்பு த்ரிஷாவைப் பற்றிய கல்யாண செய்தி வந்தது. த்ரிஷா யாரையும் காதலிக்காததால் அவர் பெற்றோர் அவருக்கு ஒரு மாப்பிள்ளை பார்த்து வருகிறார் என்பதே அந்தச் செய்தி. அத்தோடு முடியாமல் திருமணத்திற்கு பின்பு த்ரிஷா தொடர்ந்து நடிப்பாரா என்று கேள்விகள் வந்தது. மைசூரில் ஷூட்டிங் முடித்துவிட்டு சென்னை திரும்பிய த்ரிஷாவிடம் உங்கள் கல்யாண விஷயம்? என்றால்... நீங்க ஒண்ணும் காமெடி கீமிடி பண்ணலையே என்று சத்தமான சிரிப்போடு கேள்வி கேட்கிறார். எனக்குக் கல்யாணம்ன்னு யாருங்க சொன்னது? அதெல்லாம் நடக்க வேண்டிய நேரத்தில் நடக்கும். நான் யாரையும் காதலிக்கவில்லை என்பது மட்டுமே உண்மை. மற்றபடி கல்யாணத்துக்கு இப்ப என்ன அவசரம்.

இப்போதைக்கு அஜீத்துடன் மங்காத்தா படத்தில் நடிக்கிறேன். இன்னும் தொடர்ந்து நடிப்பேன் என்றும் சொல்கிறார் த்ரிஷா. அதோடு மட்டும் அல்லாமல் அஜீத்தோடு நடிப்பது ரொம்ப சுவாரஸ்யம். அவர் ஒரு கடுமையான உழைப்பாளி, நேர்மையானவர். அவரிடம் நான் நிறைய கற்றுக்கொள்கிறேன் என்று சொல்கிறார்.

# சிம்புவுடன் சோனியா



நடிகர் சிம்பு தனது பிறந்த நாளை முன்னிட்டு வைத்த விருந்தில் சோனியா அகர்வால் உள்ளிட்ட நட்சத்திர பட்டாளம் கலந்து கொண்டிருக்கிறது. சமீபத்தில் பிறந்தநாள் கொண்டாடிய சிம்பு, அதையொட்டி தனக்கு நெருக்கமான நண்பர்களுக்கு விருந்து கொடுக்க ஆசைப்பட்டார்.



இதையடுத்து அவர் அனைவருக்கும் அழைப்பு விடுத்தார். சிம்புவின் அழைப்பை ஏற்று ஏராளமான நட்சத்திரங்கள் விருந்தில் கலந்து கொண்டு உற்சாகமாக சிம்புவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

இந்த விருந்தில், நடிகர்கள் அப்பாஸ், பிரேம்ஜி அமரன், வைபவ், நடிகைகள் சோனியா அகர்வால், சோனா, ஷம்மு, வரலட்சுமி, எடிட்டர் ஆண்டனி, சுணேஷ் ஜனார்த்தனன், திவ்ய தர்ஷினி, யுவன் ஷங்கர் ராஜா, தரன்ல, வின்சென்ட் அசோகன், விஜய் வசந்த் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நடிகர் சிம்பு தனது பிறந்த நாளை முன்னிட்டு வைத்த விருந்தில் சோனியா அகர்வால் உள்ளிட்ட நட்சத்திர பட்டாளம் கலந்து கொண்டிருக்கிறது. சமீபத்தில் பிறந்தநாள் கொண்டாடிய சிம்பு, அதையொட்டி தனக்கு நெருக்கமான நண்பர்களுக்கு விருந்து கொடுக்க ஆசைப்பட்டார்.

# அதிரடி விஷால்



'அவன் இவன்' படத்தின் படப்பிடிப்பு முடிந்ததின் சந்தோஷத்தில் இருக்கிறார் விஷால். அது வேற ஒன்றும் இல்லை, விக்ரம், சூர்யா, ஆர்யா மூவரும் பாலாவின் இயக்கத்தில் நடித்து முடித்தவுடன் இவர்கள் சினிமா பாதையில் ஏறுமுகம் தான்.

முதல் நான்கு படங்களில் ஹிட் கொடுத்த விஷாலுக்கு அடுத்தடுத்து வந்த படங்கள் சரியாக அமையவில்லை. அந்த நேரத்தில் தான் பாலாவின் வாய்ப்பு விஷால் வீட்டுக் கதவைத் தட்டியது. கேட்கவா வேணும்... விஷாலுக்கு குஷி தாங்கவில்லை. ஆர்யாவும் விஷாலும் இணைந்து நடித்திருந்தாலும் விஷாலுக்கு இந்தப் படத்தில் நிச்சயம் விருது கிடைக்கும் என்கிறார்கள். பல ஷாட்டுகளில் பாலாவின் பாராட்டுகளை பெற்றுள்ளார் விஷால்.

விஷால் நடிக்கும் அடுத்தப் படத்தை பிரபுதேவா தான் இயக்குகிறார். அவன் இவன் படம் ஷூட்டிங் தாமதமானதால், இதுக்கு மேல என்னால் வெயிட் பண்ண முடியாது என்று டென்ஷனில் இருந்த பிரபு தேவாவை குளிர வைத்து படத்தின் ஷூட்டிங்கை இந்த மாதம் 18 ஆம் தேதி தொடங்க இருக்கிறார்கள்.

படத்தின் நாயகி சமீரா ரெட்டி. பிரபு தேவாவின் ஆஸ்தான காமெடியன் வடிவேலு தான். ஆனால் இந்தப் படத்தில் விவேக் நடிக்கிறார்.விஷாலும் விவேக்கும் முதல் முறையாக இணைகிறார்கள். இந்தப் படத்தின் படப்பிடிப்பை புயல் வேகத்தில் நடித்து முடித்து பூபதி பாண்டியன் இயக்கும் பட்டத்து யானை படத்தில் நடிக்கிறார் விஷால்.

விஷாலுக்காக எத்தனை இயக்குனர்கள் காத்திருக்கிறார்கள் பாருங்க!



# இளஞ்சுடர்

தொகுப்பு: வேதா

# அரசரின் அதிசய ஆடை



முன்னொரு காலத்தில் அரசர் ஒருவர் ஒரு நாட்டை ஆண்டு வந்தார். புதிய ஆடைகள் அணிவதில் அவருக்கு அளவில்லாத ஆசை. அரசரின் அந்த ஆசையைப் ஆடை தயாரிப்பவர்கள் இருவர் பயன்படுத்த விரும்பினர்.

ஒரு நாள் அரசரைச் சந்திக்க வந்த அவர்கள் சபையில் தம்மை யார் என அறிமுகம் செய்து கொண்டனர். "நாங்கள் ஒன்றும் சாதாரண நெசவாளர்கள் அல்ல. அதிசயமான விஷேட துணியை எங்களால் நெய்ய முடியும். ஆனால் ஒன்று. முட்டாளின் கண்களுக்கு அந்தத் துணி தென்படாது" என்று பணிவியமாகச் சொன்னார்கள்.

அரசர் ஆடை நெய்பவர்களின் பணிவியமான பேச்சினால் கவரப்பட்டார். அப்படி ஒரு துணி பற்றி அரசர் முன்னெப் போதும் கேள்விப்பட்டதில்லை. அதனால் அதனைச் செய்து தரும்படி அரசர் ஆடை நெய்பவர்களைப் பணித்தார். அத்தகைய துணியை நெய்ய அவர்கள் கேட்டுக் கொண்டபடி தங்க நூற்பந்துகளை வழங்கும்படியும் மன்றத்துக்கு ஆணை பிறப்பித்தார்.

தங்க நூற்பந்துக்கள் வழங்கப்பட்டன. நெசவாளர்கள் தங்க நூற்பந்துகளைத் தாது பைகளுக்குள் மறைத்துக் கொண்டார்கள். பின்னர் ஒரு பக்கமாக இருந்து துணி நெய்வது போல் பாவனை செய்தார்கள். சில நாட்களின் பின் ஒரு நாள் அரசர், முதலமைச்சரை நோக்கி "அமைச்சரே! துணி நெய்யும் வேலையை ஒரு தரம் போய்ப் பார்த்து வாருங்கள்" என்றார்.

அமைச்சர் பார்வையிட்டார். ஆடை நெய்பவர்கள் இருவரும் ஏதோ கோலக் கோடுகள் போடுவது போல் பரக்கப் பரக்கப் பின்னிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கையசைத்து நெய்யும் காட்சிதான் முதலமைச்சரின் கண்களில் பட்டது. துணி கண்ணுக்குத் தெரியவில்லை.

சங்கடப்பட்ட அமைச்சர், "ஐயோ! அந்த அதிசயமான துணி என் பார்வைக்கு ஏனோ புலப்படவில்லை. ஆனால், நான் முட்டாள் இல்லை" என்று தன்னைச் சுதாகரித்துக் கொண்டார். திரும்பி வந்த முதலமைச்சர் அரசரைப் பார்த்து, "இப்படியான ஓர் அதிசயத் துணியை நான் கண்டதே இல்லை" என்று சொன்னார்.

ஒரு வாரம் கழிந்தது. அந்த வாரம் முழுவதும் துணியை வெட்டி ஆடை தைப்பதாகவே அந்த நெசவாளர்கள் பாவனை செய்தார்கள். கடைசியில் தாம் தைத்து முடித்த ஆடையை ஒருமுறை அணிந்து பார்க்குமாறு அரசரை வேண்டிக் கொண்டனர்.

அரசர் தான் அணிந்திருந்த ஆடைகளைக் களைந்தது தான் தாமதம், நெசவாளர்கள் இருவரும் அவருக்குப் புதிய ஆடையை உடுத்தி விடுவதாகப் பாவனை செய்து "ஆடைகள் பிரமாதம்" என்று உரக்கக் கூறினார்கள்.

பேரரசர் ஒருமுறை தன்னைக் கண்ணாடியில் பார்த்தார். அவர் அணிந்திருந்த ஆடை அவர் கண்ணுக்குத் தெரியவில்லை. நிர்வாணமாக நின்றார். ஆனாலும் அவர் தன்னை ஒரு முட்டாளாகக் காட்டிக்கொள்ள விரும்பவில்லை.

அரசர் மௌனமாகத் திரும்பிச் சென்றதும் நெசவாளர்கள் இருவரும் தமக்குள் சிரித்துக் கொண்டார்கள். கெட்டிக்காரன் எப்படி முட்டாளாகலாம்?

அந்த அதிசயத் துணியைப் பற்றியும், புத்தம் புதிய ஆடையைப் பற்றியும் நாட்டில் கதை பரவியது. அரசர் அன்று மாலையில் நகர்வலம் வரவுள்ளார் என்று ஒருநாள் அறிவிப்பு வெளிவந்தது.

தனக்குப் புதிய உடையை அணிவித்து உதவுமாறு அரசர் நெசவாளர்களைக் கேட்டுக் கொண்டார். அவர்களும் அப்புதிய ஆடையை அணிவிப்பது போல் பாவனை செய்துவிட்டு "மாட்சிமை தங்கிய மகாராசாவே! எவ்வளவு அழகான உடைகள். புதிய ஆடையில் நீங்கள் கம்பீரமாகத் தோற்றமளிக்கிறீர்கள்." என்று புகழ்ந்தார்கள். ஆனால் அரசரின் பார்வைக்கு உடைகள் தெரியவேயில்லையே!

"முதலமைச்சர் கூட எனது ஆடையைத் தனது கண்களால் பார்த்திருக்கிறார். அவரை விட நான் ஒருபோதும் முட்டாளாகக் கூடாது."

இவ்வாறு தனக்குள் மெல்லச் சொல்லிக் கொண்டார். அரசர் அணிந்து வரும் அதிசய உடையைப் பார்க்க நகரமே கூடியிருந்தது. அவர் மந்திரி, பிரதானிகள் புடை சூழ புதிய உடையில் பவனி வந்தார்.

திரண்டிருந்த மக்கள் மத்தியில் ஒரே குழப்பம். பேரரசரின் உடம்பில் எந்த உடையையும் காணவில்லை. திகைத்துப் போனார்கள். ஆனால், அது பற்றி அவர்கள் மூச்சுக் கூட விடவில்லை; ஒருவன் அச்சத்துடன் "எவ்வளவு அழகான ஆடை" என்று குரல் எழுப்பினான். அவனைத் தொடர்ந்து பலர் "கண்ணைப் பறிக்கும் உடை, நேர்த்தியான தையல், இந்த உடையில் அரசர் அழகாகத் தெரிகிறார்" என்று தத்தமது மனதிற் பட்டபடி எல்லாம் புகழாரம் சூட்டினார்கள்.

கூட்டத்தில் இருந்த ஒரு சிறுவன் கலீரென்று சிரித்தபடி "பேரரசர் நிர்வாணமாக உலா வருகிறார்" என்று உரக்கக் கத்தினான். தான் ஏமாந்து போனமை அரசருக்கு அப்போதுதான் புரிந்தது. "இல்லை; நான் தான் மற்றவர்களை விடப் பெரிய முட்டாள்" என்றார் கொதித்துடன். நெசவாளர்களைக் காணவில்லை. அவர்கள் ஏற்கனவே தங்க நூற்பந்துகளுடன் அந்த நாட்டை விட்டே தப்பி ஓடி விட்டார்களே.

★★★

## மூளைக்கு வேலை தரும் மாயச் சதுரம்

### கணிதப் புதிர் - 03

| | | | |
|---|---|---|---|
| 4 | 30 | 28 | 8 |
| 24 | 12 | 14 | 18 |
| 16 | 32 | 22 | 10 |
| 26 | 6 | 2 | 20 |

இடம் மாறியுள்ள நான்கு எண்களை மாத்திரம் உரிய கட்டிற்குள் மாற்றியிடுவதன் மூலம் நிரை, நிரல், மூலைக்கு மூலை கூட்டுத்தொகை 68 ஆகும் வண்ணம் எண்களை ஒழுங்கமையுங்கள். உங்கள் முயற்சி வெற்றியளித்ததா? என்பதை அறிய அடுத்த வாரம் இளஞ்சுடரைப் பாருங்கள்.

**கணிதப் புதிர் - 02 இன் சரியான விடை**

| | | | |
|---|---|---|---|
| 13 | 8 | 12 | 1 |
| 3 | 10 | 6 | 15 |
| 2 | 11 | 7 | 14 |
| 16 | 5 | 9 | 4 |

மாணவர்களே!

**உங்கள் வாசிப்புத் திறமைக்கு ஒரு சவால்**

நீங்கள் வாசித்த புத்தகம் ஒன்றினைப் பற்றிய கருத்துக்களை A4 தாளில் அதன் ஒரு பக்கத்துக்கு மேற்படாமல் எழுதி அனுப்புங்கள். தகுதி வாய்ந்தவை பிரசுரிக்கப்படும்.

பிரசுரமாகும் ஒவ்வொரு கட்டுரைக்கும் பெறுமதி மிக்க புத்தகப் பரிசுகள் வழங்கப்படும்.

உங்கள் திறமையைக் காட்டுங்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி**
'இளஞ்சுடர்', சுடர் ஒளி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-....................................................
தரம் :-....................................................
பாடசாலை :-....................................................
....................................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

........................ ........................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

## துலங்கும் புள்ளிகள்

### ஜவகர்லால் நேரு



மோதிலால் நேருமகன் ஜவகர்லால் நேருஇவர்
நீதிவழி வாழ்ந்ததிரு நிறைந்தமகான் - ஜோதியவர்
காந்திவழி இந்தியத்தின் கருத்தாண்ட பிரதமராம்
சாந்தியொளி பரப்பிய சீமான்

இந்தியத்தின் சீர்பெருமைக் கிணையற்ற பங்கீந்து
முந்துதற்குச் சமாதான சகவாழ்வில் - உந்துதலாய்
நின்றோயா துழைத்தநிலா நிகரில்லாத் தலைவரிவர்
நன்றேற்றுப் போற்றுமிது நாடு

சுதந்திர இந்தியத்தின் சுடரொளியாய் நின்றமுதல்
இதந்தரு நல்ஏந்தலென இலங்கியவர் - நிதந்துதிக்கும்
மக்கள் உளங்கவர்ந்த மகிமையுளன் மழலைகளின்
திக்கில் இனித்திருக்கும் தேன்

★ சுதந்திர இந்தியாவின் முதற் பிரதமராய் பதவி பெற்றவர்
★ 1889 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ந் திகதி அலகபாத் நகரில் பிறந்தார்.
★ இந்திய காங்கிரஸ் கட்சியில் இணைந்து சுதந்திர இந்தியாவுக்காகப் போராட்டங்களில் ஈடுபட்டார்.
★ 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ந் திகதி இந்தியா சுதந்திரம் பெற்றது.
★ உலக சமாதானத்தையும் அமைதியையும் விரும்பி உழைத்தவர்.
★ சிறுவர் மீதிலே மிகுந்த பற்றுடையவர்.
★ இன்றும் சாச்சா நேரு என நினைவு கூரப்படுகிறார்.
★ 1964 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி காலமானார்.

- ஹேமமாலதி.

# நிரந்தரமாகும் இடைத்தங்கல்



> இறுக்கமான பாஸ் (அனுமதிப் பத்திரம்) நடைமுறை அமுலில் இருந்தது. உரிய, ஆதாரமுள்ள காரணம் காட்டாமல் இலகுவாகப் 'பாஸ்' பெறமுடியாது. இளம் பெண்களால் மாத்திரமே எளிதான முறையில் இந்தக் காரியங்களைச் சாதித்துக் கொள்ள முடியும்.

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலான நிவாரண விநியோகங்களின் போது இந்த நடைமுறையே கைக்கொள்ளப்படுகிறது.

அரச நிவாரணங்களைப் பொறுத்த வரையில் முதல் கிழமைக்கு ஒரு முறை வழங்கப்பட்டது. பின்னர் மாதத்தில் இரு முறை வழங்கப்பட்டது. தற்போது மாதத்திற்கு ஒருமுறை வழங்கப்படுகிறது. இதுவும் இனிமேல் தடைப்படலாம் என மக்கள் தெரிவிக்கின்றனர். தொடர் மழை காரணமாக, நாட்டில் ஏற்பட்ட நெல் உற்பத்தி வீழ்ச்சி, அரிசி விநியோகத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும், அதனால் நிவாரண நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படும் எனவும், அரச அதிகாரிகள் மக்களுக்குத் தெரிவித்து வருகின்றனர். எல்லாவற்றையும் இழந்து முற்றுமுழுதாக நிவாரண உதவிகளையே நம்பியிருக்கும் இந்த மக்கள் தமது எதிர்காலம் குறித்து ஐயுறுகின்றனர்.

> வீட்டின் உட்பகுதியில் நிற்கும் ஒருவரின் இடுப்புப் பகுதிவரை மழைவெள்ளம் ஏறியுள்ளது. அங்கு வாழ்ந்தவர்கள் தமது அத்தியாவசியப் பொருள்களைக் கூரைகளில் கட்டித் தூக்கிவிட்டு விடியும் வரை வெள்ளத்துள் நின்ற அனுபவங்களும் ஏற்பட்டுள்ளன.

### மழைக்குப் பின்னரான நிலைமைகள்

இப்போது வன்னியிலே பெய்து வரும் தொடர் மழை நலன்புரி நிலையங்களில் எஞ்சியிருப்போரை வருத்தி வருகிறது. மழைக்குப் பாதுகாப்பான இடம் எனக் கூறி இங்கு அமர்த்தப்பட்ட போதிலும் தாழ்வான பகுதிகளில் உள்ள முகாம்களில் வெள்ளம் உட்புகுந்துள்ளது. வீட்டின் உட்பகுதியில் நிற்கும் ஒருவரின் இடுப்புப் பகுதி வரை மழைவெள்ளம் ஏறியுள்ளது. அங்கு வாழ்ந்தவர்கள் தமது அத்தியாவசியப் பொருட்களைக் கூரைகளில் கட்டித் தூக்கி விட்டு விடியும் வரை வெள்ளத்துள் நின்ற அனுபவங்களும் ஏற்பட்டுள்ளன. முகாம் அமைந்திருக்கும் பகுதி சமச்சீர் அற்ற நிலவெளியைக் கொண்டதாகும். இலங்கையின் பிரதான ஆறு ஒன்றின் படுக்கையில் அமைந்திருப்பதால் வெள்ளம் அவ்வளவு இலகுவாகக் குறைவதற்குச் சந்தர்ப்பங்கள் இல்லை. பெருக்கெடுத்து ஓடும் காட்டாற்றில் விளையாட எத்தனிக்கும் சிறுவர்களை வெள்ளம் இழுத்துப் போகும் சந்தர்ப்பங்களும் ஏற்பட்டுள்ளது. வெள்ளம் கூடியபோது வேறு இடங்களுக்கு மக்கள் மாற்றப்பட்ட போதும் தற்போது நிலைமை சீராகும் முன்பே பழைய இடங்களுக்குப் போக வற்புறுத்தப்படுகின்றனர். அங்கு போனால் தான் வெள்ள நிவாரணம் வழங்கப்படுமாம்.

### சுகாதார நடவடிக்கைகள்

வெள்ளம் வடிந்தபின் பெருகிவரும் நுளம்புகளையும் ஏனைய விஷ ஜந்துக்களையும் ஒழிக்கும் வகையிலான நோய்த் தடுப்பு உபாயங்கள் குறைந்து வருகின்றனது. மழையினால் சில மலசலகூடங்கள் நிரம்பி தேங்கி நிற்கும் நீருடன் கலந்துள்ளன. இதனால் பல்வேறுபட்ட நோய்த் தொற்றுக்கள் ஏற்படவும் வாய்ப்புள்ளது. இதனைக் கவனிப்பதில் அசமந்தப் போக்கு இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். பொதுமக்களின் அன்றாட சுகாதார வைத்தியப் பிரச்சினைகளைக் கையாள்வது சிறிய அளவிலான சுகாதார தொண்டர்கள் தான்.

### கலாசார சீர்கேடுகள்

இயற்கை அனர்த்தத்தின் போது நிலவிய அபாயகரமான சூழலிலும் கூட மக்கள் வெளியில் செல்ல அனுமதிக்கப்படவில்லை. இறுக்கமான பாஸ் (அனுமதிப் பத்திரம்) நடைமுறை அமுலில் இருந்தது. உரிய, ஆதாரமுள்ள காரணம் காட்டாமல் இலகுவாகப் பாஸினைப் பெற முடியாது. இளம் பெண்களால் மாத்திரமே எளிதான முறையில் இந்தக் காரியங்களைச் சாதித்துக்கொள்ள முடியும். கெஞ்சிக் கேட்கும் வயோதிபர்கள் மீது வன்முறை பாவிக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் நிகழ்ந்துள்ளன. முகாமினுள் பணிபுரியும் ''கவனிப்பாளர்களின்'' தொல்லைகள், அங்கிருக்கும் உயரதிகாரிகள் பெண்களுக்குக் கொடுக்கும் தொல்லைகளை விட அதிகமாகும்.

அதிகளவான சிறுவர் துஷ்பிரயோகங்கள் இங்கு இடம்பெறுவதாக தெரிய வருகிறது. சிறுமிகளைக் கொண்டே பெற்றோர் சில காரியங்களை சாதித்துக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. அங்கு பணிபுரியும் அதிகாரிகளுக்கு சிறுமிகள் என்றால் விருப்பமாம். கசிப்பு விற்பனையும், தயாரிப்பும் அதிகரித்து வருகின்றன. விதவைப் பெண்கள் இதில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. பதினாறு வயதிலிருந்தே உருவாகி வரும் மதுப்பிரியர்களின் அட்டகாசம் தாங்கமுடியவில்லை. பெண்கள் மீது இளைஞர்களின் வேட்கை வயது வேறுபாடின்றி பிரயோகிக்கப்பட்டு வருகிறது. எந்தப் பெண்களும் சுதந்திரமாய்க் குளிக்கக் கூட முடியவில்லை. எங்காவது பேயன் காமுகர்கள் அதைப் பார்த்துக் கொண்டிருக்கும்.

உண்மையில் இப்போது எஞ்சியிருக்கும் இந்த 20,000 மக்களும் மிகவும் வசதியான வாழ்க்கையை வாழ்ந்தவர்கள். உயர்தரமான பண்பாட்டையும், வாழ்க்கை விழுமியங்களையும் கடைப்பிடித்தவர்கள். யுத்தமும், இடைத்தங்கல் முகாம்வாழ்க்கையும் அவர்களை இந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது. இந்த மக்கள் எந்த உயர் அதிகாரி வந்தாலும் உடனடியாகக் கேட்பது 'எப்போ மீள் குடியேற்றம்' எல்லோருக்கும் ஒரு பதில் தெளிவாய்த் தெரியும்., ''தெரியாது''? இந்த இடைத்தங்கல் வாழ்வு நிரந்தர குடியிருப்பாக்கப்படப் போகிறதா? எல்லோரும் இந்தக் கேள்வியை நம்புகிறார்கள்.

### குறிப்பு


அண்மையில் புதுக்குடியிருப்புச் சந்தியின் ஊடாகப் பயணிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கு இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் கட்டுமானப்பணிகள், அது ஒரு இராணுவ நகரமாக மாறி வருகிறது என்பதை உணர்த்தியது. இடப்பெயர்வுக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டத்தின் தலைப்பட்டினமாகப் புதுக்குடியிருப்பே இருந்தது. மாவட்ட அளவிலான சகல அரச நிறுவனங்களும், காரியாலயங்களும் புதுக்குடியிருப்பை மையமாக வைத்தே இயங்கின. இங்கு வாழும் மக்கள் சகல வசதிவாய்ப்புக்களுடனும் குறைவில்லாமல் வாழ்ந்தவர்கள். விவசாயம், வர்த்தகம், மீன்பிடி போன்றன இவர்களது பிரதான பொருளாதார மூலவளங்களாய் இருந்தன. இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி இவர்கள் சிறுகச்சிறுகச் சேர்த்தவைகளையெல்லாம் யாரோ இனந்தெரியாதவர்கள் வாகனங்களில் கடத்திச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

இன்னும் மீளக் குடியேற்றம் செய்யப்படாத கேப்பாபுலவில் சிங்கள மக்கள் பரவலாக குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். ஆனால் அந்தக் கிராமத்துக்கே உரிய மக்கள் இடைத்தங்கல் முகாம்களிலும் வேறு இடங்களிலுமே அலைகின்றனர்.

* * *



# ஊர் திரும்பாத உறவு




விடிந்தால் அவன் புறப்பட்டாக வேண்டும். இராப்பொழுது நீளமாகக் கூடாதா? என்கின்ற ஏக்கம் அவனுக்குள் எழுந்தது.

தாய் மண்ணை, உருண்டு புரண்டு விளையாடி, வளர்ந்து ஆளாகிய சொந்த இடத்தைப் பிரிந்து எவ்வளவு காலம்தான் வாழ முடியும்?

உழைப்புக்காக, கஷ்டத்துக்காக, கடன் தொல்லைக்காக, பெண் சகோதரங்களின் வாழ்க்கைக்காக, காணி நிலம் வாங்கி வீடு கட்டுவதற்காக... என்று தேவைப்பட்டியல் நீண்டு கொண்டே போக, இவனின் தேடலுக்கான வாழ்க்கையை ஜேர்மனியில் இருபத்தி நான்கு வருடங்கள் ஓட்டிவிட்டான்.

வேதனையில் படுக்கையில் புரண்டு படுத்தான். பக்கத்தில் மனைவி வேணி இல்லை.

கடந்த ஒரு வாரமாக அவளுக்கு ஓய்வே இல்லை. அடிக்கடி செல்லிடத் தொலைபேசி செல்லமாகச் சிணுங்க வேணி அவசரமாக ஓடிப்போனாள்.

'ஓம் நான் தான் மிஸிஸ் பரதன் பேசுறன்'

'ஓம் ... அ....அ.... ஆ'

''அதுக்கென்ன?''

''இவர் திங்கட்கிழமை போறார். பிறகு 7ம் திகதி பிளைற்''

''பரவாயில்லை இது பெரிய வேலையோ''

''ம்... ஓ.கே. பை!''

**வாழவேண்டிய வயதில் இளம் மனைவியை விட்டுப் போன இவன் குற்றத்தை இப்போது குத்திக் காட்டுகிறாளோ?**

இப்படிப் பல சம்பாஷணைகள். பின்னர் ஓரிரு தினங்களில் பரதன் வீட்டு, முன் அறை கொண்டு செல்லும் 'பார்சல்களால் நிரம்பி வழிய... மறுக்க முடியாத இந்தச் சுமைகளுக்காகத் தன் சுமைகளைப் பரதன் குறைக்க வேண்டியதாயிற்று,

பரதன் வெளிநாட்டிற்குப் போன பின்னர் மூன்று தடவைகள் ஊருக்கு வந்து திரும்பியிருக்கிறான்.

முதல் தடவை அவனுக்குத் திருமணம். அவனுக்கு ஏற்ற அன்பு மனைவியாக வேணி கிடைத்தது, ஓர் அதிர்ஷ்டம் தான். வேணி கருவுற்றதும். மீண்டும் அவன் பயணப்படும் நாள் நெருங்கியது. மனைவியைப் பிரிய மனமில்லை என்றாலும்... அவன் போக வேண்டிய நிலை. அன்று போனவன் மகன் பானுவின் முதலாவது பிறந்த தினத்திற்கே மீண்டும் வரமுடிந்தது.

அவனுக்குப் பெரிய ஆறுதல். மகிழ்ச்சியாக நான்கு மாதங்கள் கழிய மீண்டும் அவன் பயணம்.

மழலையை மறக்க முடியாது என்றாலும், அவன் பொறுப்பு வாய்ந்த ஆண்பிள்ளை அவன் தலையில் அவனது குடும்பப் பொறுப்புகள். அதன் விளைவு குழந்தைச் செல்வத்தைக் கொஞ்சும் குதூகலத்தை அவன் தன் குடும்பத்தினருக்காக அர்ப்பணித்தான்.

தங்கைமாரின் திருமணப்பந்தங்கள் அவர்களின் அன்பு மடல்கள் அம்மா அப்பாவின் பரிவான கரிசனைக் கடித வரிகள்.

அவன் திருப்திப்பட்டுக் கொண்டான். மகள் கவிதா பிறந்த செய்தி மட்டும் தான். மகளின் வளர்ச்சியைப் படங்களில் மட்டும் தான் இந்தத் தந்தையால் பார்க்க முடிந்தது.

நாட்டுப்பிரச்சினையும், போர்ச்சூழலும் இடைவெளியை இன்னும் அதிகமாக்கியது.

அப்பாவின் மரணச்சடங்கிற்கு அவனால் வர இயலவில்லை. தனக்குள்ளே அழுத பரதன் தானாகவே சமாதானமாகிப் போனான்.

காலச்சக்கரம் வேகமாகச் சூழன்று எல்லாவற்றையும் மறைக்க சமாதானச் சூழல் மெல்ல உதயமாகியது. அம்மாவின் மரணச் செய்தியுடன் நாட்டுக்கு வந்தவன் சுனாமிப் பேரழிவுச் சீரழிவுகளையும் கண்டு கொண்டான். எல்லாவற்றையும் விட அதிசயமான ஆச்சரியம்!

அவன் குழந்தைகள் இருவரும் இப்போது... வளர்ந்த வாலிப வயதினர்.

அவனுக்குக் கட்டுக்கடங்காத மகிழ்ச்சி!

இப்போது அவன் சுமைகள் ஓரளவு குறைந்து விட்டிருந்தன. இனிமேல் உழைத்தது போதும். சொந்த நாட்டிற்குத் திரும்பி சொந்த ஊரில், கூலி வேலை செய்து குடும்பத்தினரோடு கூழ் குடித்தாலும் பரவாயில்லை.

அவன் தீர்மானித்து விட்டான்

அடுத்த முறை ஊர் வந்து மீண்டும் ஜேர்மனிக்குத் திரும்பிப் போகப் போவதில்லை என்ற உறுதி அவனுக்குள் ஆணித்தரமானது.

வேணியிடம் எல்லாவற்றையும் மனம் விட்டுப் பேசினான்.

'' வேணி.... நீங்கள் இனிமேலும் தனியாகக் கஷ்டப்படக்கூடாது இன்றும் ஆறு மாதத்திலை எல்லாத்தையும் ' செற்றில்' பண்ணிப் போட்டு நான் ஓடி வந்து விடுவேன்''

அவனளவு சந்தோஷம் வேணிக்கு ஏற்படவில்லை.

''அவசரப்பட்டு அரைகுறையில் வேலைகளை முடிக்காமல் இங்கை

**விவேகா**

ஓடி வந்திடாதேங்கோ..... எங்களுக்கு இப்ப எல்லாம் பழகிப் போச்சு.

வாழ வேண்டிய வயதில் இளம் மனைவியை விட்டுப் போன இவன் குற்றத்தை இப்போது குத்திக் காட்டுகிறாளோ? '' இல்லை வேணி என்ரை குடும்ப நிலை.... என்னாலே வேறை ஒண்டும் செய்ய ஏலாமல் போயிட்டுது... அதைவிடு. எங்கடை காலம் போயிட்டுது. இனிப் பிள்ளைகளுக்காக நாங்கள் வாழ வேண்டும். அதுகளின்ரை நல்லது கெட்டதுக்கு நான் ' தகப்பன்' என்று பக்கத்திலை இருக்க வேணும். அது முக்கியம்.

வேணி வெறுமனே சிரித்தாள்.

என்ன இருந்தாலும் ஒவ்வொரு சமயமும் பிள்ளைகளின் தேவைகளையும், அபிலாசைகளையும் ''களம் நின்று தீர்த்து வைத்த அம்மா அவள்.

பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் ' அப்பா வெறும் தூரத்து உறவு தான்.

'' என்ன வேணி ஒன்றும் சொல்லாமல் யோசிக்கிறாய்''

நான் சொல்ல என்ன இருக்கிறது- இந்த வீட்டுத் தலைவன் நீங்கள். உங்கட வீட்டுக்கு நீங்கள் வாறதுக்கு நான் சொல்லுறதுக்கு ஒண்டும் இல்லை''

பரதன் இம்முறை சந்தோஷத்துடன் விமானம் ஏறினான். அக்கரைச் சீமை வாழ்க்கைக்கு இனிமேல் முற்றுப்புள்ளி வைக்கப்போகிறது.

மகிழ்ச்சியில் காலம் விரைந்தோடியது. உற்சாகத்துடன் உலா வந்து கொண்டிருந்தான் பரதன். தெரிந்தவர்கள், நண்பர்கள் என்று கண்டோர் எல்லோரிடமும் பெருமிதமாகச் சொல்லிக் கொண்டான் ''டேய் மச்சான் நான் ஊருக்குப் போய்விடப் போறன்.. எங்கடை தாய் நாட்டுக்கு நிரந்தரமாய்த் திரும்பிப் போகப் போறன்.

கேட்டவர்கள் நகைத்தனர்.

''எங்கடை நாட்டுக்குப் போய் இனி நீ சமாளிப்பியோ? பரதன்'

''எல்லாம் நான் சமாளிப்பன்'' வீராப்புடன் பதில் சொன்னான் பரதன்.

கையிலிருந்த செல்லிடத் தொலைபேசி இடையில் அதிர்ந்தது.

''ஊரிலை இருந்து வீட்டுக்காரர் தான் எடுக்கினம்''. சந்தோஷத்துடன் காதருகில் வைத்துக் கொண்டான்.

''ஹலோ வேணி... சொல்லு... என்ன புதினம்''

**அவசரப்பட்டு அரைகுறையில் வேலைகளை முடிக்காமல் இங்கை ஓடி வந்திடாதேங்கோ.... எங்களுக்கு இப்ப எல்லாம் பழகிப் போய்ச்சு**

''பானுவுக்கு இந்த முறையும்... ஏ.எல் சரிவரேல்லை... பெடியன் 'செற்'றோடை ஊர் சுத்திறதும்... ரீ.வி. பார்க்கிறதும் தான் தொழில். அதோடை....''சொல்லு வேணி..''

''அதோடை இப்ப அவனோடை ஒண்டும் கதைக்க ஏலுதில்லை... தோளுக்கு மேலை வளர்ந்த பிள்ளை...''

''...ம்..''

''வெளிநாட்டுக்குப் போகப்போறன் எண்டு ஒற்றைக்காலிலை நிற்கிறான்.

'நான் பட்ட கஷ்டம் என்ர மகன் படக்கூடாது... வேணி.... எங்க அவன்? நான் ஒருக்கா அவனோடை கதைச்சுப் பார்க்கிறன்' உஷாரானான் பரதன்.

''நான் சமாளிக்க ஏலாமல் தான் உங்களுக்கு எடுத்தனான்''.

''அப்படி எண்டால் ...'' குரல் தழுதழுக்க பரதன் தவித்தான்.

''கவிதாவும் வளர்ந்திட்டாள். எல்லாத்தையும் உதறிக்கொண்டு அவசரப்பட்டு ஊருக்கு வந்திடாதேங்கோ''..

பரதனின் காதுக்குள் மனைவியின் பேச்சு இடியாக இறங்கியது. எல்லோரும் இப்போது தன்னைப் பார்த்து ஏளனமாய்ச் சிரிப்பது போல் இவனுக்குள் பிரமை. அவனது பணத்தால் அவன் குடும்பம் என்கிற பாங்கான பண்பைக் காப்பாற்ற முடியவில்லை. தன்னைப் பொறுத்த வரை எதிர்காலம் குறித்த ஆசைகள் தூரத்துப் பச்சையாகி விட்டதோ என்ற பிரமையில் மனம் இடிந்து போனான் பரதன்.

★★★



# மலையகத் தொழிலாளர்களின் சாபத்துக்கு உள்ளாகும் தலைமைகள்

**தோ**ட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்க சந்தாப் பணத்தில் சொகுசு வாழ்க்கை நடத்தும் மலையக தொழிற்சங்க அரசியல் தலைவர்கள், தமது சுகபோக வாழ்க்கைக்காகவும், பட்டம் பதவிகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் ஒன்றுபட்டு விடுகின்றனர். ஆனால் இவர்களையே நம்பி வாழும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு இவர்கள் ஒன்றுபட்டு அக்கறை எடுப்பதில்லையேஎன அங்கலாய்க்கின்றனர் மலையக தோட்டத் தொழிலாளர்கள்.

இயற்கை அனர்த்தங்களால் பாதிப்புகள் ஏற்படும் போதும், வரட்சி ஏற்படும் போதும் கிராமப்புற விவசாயிகளுக்கு நிவாரணம் என்று வழங்கப்படுகின்றது.

ஆனால் நாட்டின் தேசிய வருமானத்தைப் பெற்றுத்தரும் தோட்டத் தொழிலாளர்களுக்கு இத்தகைய பாதிப்புகள் ஏற்படும் போது அவர்களை ஏறெடுத்துப் பார்ப்பதற்கு எவரும் முன் வருவதில்லை.

இயற்கை அனர்த்தங்களினால் தமது வீடுகள், உடைமைகள், தேடிய சொத்துகள் எல்லாவற்றையும் இழந்துவிட்ட பல தொழிலாளர் குடும்பங்கள் இன்றும் தற்காலிக குடில்களிலும் தோட்டப் பாடசாலைகளிலும் கொழுந்து மடுவங்களிலும் சிரமமான வாழ்க்கை நடத்துகின்றனர்.

ஏதாவது ஒரு விபத்து ஏற்பட்டு விட்டால் அங்கே உடனடியாக ஓடிச் செல்லும் தொழிற்சங்க அரசியல் தலைமைகள் கையோடு அழைத்துச் செல்லும் புகைப்படக்காரர்களைக் கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தாம் ஆறுதல் சொல்வது போல புகைப்படம் எடுத்துப் பத்திரிகைகளில் போட்டுக் கொள்வதோடு நின்று விடுகின்றனர். அதன்பின் அப்பக்கம் தலைகாட்டுவதே இல்லை.

பாதிக்கப்பட்ட ஒருசில தொழிலாளர்களுக்கு நன்மைகள் கிடைத்திருந்தாலும் பாதிக்கப்பட்ட சகல தொழிலாளர்களுக்கும் இவை கிடைக்கவில்லை என்பது தான் உண்மை.

தோட்டக் கம்பனிகளோ-தாங்கள் தோட்டக்காணிகளை மட்டும் தான் குத்தகைக்கு எடுத்துள்ளோம். அபிவிருத்திப் பணிகளுக்கு எம்மால் எதுவும் செலவிட முடியாது என்கின்றன.

அரசாங்கமோ, தோட்டங்கள், பிரதேச சபைகளுக்கோ, மாகாண சபைகளுக்கோ உள்ளடக்கப்படாதவை என்று கைவிரித்து விடுகின்றது.

ஆனால் தேர்தல் என்று ஒன்று வந்து விட்டால் மட்டுமே, இத்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு தனியான மகத்துவம் ஏற்பட்டு விடுகின்றது.

''தோட்டத் தொழிலாள வர்க்கம் தான் இந்த நாட்டின் முதுகெலும்பு. தேசிய வருமானத்தை ஈட்டிக் கொடுத்து நாட்டைக்கட்டி எழுப்பும் சிற்பிகள் அவர்கள். நான் உங்கள் தோழன்; நம் தலைவர், ஏழைப்பங்காளன்; என்று மேடை போட்டு வாய்கிழியக் கத்துவதோடு வீடுவீடாகச் சென்று உங்கள் ஆதரவை எங்களுக்கே தாருங்கள் என்று யாசகம் கேட்பது போல் வாக்கு வேட்டையாட வருகின்றனர். ஆனால் இந்தப் பற்றும் பாசமும் தேர்தல்கள் முடிந்த கையோடு இருந்த இடம் தெரியாமல் போய்விடுகின்றமை தான் வேதனைக்குரியது.

இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் விலைவாசி அதிகரிப்பும், தோட்டத் தொழிலாளர்களின் அன்றாட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பும் தொழிலாளர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளன. இவர்களுக்கு எந்த நிவாரணமும் கிடைப்பதில்லை.

இங்கே ஒரு விடயத்தை தொட்டுக் காட்ட வேண்டியது அவசியம். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் ஆலோசகர்களில் ஒருவராக இருந்தவர் சதாசிவம். இன்றைய ஜனாதிபதியின் ஆலோசகராக இருப்பவர் முன்னாள் பிரதி அமைச்சர் வடிவேல் சுரேஷ். இவர்கள் இரண்டு பேருமே ஒரே பல்லவியைத்தான் பாடினார்கள். அதாவது நாங்கள் ஜனாதிபதியிடம் பேசி விட்டோம். தோட்டத் தொழிலாளர்களுக்கு அரிசி,மா உட்பட அத்தியாவசியப் பொருட்கள் தோட்டங்களிலேயே மானிய அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என்று தம்பட்டம் அடித்துக் கொண்டனர். ஆனால் இதுவரை எதுவுமே நடந்ததில்லை. தோட்டத் நம்பி ஏமாந்து நிற்பது மட்டும் தான் மிச்சம். உழைக்கும் தோட்டத் தொழிலாளர்கள் - அவர்கள் பேச்சை தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் எப்போதும் வறுமைக் கோட்டிற்கு கீழேயே இருந்து வருகிறது.

ஆனால் இந்த அப்பாவித் தோட்டத் தொழிலாளர்களையும், அவர்களின் வாக்குகளையும் காட்டி, அவர்களை அடைவு வைத்துப் பலர் இன்று நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் அமைச்சர்களாகவும் மாறிவிட்டனர். ஆனால் தொழிலாளர்கள் சுவற்றில் சாய்த்து வைக்கப்பட்ட ஏணிகளைப் போல் அப்படியே தான் இருக்கின்றனர். அவர்கள் வாழ்க்கை நிலையில் எந்த மாற்றமும் இல்லை.

இரா.புத்திரசிகாமணி

பெருந்தோட்டக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த சமரசிங்க தான், அடிப்படை மனித உரிமைகள் பாதுகாப்பிற்கும் பொறுப்பானவர். தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக கூட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதால் இவ்விடயத்தில் அரசாங்கம் மூக்கை நுழைக்காது என்று அவர் கூறிவிட்டார்.

கூட்டுஒப்பந்தம் என்ற பெயரில் தோட்டத்தொழிலாளர்களை அடைவு வைத்தவர்கள், தோட்டத் தொழிலாளர் தொழிற்சங்கங்களின் தலைவர்களான ஆறுமுகன்தொண்டமான், கே.வேலாயுதம் மற்றும் ஓ.ஏ.இராமையா ஆகியோரே.

மலையகத்தில் உள்ள எல்லாத் தொழிற்சங்கங்களும், தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படைச் சம்பளம் 5000/= ரூபாவுக்கு குறையாமல் வழங்க வேண்டும் எனப் போராட்டம் நடத்தியபோது அடிப்படைச் சம்பளம் 285/= ரூபா எனக் கூட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதனால் போராட்டம் முடிவுற்றது எனவும் அறிவிக்கப் பட்டது.

இந்தச் செய்தி போராட்டம் நடத்திய தொழிலாளர்களை மட்டுமல்ல, கூட்டு ஒப்பந்தக் கூட்டாளிகளான வேலாயுதத்தையும் இராமையாவையும் கூட மூச்சுத்திணற வைத்து விட்டது. இது குறித்துத் தமக்கு எதுவும் தெரியாதெனவும் இவர்கள் தெரிவித்தனர்.

> *பல சில்லறைகளை ஒன்று கூட்டித் தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டி என்ற ஒன்றை உருவாக்க முடியும் என்றால் மலையகத்தில் வேரூன்றி நிற்கும் உங்களால் ஏன் உறுதியாக ஒரு கூட்டணியை உருவாக்க முடியாது?*

ஆனால் இந்தக் கூட்டுப் பேர ஒப்பந்தம் திரைமறைவில் ஒப்பம் இடப்பட்டது என்பதே உண்மை. இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வேலாயுதம் இந்தக் கூட்டு ஒப்பந்தத்துக்கு அதிருப்தியை வெளிப்படுத்தும் வகையில் கையில் கறுப்புப் பட்டியைக் கட்டிக் கொண்டு ஒப்பம் போட்டாராம்.

அதேவேளை சம்பள உயர்வுப் போராட்டத்தை ஆரம்பித்த இ.தொ.கா. தலைமை, இடைநடுவில் அதி லிருந்து ஒதுங்கிக் கொண்டமை தான் வேடிக்கை. ''போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத் திய நீங்கள் இப்படி ஒதுங்கிக் கொண்டால் போராட்டமே பலவீனமடைந்துவிடும். வாருங்கள், எல்லோரும் ஒன்றாக இணைந்து செயற்படுவோம்.'' என மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் காலஞ்சென்ற சந்திரசேகரன் பெருந்தன்மையுடன் ஆறுமுகனாருக்கு அழைப்பு விடுத்தும், இ.தொ.கா. தலைமை இந்தக் கடிதத்தை ஒரு துருப்புச் சீட்டாக வைத்து 'மாற்றுத் தொழிற் சங்கங்கள் தமது இயலாமையை ஒப்புக் கொண்டுவிட்டன. இ.தொ.கா. இல்லாமல் ஏதுவும் நடக்காது' எனக் கூறி தன்னிச்சையாக கூட்டு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது.

நேர்மையற்ற வகையில் செய்து கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்யு மாறு வழக்குத் தாக்கல் செய்யப் போகிறோம் என்று இதர தொழிற் சங்கங்கள் அனைத்தும் போர்க் கொடி தூக்கின. காலஞ்சென்ற சந்திரசேகரன், சதாசிவம், ஏகாம்பரம், மனோ கணேசன் உட்பட சகலரும் இந்தக் கூட்டு ஒப்பந்தத்துக்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

ஆனால் இதுவரை இதற்கு எதிராக எந்தவொரு வழக்கும் தாக்கல் செய்யப் பட்டதாகத் தெரியவில்லை.

இன்று தோட்டத்தொழிலாளர் களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. கூட்டு ஒப்பந் தத்தைச் செய்தவர்களும், ஆதரித் தவர்களும், எதிர்த்தவர்களும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் குதித்துள்ளனர்.

மலையகத்தைப் பொறுத்த வரையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மட்டுமே ஆளும் கட்சியின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுகின்றது.

இதர அனைத்துத் தொழிற் சங்கங்களும் வேறுவேறு அணிக்களாகப் போட்டியிடுகின்றன.

தேர்தல் முடிந்த சூட்டோடு தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான பேரம் பேசுதல் ஆரம்பித்து விடும்.

அன்று இ.தொ.கா.தன்னிச்சையாக கூட்டு ஒப்பந்தம் செய்துவிட்டது என்று குற்றம் சாட்டியவர்கள் அனைவரும் இன்று ஓரணியில் கூட்டுச் சேர முடியும். கூட்டு ஒப்பந்தத்தின் பங்காளியான வேலாயுதம் உட்பட.

இன்றைய நிலைமையில் இ.தொ.கா. தனித்து நின்று தனது பெரும்பான்மையைக் காட்டித் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தை மிரட்ட முடியாது.

பல சில்லறைகளை ஒன்று கூட்டித் தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டி என்ற ஒன்றை உருவாக்கமுடியும் என்றால், மலையகத்தில் வேரூன்றி நிற்கும் உங்களால் ஏன் உறுதியாக ஒரு கூட்டணியை உருவாக்க முடியாது? உங்களுடைய அரசியல் அடையாளங்களுக்காக ஒன்றுபடும் நீங்கள், உங்களையே நம்பி வாழும் ஏழைத் தொழிலாளர்களின் சுபீட்சத்துக்காக ஏன் ஒன்றுபட முடியாது? அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பதுபோல் மலையகத் தொழிற் சங்கங்கள் அனைத்தும் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

உங்களுடைய கூட்டணிகள் உங்களின் சுயநலத்துக்காக அமைக்கப்படும் தற்காலிக கூடாரங்களாக இல்லாமல், உறுதியாக கட்டி எழுப்பப்பட்ட பல மிக்க கட்டடமாக அமைய வேண்டும். இந்த அமைப்பின் மூலம் தொழிலாளர்களின் நன்மைக்காகக் குரல் எழுப்புங்கள். வெற்றி நிச்சயம்.

இந்தச் சந்தர்ப்பத்தை நீங்கள் தவற விட்டால் மலையகத் தொழிலாளர்களின் சாபத்தில் இருந்து உங்களால் தப்பிக்கவே முடியாது. ஏழைஅழுத கண்ணீர் கூரிய வாளை விடக் கொடியது. அது உங்களை அழித்துவிடும். நீங்கள் ஒன்றுபடத் தவறுவீர்களானால் மக்கள் சமுதாயம் ஒருபோதும் உங்களை மன்னிக்க மாட்டார்கள். உங்கள் எதிர்காலம் உங்களின் கையிலேயே சிந்தித்துச் செயற்படுங்கள்.

***

# முன்னாள் அமைச்சர் ராசா கைது!
# தி.மு.கவுக்கு சோதனை மேல் சோதனை

தமிழக அரசியலில் இதுவரை நடந்திராத புதுமைகளெல்லாம் நடக்கும் காலம் இது. ஊழல் வழக்கொன்றில் தமிழகத்தை சேர்ந்த அமைச்சர் ஒருவர் கைதாகியிருக்கும் புதிய சரித்திரம் எழுதப்பட்டுள்ளது. அவர் சார்ந்த கட்சியான தி.மு.க, மத்திய அரசில் அங்கம் வகிக்கும் நிலையில் முன்னாள் அமைச்சர் ராசா மத்திய புலனாய்வுப் பணியகத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார். இதற்கு முன் தமிழகத்தை சேர்ந்த மத்திய அமைச்சர் டி.டி.கிருஷ்ணமாச்சாரி (காங்கிரஸ்) அ.தி.மு.கவைச் சேர்ந்த சேடப்பட்டி முத்தையா, ம.தி.மு.கவின் மத்திய இணை அமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன் ஆகியோர் ஊழல் லஞ்சக் குற்றச்சாட்டுகளால் தமது அமைச்சர் பதவிகளைத் துறந்ததுண்டு. ஆனால் இம் மூவரும் கைது செய்யப்படவில்லை. இந்த முறை அகப்பட்டுக் கொண்ட ராசாவோ சிபிஐயினால் கைது செய்யப்பட்டமை அவரது கட்சியான திமுகவுக்குப் பெரும் பின்னடைவே. கடந்த வாரம் தொகுதிப்பங்கீடு செய்ய டில்லி சென்ற கலைஞரிடம் சோனியா காந்தி ராசா கைது செய்யப்படலாம் என்ற விடயத்தைச் சூசகமாக தெரிவித்திருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஊழலுக்கு எதிராக கண்டிப்பாக நடக்கும் பிரதமர் என்ற இமேஜை காத்துக் கொள்ள மன்மோகன் சிங்குக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இது உதவும். அதேநேரம் தோழமைக் கட்சியான திமுகவின் பேரம் பேசும் சக்தியை மட்டுப்படுத்தவும் ராசா கைது காங்கிரஸிக்குப் பெரிதும் வாய்ப்பாக இருக்கும். சட்டசபைத் தேர்தல் கூட்டணியில் திமுகவிடம் அதிக இடங்களைத் தட்டிக் கேட்டுப் பெற காங்கிரஸ் திட்டமிட்டுள்ளது. இப்போது ராசா விவகாரம் சூடு பிடித்திருப்பதால் இதனைக் காட்டி மத்திய அரசைக் கவிழ்ப்போம் என காங்கிரசை மிரட்டவும் திமுகவுக்கு இயலாது. ஜெயலலிதா போல் எடுத்தேன் கவிழ்த்தேன் என நடக்கவும் கலைஞர் விரும்பமாட்டார்.

இன்றைய நிலையில் மன்மோகன் சிங் அரசை திமுக கவிழ்ந்தால் 'திமுக ஊழல் கட்சி. ஊழல் செய்த ராசாவைக் காப்பாற்ற முயல்கிறார் கலைஞர்,' என்ற அவப்பெயரைசுமக்க நேரிடும். திமுக காங்கிரசுக்கான ஆதரவை விலக்கி அதனால் மன்மோகன்சிங் அரசு கவிழ்ந்தால் உடனடியாக அதிமுக, காங்கிரஸ் கூட்டணி உருவாகி ஊழலற்ற ஆட்சி என்ற கோஷத்தில் தேர்தலைச் சந்திப்பார்கள். அவ்வேளை தமிழகத்தில் திமுக படுதோல்வி அடைய நேரிடும். ஆதலால் திமுக இன்று அடக்கி வாசிக்க வேண்டிய நிலையில் உள்ளது.

சோனியாவைச் சந்திக்கச் சென்ற கலைஞர் ராகுல் காந்தியையும் சேர்ந்தே சந்திக்க நேர்ந்தது. தற்போது தன்வசமுள்ள 35 தொகுதிகளுக்குப் பதிலாக கூட்டணியில் 80 இடங்களை ராகுல் காந்தி கேட்டுள்ளார். இதைச் சற்றும் எதிர்பாராத கலைஞர் பேச்சு நடத்த இருகட்சிகளிலும் குழு அமைப்போம் எனச் சமாளிக்க முயன்றுள்ளார். அது மாத்திரமின்றி பா.ம.க வைச் சேர்க்கக் கூடாது என்ற நிபந்தனை வேறு தி.மு.கவுக்கு விதிக்கப்பட்டுள்ளது. இதனால் தி.மு.க தரப்பு வாயடைத்துப் போயுள்ளது. மத்திய அரசிலிருந்து விலகுவோம் என்று தி.மு.க வால் இன்று பாச்சா மட்டுமே காட்டமுடியும். எனவே காங்கிரஸ் ஆட்சியைக் கவிழ்ப்பது தி.மு.க.வைப் பொறுத்தவரை அரசியல் தற்கொலையாகவே முடியும்.

இதேவேளை கெஞ்சினால் மிஞ்சுவது; மிஞ்சினால் கெஞ்சுவது என்ற போக்கிரித்தனத்தனமான அரசியல் நடத்தி வந்த டாக்டர் ராமதாஸ் கடந்த வார அரசியல் நிகழ்வுகளில் தோலுரித்துக் காட்டப்பட்டுள்ளார். டில்லி சென்ற கருணாநிதி "பா.ம.கவும் எங்கள் அணியில் தான்" என்று கூற, அதை மறுப்பது போல 'இன்னும் அதுபற்றி முடிவெடுக்கவில்லை' என்று ராமதாஸ் அறிக்கை விட, சோனியா வேறு 'பா.ம.க வேண்டாம்' என்று கலைஞருக்கு அறிவுறுத்த, கலைஞர் 'இந்த மடையன் ராமதாசுக்காக நான் காங்கிரஸிடம் வக்காலத்து வாங்கப் போக ராமதாஸ் இப்படி அறிக்கை விடுகிறானே' எனக் கடுப்பாகி விட்டார். பா.ம.க வைச் சேர்ப்பது குறித்து ஆலோசனை தான் நடக்கிறது' என்று கலைஞர் அறிக்கை விட்டதும் டாக்டர் ராமதாஸ் வெலவெலத்துப் போய்விட்டார். ஸ்பெக்டரம் ஊழல் பற்றி தி.மு.கவை கண்டிக்காமல் நல்லபிள்ளைப் பெயர் வாங்கியதெல்லாம் எதற்காக? தி.மு.கவில் சேரத்தானே! இப்படியிருக்க நமக்காக டில்லியில் கலைஞர் பரிந்து பேச நாங்கள் தி.மு.க அணியில் இல்லை என்று முட்டாள் தனமாக நான் உளறி விட்டேனோ?'' என ராமதாஸ் இப்போது கவலைப்படுகிறாராம்.

> *ராசா விவகாரம் சூடு பிடித்திருப்பதால் மத்திய அரசைக் கவிழ்ப்போம் என காங்கிரஸை மிரட்ட திமுகவால் இயலாது. ஜெயலலிதா போல் எடுத்தேன், கவிழ்த்தேன் என நடக்கவும் கலைஞர் விரும்ப மாட்டார்.*

2004-2009 வரை முந்தைய காங்கிரஸ் கூட்டணி அரசில் சுகாதார அமைச்சராக இருந்த போது அன்புமணி செய்த ஊழல்களையும் காங்கிரஸ் கட்சி இப்போது தூசு தட்டி எடுத்திருப்பதாக கூறப்படுகிறது. இதன் மூலம் ஒரு வேளை பா.ம.கவை கூட்டணியில் சேர்க்கநேர்ந்தாலும் குறைவான தொகுதிகளுடன் அடக்கி விடலாமென காங்கிரஸ் மனப்பால் குடித்துவருகிறது. இது ஒரு நல்ல தந்திரமே. மத்தியில் ஆளும் அரசுகள், சி.பி.ஐ என்ற மத்திய புலனாய்வுப் பணியகத்தின் மூலம் தமது எதிரிக்கட்சி அரசியல்வாதிகள் மீது ஊழல் வழக்குப் போட்டு அவர்களை மிரட்டி அடக்குவது வழமையாக நடப்பது தான். காங்கிரஸ் மட்டுமன்றி பி.ஜே.பியின் வாஜ்பாய் கூட இந்த வெட்கம் கெட்ட மிரட்டல் உத்தியைச் கையாண்டவரே.

'ராசாவின் கைது, காங்கிரசின் மிரட்டல் உத்தி' என ஜெயலலிதா கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது. பா.ம.கவை மிரட்டவும் இதே உத்தி பயன்படலாம். குறிப்பாக பா.ம.க எழுச்சி பெற்றதே 1996- 1998 காலப் பகுதியில் தமிழக காங்கிரஸ் வீழ்ச்சியடைந்த பின்னணியில் தான். திண்டிவனம் ராமமூர்த்தி, காலஞ் சென்ற வாழப்பாடி ராமமூர்த்தி, டாக்டர் ராமதாஸின் சம்பந்தி M.கிருஷ்ணசாமி எனத் தமிழக காங்கிரஸ் தலைமைப்பதவியில் இருந்தவர்கள் பெரும்பாலும் வன்னியர்களே. இன்றும் முன்னாள் எம்பி.இரா.அன்பரசு, அவர் மகள் அருள் அன்பரசு, வாழப்பாடியாரின் மகன் சுகந்தன் ராமமூர்த்தி, M.கிருஷ்ணசாமி போன்றோர் தமிழக காங்கிரஸில் செல்வாக்குடன் உள்ளனர். பா.ம.கவை உடைத்தால் பழைய வன்னிய செல்வாக்கை காங்கிரசுக்குப் பெற்றுக் கொள்ளமுடியும். மேலும் பா.ம.கவுடன் ஒரே கூட்டணியில் இருந்த வேளை முன்னைய தேர்தல்களில் புதுச்சேரி தொகுதியைத் தனக்கு தரும்படி பா.ம.க குடைச்சல் கொடுத்து வந்துள்ளது. தமிழகம் போலன்றி புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் ஈடிணையற்ற தனிக்கட்சியாக இன்னும் காங்கிரஸ் கட்சியே உள்ளது. அதற்கும் வேட்டு வைக்கும் விதமாக பா.ம.க முயற்சி செய்து வருவது காங்கிரசுக்கு எரிச்சல் தரும் விடயமே. 2004 லோக்சபைத் தேர்தலில் பா.ம.க- தி.மு.க- காங்கிரஸ் அணி உண்டானபோது புதுச்சேரியின் ஒரே ஒரு லோக்சபா தொகுதியை காங்கிரசை உச்சிவிட்டு கலைஞர் மூலம் பா.ம.க. பெற்றுக் கொண்டது. அடுத்து வந்த 2009 லோக்சபா தேர்தலில் பா.ம.க, திமுக அணியிலிருந்து சுயமாக வெளியேறியதால் அப்பாடா என புதுச்சேரி காங்கிரஸ்காரர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். நியாயப்படி தி.மு.க- காங்கிரஸ் கூட்டணியில் புதுச்சேரி தொகுதியை கலைஞர் பழையபடி காங்கிரசுக்கே விட்டுக் கொடுக்க காங்கிரஸ் கட்சி வேட்பாளர் நாராயணசாமி வெற்றி பெற்றார். வட மாவட்டங்களில் பா.ம.க கேட்கும் தொகுதிகளில் பல, காங்கிரசின் பழைய கோட்டைகளாகும். எனவே பா.ம.கவை கழற்றி நடுத்தெருவில் தனித்துவிடவே சோனியா வியூகம் வகுத்துள்ளார். இது டாக்டர் ராமதாஸ் எதிர்பாராத ஒன்று. பழைய படி ஜெயலலிதாவிடம் மண்டியிட டாக்டர் ராமதாஸ் விரும்பவில்லை. மிரட்டியும் உருட்டியும் கடைசியில் கலைஞருடன் சேர்வதே அவரது திட்டம். அதற்காகவே ராசாவின் ஊழல் பற்றி மூச்சுக் கூட விடாமல் இருந்து வருகிறார். ஆனால் அவரது திட்டத்துக்கு காங்கிரஸ் வடிவில் ஆப்பு வந்துள்ளது.

காங்கிரஸ்- தி.மு.க கூட்டணிக்கு ராசா விவகாரம் பெரிய இடிதான். தி.மு.க.வுக்கு ஆதரவாகப் பேச யாருமே இல்லை என்பதே இன்றைய களநிலவரம். ஒருவேளை தி.மு.க ஆறுமாதங்களுக்கு முன் காங்கிரஸ் கூட்டணியிலிருந்து விலகியிருந்தால் இரண்டு கம்யூனிஸ்ட்டுக்களின் ஆதரவாவது கிடைத்திருக்கும். தி.மு.க- கம்யூனிஸ்ட்கள் உறவு முறிந்ததே காங்கிரசுடன் தி.மு.கவின் உறவினால் தான். ஆனால் இன்று காங்கிரசை விட்டு தி.மு.க விலகினாலும் கம்யூனிஸ்ட்டுக்கள் தி.மு.க அணியில் சேர இயலாதபடி ராசாவின் ஊழல் விவகாரம் முளைத்துள்ளது. எனவே என்ன ஆனாலும் காங்கிரசுடன் சேர்ந்து பயணிக்க வேண்டிய நிலை தி.மு.கவுக்கு ஏற்பட்டுள்ளது.

இன்றுள்ள தி.மு.க எதிர்பாளர்களில் ஜெயலலிதாவை முந்திக் கொண்டு வரிந்து கட்டிக் கொண்டு நிற்பவரும் மூர்த்திகளான வை.கோ, விஜயகாந்த், தா.பாண்டியன் ஆகியோர் சிறந்த மேடைப் பேச்சாளர்கள். இப்போது கம்யூனிஸ்ட்டுக்களுடன் கூட இணங்கப்பாட்டுக்கு வரமுடியாதபடி ராசா ஊழல் விவகாரம் கலைஞரை கட்டிப் போட்டு விட்டுள்ளமை அவரது துரதிஷ்டமே.

எஸ்.சுரேந்திரஜித்

***



# அபாயத்தை எதிர்கொள்ள தமிழர்கள் தயாராகவேண்டும்



கடந்த 30 வருடகால யுத்தத்தின்போது வடக்கு-கிழக்கு மாகாணங்கள் சமூக, பொருளாதார, பௌதீக, உட்கட்டமைப்பு ரீதியில் சிதைந்து சின்னாபின்னமாகப் போயுள்ளன. அத்துடன் அரசியல், சமூக, பொருளாதார நிலைகளில் பல்வேறு பின்னடைவுகளைச் சந்தித்தவண்ணமே இருக்கின்றன. அரசியல் காரணிகளும் இயற்கையும் இங்கு வாழும் மக்களின் இருப்பையும் வாழ்வுரிமையையும் பெருமளவில் பாதிக்கின்றன. அதிலும் இயற்கை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவப் புறப்பட்ட அரசியல் வாதிகள் பிரதேசத்துக்கு பிரதேசம் பாகுபாடுகளைக்காட்டி அந்த மக்களின் நம்பிக்கைகளை சிதைத்திருக்கின்றனர்.

*தென்னிலங்கைச் சிங்கள மக்களுக்கு மாங்குளத்தில் குடியேற சிறந்த ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க அரசு முயலலாம். இது விடயத்தில்தான் மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.*

நாட்டில் இனி எல்லா மக்களின் வாழ்விலும் சுபீட்சமான எதிர்காலம் பிறக்கும் என்ற ஜனாதிபதியின் கருத்து எந்தளவுக்கு நிலைநாட்டப்படுகின்றது என்பது, தமிழ் மக்களுக்கு இப்போது மறுக்கப்படும் சலுகைகளிலும் உரிமைகளிலும் இருந்து புலப்பட்டு நிற்கின்றது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தின்போது இடம்பெயர்ந்த் மக்கள் இன்னமும் முழுமையாக மீள்குடியேற்றப்படவில்லை. போரில் ஈடுபட்டதாகக் கூறி தடுப்பு முகாங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்,யுவதிகள் கணிசமானோரின் விடுதலை பற்றிக் கதை இல்லை. நலன்புரி முகாம்களில் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இன்னமும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மீளக் குடியேற்றப்பட்ட மக்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் எவையும் முழுமையாக ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. தொழில் வாய்ப்பு இன்மையால் இந்த மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.

இவற்றுக்கு மேலாக, இந்தப்பகுதிகளில் சமூக விரோதச் செயல்கள் பெருமளவில் தலையெடுத்துள்ளன. சில அரசியல் கட்சிகளைத் தம் பக்கம் இணைத்துக்கொண்டு அரசாங்கம் இப்போது தமிழ் மக்களின் தேசியத்தையும் நிம்மதியான வாழ்வுரிமைகளையும் சிதைக்க முற்படுகின்றது.

உண்மையில் யுத்தத்தினால் அல்லது வேறு அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசம் அபிவிருத்திக்காகத் தெரிவு செய்யப்படும்போது, ஏற்பட்டுள்ள அழிவுகளை மதிப்பிட்டு அதனை அபிவிருத்தி இலக்காகக் கொள்வது அவசியமானதாகும். இந்த வகையான அணுகுமுறைகள் இங்கு கைக்கொள்ளப்படுவதாகத் தோன்றவில்லை. ஆனாலும் மக்கள் பங்களிப்புடனான கீழிருந்து மேல்நோக்கிய அபிவிருத்தி அணுகுமுறை, சில அரசசார்பற்ற நிறுவனங்களினால் கைக்கொள்ளப்படுவது உண்மையே.

பூமுகன்

யுத்தம் முடிவுற்றதும் வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 50,000 வீடுகளை அமைத்துக் கொடுக்கும் இந்திய அரசாங்கத்தின் திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் ஆரம் பிக்கப்பட்டபோதும் இடையில் குறுக்கிட்ட பருவப் பெயர்ச்சி மழையைக் காரணம் காட்டி இரண்டாம் கட்டப் பணிகள் முடக்கப்பட்டன. அதற்கிடையில் இந்திய அரசின் வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தில் பாதியை சேதத்துக்குள்ளான வீடுகளைப் புனரமைப்பதற்குப் பயன்படுத்துவதென்றும்,வேறு மாகாணங்களுக்குள்ளும்(சிங்கள மக்களின் பகுதிகள்) இந்த வீட்டுத்திட்டம் அமையும் எனவும் செய்திகள் வெளியாகின.

யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து தற்போது மீள்குடியேற்றப்பட்ட மக்கள் இப்போது குடிசைகளுக்குள் இருந்து வாழ்வாதார நெருக்கடிகளை அனுபவித்து வருகின்றனர். அவர்கள் ஒட்டுமொத்த அபிவிருத்தியை விட தமக்கான வாழ்வாதாரத்தையே அதிகம் எதிர்பார்க்கின்றனர்.

**விரும்பியும் விரும்பாமலும்**

மாங்குளத்தின் அமைவிடம் சிறந்ததொரு போக்குவரத்து வலைப்பின்னலின் மூலம் நாட்டின் அனைத்துப் பாகங்ளையும் தொடர்புப்படுத்தக்கூடிய ஓர் முக்கிய மையத்தில் அமைந்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு அத்தியாவசியமான அனைத்து உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளை ஏற்படுத்துவதனூடாக மாங்குளம் நகரத்தை நிர்வாக மையமாக அபிவிருத்தி செய்தல் என்ற உத்தேச திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது.

இது நீண்ட காலங்களுக்கு முன் வடபகுதியில் முன்மொழியப்பட்டதொரு திட்டம். வடபகுதிக்கான கல்வி, பொருளாதார, பண்பாட்டு அமைவிடமாக இதனை உருவாக்குவதெனப் பிரகடனப்படுத்தப்பட்டு திட்டமும் முன்மொழியப்பட்டது. ஆனால் முன்னைய அரசுகளின் இனவாதக் கொள்கைகள் இதற்கு இடமளிக்கவில்லை.

ஆனாலும் இப்போது அது மீள முன்மொழியப்படுவது வடபகுதி மக்களுக்குப் பல சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது.

அபிவிருத்தி என்ற சொல்லை விரும்பாதவர்கள் இந்த உலகில் இருக்கமாட்டார்கள். அடக்குமுறைகளுக்கு எதிராக கிளர்ந்தெழுபவர்களும்,அரசின் கொள்கைகளை எதிர்ப்பவர்களும் தீவிரவாதிகளாகவும் பயங்கரவாதிகளாகவும் சித்திரிக்கப்படுகின்றனர். இவர்களின் இவ்வாறான செயற்பாடுகளுக்கு என்ன அடிப்படை என்று எவரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

**உத்தேச மாங்குள நகர அபிவிருத்தித் திட்டம்**

வட பிராந்தியத்தின் அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு இட ரீதியிலான நகரப் படிநிலை கட்டமைப்பை அடையாளம் கண்டுள்ளது. அங்கே சிறந்ததொரு சேவை விநியோகம், ஒருங்கிணைப்பு மற்றும் சிறந்ததொரு உட்கட்டமைப்புகளுடன் இணைந்ததாக பிராந்திய மற்றும் தேசிய அத்தியாவசிய தேவைகள் போன்றவற்றைப் பூர்த்தி செய்து கொள்வதற்குத் தேவையான நிர் வாக மையத்தை அடையாளம் கண்டுகொள்ளுதல் மிகவும் அவசியமானதாகும். இது மாங்குளம் உத்தேச அபிவிருத்தியின் இலக்காக உள்ளது.அதன் அடிப்படையில் இத்திட்டத்தில்கீழ்க்காணும் அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1) பௌதிக உட்கட்டமைப்பு அபி விருத்தி

புதிய பாதை, வலைப்பின்னலை ஏற்படுத்தல், மின் விநியோக, நீர் விநியோக வலைப்பின்னல்கள், வீடமைப்பு திட்டங்கள்,பாடசாலை, வைத்தியசாலை, தபால் அலுவலகம் மற்றும் ஏனைய சமூக உட்கட்டமைப்பு வசதிகளையும் நிர்வாகக் கட்டடங்களையும் மேம்படுத்தல் அல்லது நிர்மாணித்தல்.

2) உட்கட்டமைப்பு அபிவிருத்தி

பாடசாலைகள், நகர மண்டபம், மாகாண சபை கட்டிடத் தொகுதி, விளையாட்டு மைதானம்,பிராந்திய பொலிஸ் நிலைய கட்டிடத் தொகுதி, பொது வாசிகசாலை என்பவற்றை உருவாக்குதல்.

3) வாழ்க்கைத் தொழில் அபிவிருத்தி

உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்தக்கூடிய தொழிற்சாலைகள் மற்றும் தொழிற் பயிற்சி நிலையங்களை ஸ்தாபித்தல்

4) சமூக அபிவிருத்தி:

விளையாட்டு மைதானங்கள், சனசமூக நிலையங்கள், மதவழிப்பாட்டுத் தலங்கள் போன்றவற்றை ஏற்படுத்தல்,சுயதொழில் அபிவிருத்திக்காக உதவிகளை வழங்குதல் போன்றவை

மாங்குளம் நகர அபிவிருத்தியின் நோக்கம் என்பது இனப்பரம்பலை மேற்கொள்வதாகவே இருக்கின்றது.மாங்குளம் பிரதேசம் விசாலமான காணி வசதிகளைக் கொண்டது. இது; அபிவிருத்தியின்போது மீன்பிடி,விவசாயம்,வர்த்தகம் என்பவற்றின் மையப்பகுதியாக மாறக்கூடியது. எனவே மாங்குளத்தை ஒரு வர்த்தக சந்தைப்பகுதியாக எதிர்காலத்தில் மாற்றமுடியும். இதற்கு ஏற்ற இன்னுமொரு திட்டமாக ஆசிய நெடுஞ்சாலை அபிவிருத்தித் திட்டத்திலும் மாங்குளம் உள்ளடங்குகின்றது.

மாங்குளம் நகரத்தை ஐந்து லட்சம் மக்கள் வசிக்கும் பகுதியாக மாற்றுதல் என்பதுதான் இப்போது எழுந்துள்ள பிரச்சினை. இப்போது மாங்குளத்தில் இதன் கால்பங்கு சனத்தொகை கூட இல்லை. வன்னியின் ஏனையபகுதி மக்கள் தாம் இருக்கும் இடங்களிலேயே காணிவசதிகளைக் கொண்டுள்ளனர். இவர்கள் மாங்குளத்தில் குடியேற முன் வருவரெனக் கூற இயலாது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி தென்னிலங்கைச் சிங்கள மக்களுக்கு சிறந்த ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க அரசு முயலலாம்.இது விடயத்தில் தான் மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.பணத்துக்காக இப்பகுதிகளிலுள்ள தமது காணிகளை விற்கும்போது மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டிய தேவை எழுந்திருக்கின்றது.

உத்தேசிக்கப்பட்டுள்ள ஆசிய நெடுஞ்சாலை அபிவிருத்தித் திட்டமானது இந்தியாவின், தமிழ்நாட்டில் இருந்து ஆரம்பிக்கின்றது. அது தலைமன்னார் வழியாக மதவாச்சி, கொழும்பு, அம்பாந்தோட்டை,

ஒலுவில், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய நகரங்களை இணைப்பதுடன் மதவாச்சியிலிருந்து மாங்குளம், யாழ்ப்பாணம் வரை நெடுஞ்சாலை மற்றும் புகையிரதப்பாதை வசதி ஏற்படுத்தும் வகையில் அமையும் திட்டமாகும். இதுவும் இலங்கை அரசின் எதிர்கால இலக்குக்களாகும்.

இவ்வாறான நீண்டகாலத் திட்டங்களுடன் வடபகுதியில் ஒரு மையத்தை ஏற்படுத்தி அந்தப்பகுதிகளில் வெளிநாட்டு நிறுவனங்களை நிலை கொள்ளச்செய்யஅரசு முற்படுகின்றது. இதற்காகப் போட்டி போட இரண்டு நாடுகள் தயார் நிலையில் இருக்கின்றன.

எது எப்படியானாலும் வடபகுதியில் அபிவிருத்தி அவசியமானதுதான். அது பாதிக்கப்பட்ட மக்களின் குரல்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாக இருப்பதும்,ஒரு இனத்தின் பண்பாடு, கலாசாரம் வாழ்வுரிமை என்பவற்றுக்கு மதிப்பளிக்கும் வகையிலும் அமைவதே பொருத்தமானது.

***

# ராசி-பலன்

**13.02.2011 - 19.02.2011**




அச்சுனி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்

சமூக நலனில் அதிக அக்கறை கொண்ட நீங்கள் அவ்வப்போது அநியாயத்திற்கு எதிராக குரல் கொடுப்பவர்கள். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பிள்ளைகளின் நினைவாற்றல் கூடும். வீடு, வாகனம் வாங்குவீர்கள் எதிர்பார்த்த வகையில் உதவியுண்டு. அம்மாவின் உடல் நிலை சீராகும். நீண்ட நாட்களாக போக நினைத்த புண்ணியத் தலங்களுக்குச் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்'தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். உங்களின் திறமைகள் வெளிப்படும். வெற்றிக்கு வித்திடும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 2, 5 அதிர்ஷ்ட நிறங்கள் : ஊதா, கிரே அதிர்ஷ்ட திசை : வடகிழக்கு




கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்

உண்மையை விரும்பும் நீங்கள், மறைத்துப் பேசுபவர்களை கண்டால் கோபப்படுவீர்கள். பூர்வ புண்யாதிபதி புதன் சாதகமான வீடுகளில் செல்வதால் தடைபட்ட பணிகளை விரைந்து முடிப்பீர்கள். பிள்ளைகளால் உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். உடன்பிறந்தவர்களின் பிரச்சினையை தீர்த்த வைப்பீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உங்களை நம்பி சில முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார். தொலைநோக்கு சிந்தனையுடன் செயல்பட வேண்டிய வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 1, 6 அதிர்ஷ்ட நிறங்கள் : ரோஸ், வெளிர்பச்சை அதி'ர்ஷ்ட திசை : தென்மேற்கு.





மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

எல்லாம் தெரிந்திருந்தாலும் அடக்கமாக இருக்கும் நீங்கள், சண்டை சச்சரவு என வந்து விட்டால் பதுங்கமாட்டீர்கள். குடும்பத்தில் நிம்மதி உண்டு. ஓரளவு பணவரவு உண்டு. மகளுக்கு நல்ல வரன் அமையும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பூர்வீக சொத்தை சீர் செய்வீர்கள். வழக்கில் வழக்கறிஞரை மாற்றுவீர்கள். திடீர் பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். வியாபாரத்தில் போட்டிகள் இருக்கும். வாடிக்கையாளர்களை கனிவாக நடத்துங்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளின் அந்தரங்க விஷயங்களை வெளியில் சொல்ல வேண்டாம். பொறுப்புகள் அதிகரிக்கும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 4, 7 அதிர்ஷ்ட நிறங்கள் : பிங்க், வெள்ளை அதிர்ஷ்ட திசை : வடக்கு.




புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

சொல்ல வந்ததை சூசகமாக சொல்லாமல் நெற்றியடியாய் நேருக்கு நேர் பேசுவதில் வல்லவர்களே! திருமணம், சீமந்தம் போன்ற சுப நிகழ்ச்சிகளில் முதல் மரியாதைக் கிடைக்கும்.வீடு, மனை வாங்குவது, விற்பது லாபகரமாக அமையும். வழக்குகள் சாதகமாகும். தாய்வழி உறவினர்கள் உதவுவார்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். பழுதாகிக் கிடந்த வாகனத்தை மாற்றுவீர்கள். தந்தையாரின் உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். 7, 11, 13 அதிர்ஷ்ட எண்கள் : 3, 8 அதிர்ஷ்ட நிறங்கள் : நீலம், மஞ்சள் அதி'ர்ஷ்ட திசை : தென்மேற்கு.




மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்

தொட்டகாரியத்தை துலக்கும் ஆற்றல் கொண்ட நீங்கள், ஒரு காரியத்தை எடுத்து விட்டால் ஒருபோது முடிக்காமல் விடமாட்டீர்கள். வீடு, மனை சேர்க்கை, வாகன வசதி எல்லாம் உண்டு. குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். சகோதர வகையில் உதவியுண்டு. பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். மகனுக்கு வேலைக் கிடைக்கும். கால், முதுகுவலி, தூக்கமின்மை வரக்கூடும். உறவினர்கள், நண்பர்களால் ஆதாயம் உண்டு. வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிக்க வேண்டி வரும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். சூழ்ச்சிகளை தாண்டி முன்னேறும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 6, 9 அதிர்ஷ்ட நிறங்கள் : கிரே, வைலெட் அதிர்ஷ்ட திசை : வடக்கு.




உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்

தப்பு செய்தவர்களை தட்டிக் கேட்கும் நீங்கள், உறவினர்களைக் காட்டிலும் நண்பர்களுக்கே அதிக முக்கியத்துவம் தருவீர்கள். பிரபலங்களின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். குடும்பத்தில் நல்லது நடக்கும். பணப்பற்றாக் குறை விலகும். உடன்பிறந்தவர்களிடம் விவாதம் வந்துப் போகும். வாகனம் பழுதாகும். வயிற்று வலி வந்து விலகும். உறவினர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். 9, 10 யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். வியாபார ரீதியாக அதிரடி மாற்றங்களை நிகழ்த்துவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஒதுக்கப்பட்டாலும் அதிகாரிகளால் மதிக்கப்படுவீர்கள். அதி'ர்ஷ்ட எண்கள் : 2, 7 அதிர்ஷ்ட நிறங்கள் : மெரூண், க்ரீம் வெள்ளை அதிர்ஷ்ட திசை : தெற்கு.




சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்

கால ஓட்டத்தை உணர்ந்து அதற்கேற்ப காய்களை நகர்த்தும் வல்லமை கொண்ட நீங்கள் எப்போதும் எளிமையை விரும்புவீர்கள். சில பிரச்சினைகளுக்கு எதார்த்தமான முடிவுகள் எடுப்பீர்கள். பிள்ளைகள் உங்கள் மனங்கோணாமல் நடந்து கொள்வார். வீடு, வாகனத்தை சீர் செய்வீர்கள். உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். முன்கோபம், வாக்குவாதம், கண் எரிச்சல் வந்து நீங்கும். வியாபாரத்தை விரிவுபடுத்துவது தொடர்பாக நம்பிக்கைக்குரியவர்களின் ஆலோசனையை நாடுவீர்கள். சக ஊழியர்களால் மன உளைச்சல் வரக்கூடும்.துவளாத மனசுடன் செயல்படும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 4, 9 அதிர்ஷ்ட நிறங்கள் : ப்ரவுன், ஆரஞ்சு அதி'ர்ஷ்ட திசை : கிழக்கு





விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

பிறர் நிழலில் வாழ விரும்பாத நீங்கள், தன் சம்பாத்தியத்தில் கூழ் கிடைத்தாலும் அமிர்தமாக நினைப்பீர்கள். குழந்தை பாக்கியம் உண்டாகும். குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் செல்வாக்குக் கூடும். உங்கள் ரசனைக் கேற்ப வீடு, வாகனம் அமையும். தங்க ஆபரணங்கள் வாங்குவீர்கள். பேச்சால் பிரச்சினை, இழப்பு, ஏமாற்றம் வந்து நீங்கும். மூத்த சகோதரர் பாசமாக இருப்பார். அரசாங்க வேலைகள் உடனே முடியும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். அதிக சம்பளத்துடன் புது வாய்ப்புகள் தேடிவரும். அனைவராலும் மதிக்கப்படும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 1, 2 அதிர்ஷ்ட நிறங்கள் : மஞ்சள், மயில்நீலம் அதிர்ஷ்ட திசை : மேற்கு




மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்

பிரச்சினைகளை கண்டு அலட்டிக்கொள்ளாத நீங்கள், எதுவாக இருந்தாலும் சந்திக்க தயங்கமாட்டீர்கள். பொதுநலனிலும் அக்கறைக் கொண்டவர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். புது சொத்து வாங்குவீர்கள். உறவினர்கள் வலிய வந்து உறவாடுவார்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். தாயருடன் இருந்த மோதல்கள் விலகும்- உடன்பிறந்தவர்களால் ஆதாயம் உண்டு. வெளிநாடு செல்ல விசா கிடைக்கும். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளைத் தாண்டி அதிகாரியின் ஆதரவை பெறுவீர்கள். அலைச்சலுடன் ஆதாயம் அடையும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 3, 8 அதிர்ஷ்ட நிறங்கள் : கிரே, சிவப்பு அதிர்ஷ்ட திசை : தென்கிழக்கு.




உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்

பள்ளிப் பருவத்திலேயே வைராக்கியத்துடன் எதையும் செய்து முடிக்கும் நீங்கள் மனதில் பட்டதை பளிச்சென பேசும் பழக்கம் உடையவர்கள். கௌரவப் பதவிகள் தேடி வரும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்பர். குழந்தை பாக்கியம் உண்டாகும். பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். பணவரவும் திருப்திகரமாக இருக்கும். ஆடம்பரச் செலவுகளை தவிர்க்கப்பாருங்கள். கர்ப்பிணிப் பெண்கள் பயணங்களை தவிர்ப்பது நல்லது. நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். விடாமுயற்சியால் வெற்றி பெறும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 1, 7 அதிர்ஷ்ட நிறங்கள் : பழுப்பு, பிஸ்தாபச்சை அதிர்ஷ்ட திசை : வடகிழக்கு.




அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்

எதார்த்தமாகப் பேசும் நீங்கள், அவ்வப்போது கற்பனையில் மூழ்குவதுண்டு. தாராளமாக தர்மம் செய்யும் நீங்கள், பழைய கலைப் பொருட்களை பாதுகாப்பவர்கள். பிள்ளைகளிடம் குவிந்துக் கிடக்கும் திறமைகளை இனம் கண்டறிந்து வளர்ப்பீர்கள். உடன்பிறந்தவர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பழைய இனிய சம்பவங்களை நினைத்து மகிழ்வீர்கள். உறவினர்கள், நண்பர்கள் வீட்டு சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். சொத்துப் பிரச்சினைக்கு சுமுக தீர்வு காண்பது நல்லது. உணர்ச்சிவசப்படாமல் மூளைக்கு வேலை தர வேண்டிய வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 1, 9 அதிர்ஷ்ட நிறங்கள் : மெரூண், வைலெட் அதிர்ஷ்ட திசை : மேற்கு.




பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

கடினமாக உழைக்கும் குணமும், நல்லதை நினைக்கும் மனசும் கொண்ட நீங்கள்; எதிபார்ப்புகளின்றி மற்றவர்களுக்கு உதவுபவர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். புது வீடு கட்டி குடிப்புகுவீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். சகோதர வகையில் நன்மை உண்டு. சொத்து வாங்குவது, விற்பது லாபகரமாக அமையும். உறவினர்கள் உதவுவார்கள். வாகனத்தில் செல்லும் போது அலட்சியம் வேண்டாம். வியாபாரத்தில் தேங்கிக் கிடந்த சரக்குகள் விற்றுத் தீரும். உத்தியோகத்தில் வேலைச்சுமை இருக்கும். முயன்று தவறி முன்னேறும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 5, 7 அதிர்ஷ்ட நிறங்கள் : வெள்ளை, ரோஸ் அதிர்ஷ்ட திசை : தென்கிழக்கு.

# உடலமைப்பு, முக அழகிற்கான ஜோதிடம்

சாதாரணமாக உடலாதிபதி என்பவர் சந்திரன்தான். அவர்தான் தோற்றங்களுக்குரிய கிரகம். தோற்ற அமைப்பிற்கு உரிய கிரகம். உதாரணத்திற்கு சுக்ரன் நன்றாக இருக்கிறாரென்றால், ஒருவிதமான காந்தமான கண்கள், கனிவான கண்கள். அவர்கள் சும்மா போய்க் கொண்டிருந்தால் கூட, என்ன சார்? நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? என்று பேச வைக்கக் கூடியவர்கள். அந்த மாதிரியான கண்களெல்லாம் சுக்ரன் நன்றாக இருந்தாரென்றால் அந்த ஒளி அவர்களிடம் இருக்கும். அவர்களெல்லாம் பெரிதாக ஒன்றும் நம்மிடம் பேச வேண்டும் என்று அவசியமே இருக்காது. சும்மா அப்படி பார்த்து கண் சிமிட்டினாலே போதும் நாம் விழுந்துவிடுவோம். அந்த மாதிரியெல்லாம் இருப்பார்கள்.

சந்திரனும் அதேபோல வலுவாக இருக்க வேண்டும். சந்திரன்தான் முகத் தோற்றம், முகப்பொலிவு, அந்த உருண்டை முகம், அந்த முகத்திற்கு தகுந்த மாதிரி மூக்கு, கண், காது எல்லாம் செதுக்கி வைத்திருக்கிறது என்று சொல்வார்களே, அதெல்லாம் சந்திரன்தான். லக்னாதிபதி, உதாரணத்திற்கு மேஷ லக்னம் என்றால் அதிகமான உயரமாக இருக்க மாட்டார்கள். சராசரி உயரம், பருத்த தேகம் அல்ல. ஒல்லியாகவும் இல்லாமல் உயரத்திற்கு ஏற்ற சதைப் பிடிப்புடன் இருப்பார்கள். இதுபோல அங்க லட்சணங்கள் ஒவ்வொரு நட்சத்திர ராசிக்கும் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் அதுபோலத்தான் இருப்பார்கள். ரிஷப ராசிக்காரர்கள் என்றால் சராசரி உயரம், அதற்கும் மேலாக இருப்பார்கள்.

மிதுனம், கன்னி இதெல்லாம் புதன் ராசி. இவர்களுக்கு மூக்கின் நுனி கொஞ்சம் உருண்டையாக இருக்கும். குறிப்பாக கன்னி ராசிக்காரர்களுக்கு மிளகாய் மூக்கு இருப்பதையெல்லாம் பார்க்கிறோம். இதற்கடுத்து துலாம், சிம்மம், மகரம் ராசிக்காரர்களைப் பார்த்தீர்களென்றால், மூக்கு நீளமாக இருக்கும். தனுசு, மீனம் ராசிக்காரர்களுக்கு புட்டபர்த்தி பாபாவிற்கு மாதிரி, ஒரு மாதிரி மடிந்து, அதாவது ஊர் பக்கத்திலெல்லாம் பெருமாள் மூக்கு என்று சொல்வார்களே அந்த மாதிரி இருக்கும்.


மூக்குப் பற்றி ஏன் அதிகமாகச் சொல்கிறேன் என்றால், நாசிதான் சாமுத்திரிகா லட்சணத்தில் பிரதானம். நாசி, கண்கள், நெற்றி அமைப்பு. நெற்றியில் இருக்கும் கோடுகளையெல்லாம் வைத்து சில விஷயங்களைச் சொல்லலாம்.

ஏனென்றால் சனி லக்னத்தையோ, ராசியையோ பார்க்கிறதென்றால் கோடுகள் நெற்றியில் வர ஆரம்பித்துவிடும். இது போன்ற சில விஷயங்கள் உண்டு. அடுத்து, புதன் ஒருவருக்கு வலுவாக இருந்தால் மெல்லிய விரல்கள் நீளமான விரல்கள், இருக்கும். அவருடைய கையைப் பார்க்கும் போதே சொல்லிவிடலாம், புதன் உச்சமாக இருக்கிறார் அவர் ஜாதகத்தில் என்று.

இதுபோன்று, கிரகங்கள் பல விஷயங்களில் அங்க அவையங்களை ஆட்சி செய்கின்றன. ஒரு ஜோதிடர் ஒரு குழந்தையுடைய பிறந்த திகதியைக் கொடுத்தால் தாயின் கர்ப்பத்தில் இருந்தபோது என்னென்ன கிரக அமைப்பில் இருந்திருக்கிறது என்று பார்ப்பார். கர்ப்பம் உருவாகி, திரவ நிலையிலிருந்து திட நிலையில் உருவாகி செல் பிரிகிறதே, மைட்டாசிஸ், மையாசிஸ் அந்த நிலையில் இருந்து அவர் பார்ப்பார். சில மாதங்கள் சில அவயங்கள் சிக்கலாகும் போது, 5வது மாதம் குழந்தை கர்ப்பத்தில் இருக்கும் போது, தாய்க்கு செவ்வாய் இருந்தது. அதனால் 5வது மாதத்தில் இவர்களுக்கு இந்தப் பிரச்சனை உருவாகியிருக்கும். இந்த மாதிரியெல்லாம் சிலவற்றை கண்டறிவார்கள்.

தற்பொழுது ஸ்கேன் எல்லாம் வந்துவிட்டது. கருவில் இருக்கும் குழந்தையைப் பார்க்கிறார்கள். ஆனால், முற்காலத்திலேயே பக்க விளைவுகள் இல்லாமல் இது போன்று பார்த்திருக்கிறார்கள். ★★★

## சொற்சிலம்பம் - போட்டி இல: 456



அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................................

..............................................................

கையொப்பம்:...........................................................

## இடமிருந்து வலம்

1. வெகு சிறப்பு என்பதைக் குறிக்கும் சொல்
4. ஒரு வகைத் தானியம்
6. நிறுத்து/ நிற்பாட்டு
7. கெண்டை மீன்
8. வல்லமை / திறமை
11. சிரசு
12. கெட்டித்தனம்
14. தொண்டையில் இருந்து எழுவது
15. இருபால் இணைவில் உருவாவது
16. தீயைத் தொட்டால்...
17. மனைவி
18. வேள்வி
19. முக்கனிகளுள் ஒன்று
20. யானைக்கு மட்டும் உண்டு
21. ஓட்டுவது இதனால்

## மேலிருந்து கீழ்

1. கடவுளுக்குப் படைத்தது/ நைவேத்தியம் செய்தது
2. மகளிர்/ பெண்கள்
3. வறுமைத்தன்மை
4. பூச்சாகப் படிவது
5. தூர அளவீடு
7. பண்பற்ற தன்மை
9. பர்வதம்
10. வலிமை/ திறன்
13. மாமரத்தில் ஒட்டி வளர்வது
14. தலையில் முடிவது/ காதுக்குள் சேர்வது
15. அம்பு/ பாணம்
16. நலம்
17. கிணற்றில் நீர் அள்ளுவதற்கு உதவுவது.
18. ஏது
19. நட்புக்கு எதிர்ப்பதம்.

## சொற்சிலம்பம் போட்டி இல.455 விடைகள்

### இடமிருந்து வலம்

1.வணிகம் 3.தங்கை 4.வகை 6.சம்பளம் 8.பத்திரகாளி 13.புலமை 14.கன்று 16.சிரஞ்சீவி 18.போர் 19.தனித்துவம்

### மேலிருந்து கீழ்

1.வளைகாப்பு 2.கம்பன் 4.கைதி 5.வள்ளி 6.சமபலன் 7.பத்திரம் 8.பன்மை 9.திருடன் 10.ரசிகன் 11.காமராஜர் 12.திருமணம் 14.கசிவு 15.மணம் 17.ரதி

## சொற்சிலம்பம் போட்டி இல. 456

*சொற்சிலம்பம் 456 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2011 ஆண்டு பெப்ரவரி 26ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஆகியன மார்ச் 06 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.*

*முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*

*அனுப்பவேண்டிய முகவரிகள்:*

**சுடர் ஒளி,**
**85, ஜெயந்த மல்லி மராச்சி மாவத்தை,**
**கொழும்பு-14.**

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**561, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## போட்டி இல. 452 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** — **எஸ்.அன்ரனி,** புதுக்குளம், கனகராயன் குளம், வவுனியா.

**2 ஆம் பரிசு** — **ம.அபூர்வா,** 20,கோவில் வீதி, கல்முனை.3.

**3 ஆம் பரிசு** — **ம.கமலநாதன்,** 16/1, கோணர் வீதி,மட்டக்களப்பு.

## பாராட்டுப் பெறுவோர்

(1) **ம.குகராஜா,**
125/1B தாழ்வுப்பாடு வீதி ,எழுத்தூர்,மன்னார்.

(2) **நா.மகேஸ்வரராஜா,**
இல 21/22 புதுமுகத்துவார வீதி, கல்லடி, மட்டக்களப்பு.

(3) **எஸ்.ஜெகநாதப்பிள்ளை,**
இல.90 வீட்டுத்திட்ட வீதி, அன்னமலை 01 கல்முனை.

(4) **க.சாரதி,**
இல.18/5 குடியிருப்பு வவுனியா.

(5) **ஆர்.குழந்தைவேலு,**
காளிகோவில் தெற்கு வீதி, கோண்டாவில்மேற்கு, கோண்டாவில்.

(6) **வி.தவபாலசிங்கம்,**
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

(7) **எஸ்.ரஞ்சினி,**
இல:24, தாமரைக்கேணி வீதி,மட்டக்களப்பு.

(8) **க.நௌஷாத்,**
பழக்கடை, பி.கே.ரோட் ,ஏறாவூர்-3.

(9) **என்.துஷ்யந்தினி,**
வம்மியடி வீதி, நற்பிட்டி முனை-2, கல்முனை.

(10)திருமதி.சுகிர்தமணி கார்த்திகேசு,
விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை.




**எல்.ரேணுகா**
**கட்டுகஸ்தோட்டை**

*கேள்வி: பித்தரே, இன்று நாட்டில் அதிகம் சிரமம் இல்லாமல் பணம் சேர்க்கத்தக்க தொழில் ஒன்று சொல்லுங்களேன்.*

*பதில்: நாட்டில் இன்று நடப்பதைப் பார்க்கும் போது நிச்சயமாக அது திருட்டுத்தொழில் தான்.*

**ப.இராதாகிருஷ்ணன்**
**பதுளை**

*கேள்வி: காதலை பெற்றோர்கள் வெறுக்கிறார்களே?*

*பதில்: பாவம் அவர்களால் வேறு என்னதான் செய்து விட முடியும்.*

**வன்னியூரான்**
**வவுனியா**

*கேள்வி: காதலித்துத் திருமணம் செய்யும் சில ஆண்கள் பெற்றோரைக் காட்டி சீதனம் கேட்கிறார்களே?*

*பதில்: வீரன் நேரடியாக மோதுவான். கோழை ஆள் வைத்து அடிப்பான் என்று நீங்கள் கேள்விப்பட்டதில்லையா?*

**ப.பகீரதன்**
**உரும்பிராய்**

*கேள்வி:ஒரு மகனைப் பெற்று வளர்த்து மனிதனாக ஆக்கப் பெற்றோர்களுக்கு எவ்வளவு காலம் ஆகிறது.*

*பதில்:20 வருடங்கள் வரை. ஆனால் ஒரு பெண்ணோ அவனை ஒரு சில நிமிடங்களிலேயே முட்டாள் ஆக்கி விடுகிறாளே.*

**க.வேல்நம்பி**
**கிளிநொச்சி**

*கேள்வி:திருமணவாழ்க்கை பற்றிக் கொஞ்சம் சொல்லும் பித்தரே?*

*பதில்:திருமணமாகி முதல் ஆண்டில் கணவன் பேசினால் மனைவி பொறுப்பாள். அடுத்த ஆண்டில் மனைவி பேசினால் கணவன் பொறுப்பான். பிறகு... இருவரும் ஒருவரை ஒருவர் ஏசுவர்; திட்டுவர். ஊரார் பார்த்துக் கேட்டு ரசிப்பர்.*

**எல்.அரவிந்தன், கொழும்பு.**

*கேள்வி:மனைவி காரில் இருந்து இறங்குவதற்காகத் தானே கார்க்கதவைத் திறந்து விடும் கணவர்மார் பற்றி...*

*பதில்:ஒன்றில் கார் புதிதாக இருக்க வேண்டும்; அல்லது மனைவி புதியவளாய் இருக்க வேண்டும்.*

**வே. வரதராஜன்**
**ஏறாவூர்**

*கேள்வி: பித்தரே, ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?*

*பதில்: வளைந்து தான் யாருக்கு என்ன இலாபம்?*

**ம.அருள்நந்தி**
**ஆவரங்கால்**

*கேள்வி: கட்சி விட்டுக் கட்சி பாயும் அரசியல் வாதிகள் பற்றி உங்கள் கருத்து என்னவோ பித்தரே!*

*பதில்: கொப்பு விட்டுக் கொப்பு பாயும் மந்திகள் என்று கூறலாமே.*

**ப.பிரவீணா**
**பதுளை**


*கேள்வி: பித்தரே. நீர் உமது மனைவியிடம் ஒருபோதும் (அடி) வாங்கிக் கட்டிக் கொண்டதில்லையா?*

*பதில்: இப்படிக் குதர்க்கமாகக் கேள்வி கேட்டு என்னைப் பொய் சொல்ல வைத்து விடாதீர் ப்ளீஸ்...*

**பி.மகேஸ்வரி**
**பொரளை**

*கேள்வி: தாய்- தாரம், ஒப்பிடுக-*

*பதில்: தாய்- என்னைப் பெற்றவள். தாரம்- எனக்காகப் பெற்றவள்.*




**எஸ்.அபர்ணா**
**மட்டக்களப்பு**

*கேள்வி: படித்துக் கொண்டே காதலிக்கலாமா?*

*பதில்: சிலர் முடித்துக் கொண்டே படிக்கிறார்களே.*

**ப.மனோகரன், வவுனியா**

*கேள்வி: மனைவியைத் தள்ளி வைக்கலாமா பித்தரே?*

*பதில்:கையாளாத ஆயுதம் கறள் பிடித்துப் போகும்.*




# அளவான பாரம்



ஆசிரியர் ஒரு தள்ளுவண்டி தந்தார். அதற்கு ஒரு சில்லு இருந்தது. அதற்குள் பொருள்களைப் போடலாம். தள்ளிக் கொண்டு போகலாம். அது ஓர் அழகான வண்டி. சில்லு கறுப்பு நிறமாக இருந்தது. நடுத்தட்டு நீல நிறமாக இருந்தது. பிடித்துத் தள்ளுவதற்குச் சட்டமும் இருந்தது. நடுத் தட்டிலே பாரத்தை ஏற்றலாம். தள்ளலாம். சில்லு சுழலும். வண்டி நகரும். விளையாட்டுத் திடலிலே கற்கள் இருந்தன. அவற்றைப் பொறுக்கினோம். அந்த வண்டியிலே ஏற்றினோம். வண்டி நிறையக் கற்கள். பெரிய சுமை. நானும் தம்பியும் தள்ளினோம். வண்டி நகரவில்லை. சில்லு சுழலவில்லை. வண்டி அப்படியே நின்றது. ஆசிரியர் வந்தார். வண்டியைப் பார்த்தார். வண்டி நிறைந்த கற்கள். பெரிய சுமை. பெரிய பாரம். ஆசிரியர் வண்டியின் பாரத்தைக் குறைத்தார். சில கற்களை எடுத்து வெளியே போட்டார். "இப்போது தள்ளுங்கள்" என்றார். தள்ளினோம் சில்லு சுழன்றது. வண்டி நகர்ந்தது. "அளவான பாரம் தள்ளச் சுகம்" என்றார் ஆசிரியர். நாங்கள் மகிழ்ச்சியோடு தள்ளினோம். ★

கலாநிதி சபா ஜெயராஜா.

# ஜோனும் கழுதையும்



ஜோன் என்று ஓர் குடியானவன் இருந்தான். அவன் தன்னிடமிருந்த கழுதையை விற்பதற்காக நகரத்துக்குச் சென்றான். கழுதையைக் கொண்டு போவதற்கு உதவியாகத் தன் மகனையும் அழைத்துச் சென்றான். போகும் வழியில் அவர்களைக் கண்ட ஒருவன் அவர்களின் செய்கையைப் பார்த்து, நகைத்து, "கழுதையை இழுத்துக்கொண்டு போகாமல் யாராவது ஒருவர் இதில் ஏறிப்போகலாமே" என்றான். அதைக் கேட்ட ஜோன் அவன் சொன்னதை ஏற்றுக்கொண்டான்.



கழுதையின்மேல் மகனை ஏற்றி நகரத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தனர். அதனைக் கண்ட வேறொருவன் ஜோனிடம் "இந்தக் கழுதையில் சிறுவனான மகன் ஏறி இருப்பதை விட பெரியவரான நீங்கள் ஏறிப்போகலாமே" என்றான். அதனைக் கேட்ட ஜோன் மகனை கழுதையில் இருந்து இறக்கினான்.



ஜோன் அந்தக் கழுதையில் ஏறி நகரத்தை நோக்கிப் போனான். வழியில் சென்றுகொண்டிருந்த ஒரு பெண் இதனைக் கண்டு "இந்தக் கழுதையில் இருவருமே ஏறிப் போகலாமே" என்றாள். அதனைக் கேட்ட ஜோன் மகனையும் தன்னோடு ஏற்றிக் கொண்டான்.



இருவரும் கழுதையில் ஏறிச் செல்வதைக் கண்ட ஒருவன் 'பாவம் கழுதை அதனை வருத்தாமல் தூக்கிக் கொண்டு போவதுதான் நல்லது' என்றான்.



அதனைக் கேட்ட ஜோன் கழுதையின் கால்களைக் கட்டிக் கம்பு ஒன்றின் உதவியோடு கழுதையைத் தூக்கிச் சென்றனர்.



அவர்கள் ஒரு பாலத்தின் ஊடாகச் சென்றபோது கழுதையைக் கண்ட சிலர் அவர்களின் செய்கையைப் பார்த்து நகைத்து கூக்குரலிடவே கழுதை திமிறி ஆற்றில் விழுந்தது. எல்லோருடைய கதைக்கும் தலையசைத்ததால் ஏற்பட்ட துன்பத்தை எண்ணி ஜோனும் மகனும் கவலைப்பட்டனர்.



லெ.சுபாகரன்,
யா/பரியோவான் கல்லூரி.



ஏ.எஸ்.தமிழ்ச்செல்வி,
மலைமகள் இந்து மத்திய கல்லூரி,
தெல்தோட்டை.



சி.அகல்யா,
யாழ்.இந்து மகளிர் கல்லூரி.




மு.அஜின்,
காமாட்சி முன்பள்ளி.



கி.மரியநிரஞ்சன்,
யா/புனித ஜோன் பொஸ்கோ.

# பார்வை ஒரு தடையல்ல

## உண்மைச் சம்பவம்



“என்ன நடந்ததென்று தெரிய வேண்டாமா? அம்மா, தயவு செய்து கூட்டிப்போங்கள்” கொண்டிபாவின் கெஞ்சலுக்கு மசிந்த அவள் அவனைக் கையைப் பிடித்து வெளியே அழைத்து வந்தாள்”.

**1972 - 73** ஆண்டுக் காலப் பகுதியில் இந்தியாவின் மஹாராஸ்டிர மாநிலத்தில் ஏற்பட்ட கடும் பஞ்சம் கொண்டிபா பொதுபா என்ற 25 வயதுடைய பார்வை இழந்த இளைஞனை பம்பாய் நகருக்குக் குடிபெயர வழி வகுத்தது. வயிற்றுப் பசியைப் போக்கிக் கொள்ளவென சிறுசிறு கூலி வேலைகளைச் செய்தும் அவனால் மூன்று வேளை உணவுக்குக்கூட வருமானம் போதவில்லை பம்பாய் நகரில் பிச்சையெடுக்கும் தொழிலையாவது செய்து தன் வயிற்றைக் கழுவ அவன் முயன்றான். அதன் பலன் பிச்சையெடுத்து வாழ்வதே அவனுக்குப் பிழைப்பாகப் போயிற்று.

வைசூரி நோயின் தாக்கத்தினால் தனது எட்டாவது வயதில் பார்வையைப் பறிகொடுத்துச் சிறிது காலத்திலேயே பெற்றோரையும் இழந்து அநாதையான அவனை ஊரார் தங்களால் முடிந்தவரை ஆதரித்து ஆளாக்கினார்கள். அங்கே ஏற்பட்ட பஞ்சத்தினால் அவனை மேலும் ஆதரிக்க ஒருவருமில்லாமல் போய்விட்டது.

ஏதாவது வழியில் கடவுள் கருணை காட்டுவார் என்று சொல்வதைப் போல் பம்பாயில் துர்க்காராம் என்னும் ஒரு ஏழையும் அவனது மனைவி ‘ஏலான்பாய்’யும் அவனுக்கு அடைக்கலம் கொடுத்தார்கள். தான் பிச்சை எடுத்துச் சம்பாதிக்கும் சிறுதொகையை அவர்களிடம் அவன் கொடுத்துவிட்டுக் காலத்தை ஓட்டிக்கொண்டிருந்தான்.

அது 1975 ஆம் ஆண்டின் செப்ரம்பர் ஐந்தாம் திகதி. அவர்கள் வசித்த ‘கொலிபர்’ என்னும் சேரி பம்பாய் நகருக்கு வட கிழக்கே அமைந்திருந்தது. சமீபத்தில் தான் தொடர்மழை பெய்து ஓய்ந்திருந்தது. எங்கும் சேறும் சகதியும் தான். அந்தச் சேரியின் நடுவே ஒரு ஆழமான கிணறு இருந்தது. நகராட்சி மன்றத்தால் குழாய்த் தண்ணீரைப் போதியளவு அந்தச் சேரிக்கு விநியோகிக்க இயலாததால் எப்போதோ அந்தக் கிணறு வெட்டப்பட்டிருந்தது. சுற்றுச் சுவர் எழுப்பப்படாமல், அவ்வப்போது பெய்யும் மழைக்கு மேற்புறம் இடிந்து, சற்று அபாயகரமான கிணறாகத் தான் அது இருந்தது. மேல்புறம் இடிந்திருந்ததால் ஏறத்தாழ ஒரு புனலின் அமைப்பில் அது இருந்தது. 25 அடிக்குக் குறையாத ஆழம். பெரும் அடிமரங்கள் இரண்டைக் குறுக்காகப் போட்டிருந்தார்கள். அந்த மரத்தில் நின்று கொண்டு வாளியில் கயிறு கட்டித் தேவையான தண்ணீரைச் சேகரித்துக் கொள்வார்கள். இதுவரையும் ஒருவரும் தவறிவிழுந்ததாகச் சரித்திரம் இல்லை. ஒரேயொருமுறை ஒரு கோழி தவறிவிழுந்தது. கயிற்றில் அகலமான பாத்திரமொன்றைக் கட்டி கோழியை உயிரோடு எடுத்துவிட்டார்கள்.

சற்று அபாயகரமான கிணறாகத் தான் அது இருந்தது. மேல் புறம் இடிந்திருந்ததால் ஏறத்தாழ ஒரு புனலின் அமைப்பில் அது இருந்தது. 35 அடிக்குக் குறையாத ஆழம். பெரும் அடிமரங்கள் இரண்டைக் குறுக்காகப் போட்டிருந்தார்கள்.

இதனால் அக் கிணற்றைப் பற்றி எவரும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. அன்றைய தினம் காலை முழுவதும் நகரத்தில் பிச்சையெடுத்துவிட்டு ஏலான்பாய் தயாரித்திருந்த எளிமையான உணவைச் சாப்பிட, கொண்டிபா குடிசைக்குத் திரும்பியிருந்தான். சாப்பிட்டுத்தட்டில் கைவைக்கும் வேளையில் பெரிய அலறல் சப்தங்கள் வெளியே கேட்கத் தொடங்கின.

“என்னை உடனே அங்கே அழைத்துப் போங்கள். என்ன நடந்தது என்று பார்க்கவேண்டும்? என ஏலான் பாயைக் கேட்டான் கொண்டிபா. “உன்னால் என்ன செய்யமுடியுமென்று நினைக்கிறாய்?” இது ஏலன்பாய்.

“என்ன நடந்ததென்று தெரியவேண்டாமா? அம்மா, தயவு செய்து கூட்டிப் போங்கள்” கொண்டிபாவின் கெஞ்சலுக்கு மசிந்த அவள் அவனைக் கையைப் பிடித்து வெளியே அழைத்து வந்தாள்.

அங்கே கிணற்றைச் சுற்றி நின்று ஓலமிடும் சேரி வாசிகள். “அரவிந்த்” என்ற 14 வயதுச் சிறுவன் தண்ணீர் அள்ளும் போது தவறிவிழுந்துவிட்டான். ஒருவருக்கும் - எல்லாரும் பெண்கள் - நீச்சல் தெரியவில்லை. ஆண்கள் எல்லோரும் தொழிலைப் பார்க்கப் போயிருந்தார்கள். விழுந்த பையனையும் காணவில்லை. என்ன நடந்ததென்றும் தெரியவில்லை. கொண்டிபா ஒரு கணமும் தாமதிக்கவில்லை. தன் சட்டையைக் கழற்றிவிட்டு கைகளால் காற்றைத் துழாவிக் கொண்டே கிணற்றடிக்குப் போய் திடீரென்று தண்ணீரில் குதித்து விட்டான்.

பார்வையைப் பறிகொடுக்க முன்னர் கொண்டிபா நன்றாக நீச்சல் தெரிந்தவனாகத்தான் இருந்தான். ஆனால் பார்வை இழந்த பின் நீந்தும் சந்தர்ப்பமோ அல்லது ஆழமான கிணறுகளில் சுழியோடும் வாய்ப்போ அவனுக்குக் கிட்டவில்லை. பார்வை உள்ளவர்களுக்கே தெரியாத பாசிபடிந்த கரும் பச்சை நிறமான தண்ணீர்.

மேற்பரப்பிலே துழாவிய போது அரவிந்தின் உடல் தட்டுப்படவில்லை. மூச்சைப்பிடித்துக் கொண்டு கிணற்றின் அடிமட்டத்துக்குப் போய்த்துழாவினான். பாசிகளும், கொடிகளும் சேறும் தான் தட்டுப்பட்டன. அரவிந்த் தட்டுப்படவில்லை. தண்ணீருக்கடியில் மூச்சை அடக்கி சில நிமிடங்கள் இருந்ததால் நுரையீரலே வெடித்து விடும்போல் மேல் மூச்சுத் திணறியது. மேல் மட்டத்துக்கு வந்து ஆழமாக மூச்சை இழுத்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான். ஆனால் அரவிந்த் இல்லாமல் கொண்டிபா மட்டும் மிதந்தது, சுற்றியிருந்தோரின் குறிப்பாக அரவிந்த்தின் மாமியாரின் அலறலை அதிகப்படுத்தியது. தாமதிக்க நேரமில்லை. அரவிந்த விழுந்ததிலிருந்து 2 நிமிடங்கள் கடந்துவிட்டன. அவன் மிதக்காதபடியால் கீழே எங்கோ சேற்றில் சிக்கியிருக்க வேண்டும். மீண்டும் மூச்சை அடக்கிக் கொண்டு கிணற்றின் அடிப்பகுதியை அடைந்து அங்கும் இங்கும் கைகளால் துழாவினான். அரவிந்த் தட்டுப்படவேயில்லை. சிறு வயதிலே நண்பர்களுடன் சேர்ந்து ஊர்க்கிணறுகளிலே சுழியோடி உடைந்த பீங்கான் துண்டுகளையும் பானைச் சில்லுகளையும் பொறுக்கியெடுத்த போது கொண்டிபாவால் இதைவிடக் கூடிய நேரம் மூச்சை அடக்க முடிந்தது. ஆனால் இப்போது முடியவில்லை. மீண்டும் மூச்சுத் திணறவே மேலே வரவேண்டியதாயிற்று. ஆனால் இரண்டு முறை கைகளால் துழாவித் துழாவி அடிப்பகுதிக்குச் சென்றபடியால் இப்போது கிணற்றின் அமைப்பு ஓரளவு புரிந்தது.

கடைசி முயற்சியாக மீண்டும் ஆண்டவனைவேண்டிக் கொண்டு நீரில் மூழ்கினான். இவ்வளவு காலமும் கண்பார்வை இல்லாதது அவனுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. கண் பார்வையின் முக்கியத்துவத்தை இன்றுதான் அவன் முழுமையாகப் புரிந்து கொண்டான். வெறி பிடித்தவனைப் போல் முழுப் பலத்தையும் பிரயோகித்துத் துழாவினான்.. “இது என்ன?..” ஆம், ஒரு துணி அவன் கையில் சிக்கியது. மேலும் துழாவிய போது அரவிந்தின் கால்கள் தட்டுப்பட்டன. ஒரு பெரிய கொடியில் அவன் உடல் சிக்கியிருந்ததை உணர்ந்து கொண்டான். மூச்சடைத்தது.

(தொடரும்)

**பேபி**

# காதல் மன்னன் ஆவது எப்படி?

1) முதலில் உங்களிடம் இருக்கும் நல்ல ஜீன்ஸ்களை தூக்கி எறிந்துவிட்டு, சில வித்தியாசமான ஜீன்ஸ்களை வாங்கிப் போட்டுக்கொள்ளவும். அது புதிதாக இருந்தால் அங்கங்கே கிழித்துவிட்டு இதய வடிவில் டிசைன் போட்டுத் தைத்துக்கொள்ளவும்.

2) அந்த ஜீன்ஸுக்கு கொஞ்சமும் பொருத்தம் இல்லாத சில ரி- ஷேர்ட்டுக்களை வாங்கி அணிந்து கொள்ளவும் (கேவலமான நிறத்தில் இருந்தால் இன்னும் உத்தமம்). முக்கியமான விடயம் அந்த ரி - ஷேர்ட்டுக்களில் மகா மட்டமான வாசகங்கள் இருந்தால் இன்னும் நல்லது.




3) குளிக்கிறீர்களோ இல்லையோ தலைக்கு கலரிங் செய்துகொள்வது மிகவும் அவசியம். தப்பித்தவறிக்கூட தலையில் எண்ணெய் தேய்த்துக்கொள்ளாதீர்கள்.

4) நண்பனிடமிருந்தோ அல்லது அப்பாவிடம் கெட்ட வார்த்தையில் திட்டு வாங்கியோ ஒரு பைக் வாங்கி வைத்திருப்பது நல்லது. முக்கியமாக அந்த பைக் பள்ஸராவோ, அப்பாச்சியாகவோ, சி.பி.செற்றாகவோ இருப்பது அவசியம்.

5) உங்ளுடைய தங்கச்சியுடன் சண்டை போட்டாவது ஒரு தோட்டை வாங்கிப் போட்டுக் கொள்ளுங்கள்.



6) சிகரெட் பிடிக்கும் பழக்கம் இல்லை என்றால் கற்றுக்கொள்ளுங்கள். அப்போதுதான் உனக்காக சிகரட்டையே தூக்கிப் போட்டுள்ளேன் என்று, நீங்கள் ஒரு உருக்கமான கவிதை சொல்லலாம். அவர்களும் உங்களைத் திருத்துவதற்கு உங்களிடம் ஏதாவது ஒரு கெட்ட பழக்கம் இருக்கவேண்டுமல்லவா?

7) எங்கெல்லாம் அழகுசாதன விற்பனை நிலையம் இருக்கின்றதோ அங்கெல்லாம் ஒரு கணக்கு ஆரம்பித்து வைத்துக்கொள்வது நல்லது. காதலிக்குப் பரிசுப் பொருட்களை வாங்கிக் கொடுத்தே உங்களுடைய அப்பாவின் காசை செலவுசெய்யவேண்டும் அல்லவா?

8) ஹோட்டலில் அதிகமாக வெங்காயம் கலந்த பிரைட் றைஸ் சாப்பிட்ட பின்னர், காதலியைப் பார்க்கப் போனீர்கள் என்றால், உங்க காதலுக்கு நீங்களே ஆப்பு வைத்துக்கொள்கின்றீர்கள் என்று அர்த்தம்.

9) தெரியுமோ இல்லையோ ஆங்கிலத்தில் பேசத் தெரிந்துகொள்வது மிக அவசியம். பயப்படாதீர்கள், சும்மா மூன்று தமிழ் வார்த்தைகளுக்கு நடுவில் I See, Like that, Actually இதெல்லாம் போட்டு பேசுவதற்குத் தெரிந்தால்போதும். இதிலேயே உங்களது காதலி பாதி அவுட்.

10) காசு இருக்கின்றதோ இல்லையோ, பேர்ஸினுள் சில, கடதாசிகளை மடித்து வைத்துக்கொள்ளுங்கள், அடிக்கடி அதை உங்கள் காதலிக்குக் காட்டுங்கள் (இது ஒரு சில சமயம் உங்களுக்கே ஆபத்தாகிவிடும்). செயலற்றுப்போய் யாராவது தூக்கியெறிந்த கிரடிட் கார்ட் இருந்தால், அதைப் பொறுக்கி எடுத்து உங்க பேர்ஸினுள் வைத்துக்கொள்ளுங்கள்.

11) அடடா, எல்லாவற்றையும் சொல்லிவிட்டு ரொம்ம்ம்ம்ம்ம்ம்ம்ப முக்கியமான ஒரு விடயத்தைச் சொல்ல மறந்துவிட்டேனே. என்ன பண்ணுவீர்களோ ஏது பண்ணுவீர்களோ தெரியாது... மாதத்துக்கு இரண்டாயிரம் ருபாய்க்கு கைத்தொலைபேசி றீலோட் காட் வாங்கி வைத்துக்கொள்ளுங்கள். முக்கியமான விடயம், தப்பித்தவறிக்கூட நீங்க மிஸ்கோல் கொடுக்கக்கூடாது.

இவற்றையெல்லாம் தவறாமல் பின்பற்றுவீர்களானால், ம்ம்ம்ம்ம்... நீங்களும் ஒரு காதல் மன்னன்தான்...




SONDERVERKAUF







Möbel Ferrari

Wässeristrasse 28

HINWIL Tel 044 931 20 40 Fax 044 931 20 49

www.moebel-ferrari.ch

Direkt-Kedit
– 6 Monate ohne Zins

இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் எண்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2011, பெப்ரவரி 13ஆம் திகதி வெளியிடப்பட்டது.